# வேத விசேஷம்.

கடவுள் அருளிய வேதத்துள் மனிதருடைய இரட்
சிப்புக்கடுத்த விசேஷமான போதகங்களையும்
அவைகளைத் திருட்டாந்தப்படுத்துவத
ற்கான சில வேத வாக்கியங்களையும்
எடுத்துக் காட்டியது.

PUBLISHED BY THE AMERICAN MISSION
JAFFNA.

American Mission Press,—Jaffna.
1840.

Digitized by Google

31,550.

Digitized by Google

# வேத விசேஷம்.

---

**1. தேவன் ஒருவர் இருக்கிறார்.**

என்னைத் தவிர உனக்கு வேறு தே
வர்கள் இல்லாமற் போகக்கடவது. (௨.
மோசே. ௨௰. ௩.) இஸ்ரவேலரே கேளு
ங்கள். நம்முடைய தேவனாகிய யெகோ
வா ஒன்றான யெகோவா. (௫. மோசே.
௬. ௪.) இஸ்ரவேலின் இராசனுமாய் அவ
னை மீட்கிற சேனைகளையுடைய யெகோ
வாவுமாகிய யெகோவா சொல்லுகிறது,
நான் ஆதி, நான் அந்தம், என்னையன்
றித் தேவன் இல்லை. நீங்கள் கலங்காமலும்
பயப்படாமலும் இருங்கள். அதுமுதற்
கொண்டு நான் அல்லவா அதை உங்களு
க்கு வெளிப்படுத்தி, முன் அறிவித்தே
ன், நீங்களே எனக்குச் சாட்சிகள், என்
னையன்றி ஒரு தேவன் உண்டா? வேறொ

Digitized by Google

ரு கல்மலை இல்லையே. ஒருவனையும் அறியேன். (ஏசாயா. ௪௪. அதி. ௬, ௮.) நானே யெகோவா வேறொருவன் இல்லை. என்னையன்றி ஒரு தேவன் இல்லை. என்னையன்றி ஒருவனுமில்லையென்று சூரியன் உதிக்கிற திசையிலும் அது அஸ்தமிக்கிற திசையிலுமுள்ள யாவரும் அறியும்படிக்கு, நீ என்னை அறியாதிருக்கையிலே, நான் உனக்குக் கச்சைகட்டினேன். யெகோவாவாகிய என்னையன்றி வேறொரு தேவன் இல்லை. (ஏசாயா. ௪௫. ௫, ௬.) விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைப் புசிக்கிறதைக் குறித்து நாம் அறிந்திருக்கிறதென்னவெனில், உலகத்தில் விக்கிரகமானது ஒன்றுமில்லை. அல்லாமலும் ஒருவரேயன்றி வேறொரு தேவனுமில்லை. வானத்திலேயும் பூமியிலேயுந் தேவர்கள் என்னப்பட்டவர்கள் உண்டு. இப்படி அநேக தேவர்களும் அநேக கர்த்தர்களும் உண்டாயிருந்தாலும், நமக்குப் பிதாவாகிய ஒரே தேவன் உண்டு. அவரில் இருந்து சகலமும் உண்டாயிருக்கின்றது. அவரிடத்தில் நாமும் இருக்கிறோ

Digitized by Google

ம். யேசுக்கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தா வும் நமக்குண்டு. அவரால் சகலமும் உண்டாயிருக்கின்றது. அவராலே நாமும் இருக்கிறோம். (க. கொரிந். அ. ச—சு.)

2. அவர் பிதாக்குமாரன் பரிசுத்தாவி என்னும் மூவராகியும் மூவரும் ஒரே தன்மையுள்ளவருந் தெய்வீக இலட்சணத்திற் சரிவந்தவருமாய் இருக்கிறார்.

தேவன் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாசத்துப் பறவைகளையும், மிருக செந்துக்களையும், பூமி அனைத்தையும், பூமியின் மேல் ஊருகிற சகலவித ஊர்வனவற்றையும் ஆளும்படிக்கு நம்முடைய சாயலாக நம்முடைய உருவத்தின் படியே மனிதரை உண்டாக்குவோமாகவென்றார். (க. மோசே. க. அதி. உசு.) இயேசுவானவர் ஞானஸ்நானம் பெற்றுச் சலத்தை விட்டேறி வந்தவுடனே இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. அல்லாமலும் பராபரனுடைய ஆவி புறாவைப் போல் இறங்கி அவர்மேல் வருகிறதைக்கண்டான். மேலும் இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன்

Digitized by Google

இவரிற் பிரியமாயிருக்கிறேனென்று வா
னத்தில் இருந்து சத்தம் உண்டாயிற்று.
(மத். ௩. அதி. ௰௬, ௰௭.) நீங்கள் புறப்
பட்டு உலகத்தார் எல்லாரையுஞ் சீஷராக்
கிப் பிதாக்குமாரன் பரிசுத்தாவியின் நா
மத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்
கொடுங்கள். (மத். உ அ. அதி. ௰௯.) ஆ
தியிலே வார்த்தை இருந்தது. அவ்வார்
த்தை பராபரனிடத்தில் இருந்தது. அல்
லாமலும் அவ்வார்த்தையே பராபரன்.
(யோவான். க. அதி. க.) குமாரனைக் குறி
த்தோ பராபரனே உமது சிம்மாசனம்
என்றென்றைக்குமுள்ளதாயிருக்கும். உ
ம்முடைய இராச்சியத்திலுள்ள செங்கோ
ல் செம்மையான செங்கோலாய் இரு
க்கிறது. (எபிரேயர். க. அதி. அ.)
பரமண்டலத்திலே பிதா, வார்த்தை, ப
ரிசுத்த ஆவியென்று இம்மூவருஞ் சாட்
சியிடுகிறார்கள். அம் மூவரும் ஒன்றாய் இ
ருக்கிறார்கள். (க. யோவான். ரு. அதி. எ.)
அப்பொழுது பேதுரு சொன்னது அ
னனியாவே நிலத்தின் விலைக்கிரயத்தி
ற் சில பணத்தை நீ மறைத்துவைத்துப்

Digitized by Google

பரிசுத்த ஆவியினிடத்திலே பொய்சொல்லும் படிக்குச் சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அது விற்கப் படாமல் இருந்த பொழுது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்ற பின்பு (அதின் கிரயம்)உன் அதிகாரத்தில் இருக்கவில்லையோ? அப்படியிருக்க என்னத்தினாலே நீ இந்தக் காரியத்தை உன் இருதயத்திலே வைத்தாய்? நீ மனிதரிடத்திலல்லப் பராபரனிடத்திலே பொய்சொன்னாயென்றான். (அப்போஸ். ரு. அதி. ௩, ௪.) தீர்க்கதரிசனமானது பூர்வத்திலே மனிதருடைய சித்தத்தினாலே வரவில்லையே. பராபரனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்தாவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (௨. பேது. க. அதி. உக.)

3. அவரே சருவத்தையும் சிருட்டித்துக் காப்பாற்றிவருகிறார்.

(க) சிருட்டிகரென்பதற்குத் திருட்டாந்தமாக,—

ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையுஞ் சிருட்டித்தார். (க.மோ. க. அதி. க.)வானங்களைச் சிருட்டித்து அவைகளை

Digitized by Google

விரித்துப் பூமியையும் அதிலே தோன்று கிறவைகளையும் பரப்பினவருமாய், அதிலுள்ள சனங்களுக்குச் சுவாசத்தையும் அதில் நடக்கிறவர்களுக்கு ஆவியையுங் கொடுக்கிறவருமாய் இருக்கிற தேவனாகிய யெகோவா சொல்லுகிறதாவது. (எசா. சஉ. ரு.) நானே பூமியை உண்டுபண்ணி அதின் மேல் இருக்கிற மனிதனைச் சிருட்டித்தேன். என்னுடைய கரங்களாலே வானங்களை விரித்து அவைகளின் சேனைகள் எல்லாவற்றிற்குங் கட்டளையிட்டேன். (எசா. சரு. ௰உ.) தேவரீர் ஒருவரே கர்த்தரானவர். தேவரீர் பரமண்டலங்களையும் பரமண்டலங்களின் பரமண்டலங்களையும் அவைகளுள் எல்லாச் சேனையையும் பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையுஞ் சமுத்திரங்களையும் அவைகளிலுள்ளதெல்லாவற்றையும் உண்டாக்கினீர். பரமண்டலங்களின் சேனைகள் உம்மைப் பணிந்துகொள்ளுகின்றன (நேகேமி. கூ. அ௲. கூ.) அப்போஸ்தலராகிய பருனபாவும் பவுலுவும் கூட்டத்திற்குள்ளே ஓடி மனிதர்களே என்னத்திற்கு இப்படிச் செய்கிறீர்கள்?

Digitized by Google

நாங்களும் உங்களைப் போலப் பாடுள்ள மனிதராய் இருந்து நீங்கள் இந்த வீணை தேவர்களைவிட்டு வானத்தையும் பூமியையுஞ் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கின சீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்ப வேண்டுமென்று உங்களுக்குச் சுவிசேஷமாய்ச் சொல்லுகிறோமென்றார்கள். (அப். ௰௪. ௰௫)

(உ.) காப்பாற்றுகிறவரென்பதற்குத் திருட்டாந்தமாக,—

மனுஷரைக் காப்பவரே, பாவஞ் செய்தேனானால் உமக்கு நான் செய்ய வேண்டியதென்ன? (யோப். ௭. அதி. உ௰.) அவைகளை எல்லாந் தேவரீர் உயிர்ப்பிக்கிறீர். (நேகேமியா. ௯. அதி. ௬.) உமது நீதி தேவ பருவதங்களைப் போலவும் உமது நியாயங்கள் மிகுந்த ஆழமாகவும் இருக்கின்றன. யெகோவாவே மனிதரையும் மிருகங்களையும் இரட்சிக்கிறீர். (சங். ௩௬. ௬.) உலகத்தையும் அதிலுள்ள யாவையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவரானதாற் கைகளாற் செய்யப்பட்ட கோவில்

Digitized by Google

ளில் வாசம்பண்ணுகிறதுமில்லை, யாதொன்று தமக்கு வேண்டுவதாக மனிதர்கைகளாற் பணிவிடைகொள்ளுகிறதுமில்லை. எல்லாருக்குஞ் சீவனையுஞ் சுவாசத்தையும் மற்ற யாவையும் அவர் கொடுத்திருக்கிறாரே. அவரால் நாம் பிழைக்கிறோம். அசைகிறோம். இருக்கிறோம். அதுபோல உங்களிற் சில புலவர்களும் அவருடைய வமிசத்தாராய் இருக்கிறோமென்று சொன்னார்கள். (அப்போஸ்தலர். மஎ. அதி. உச, உரு, உஅ.)

4. அவர் நித்தியம், மாறாமை, சருவ வல்லபம், சருவ வியாபகஞ், சருவஞ்ஞம், தன்மை, நீதி, பரிசுத்தம், சத்தியம் என்னும் இலட்சணங்களுள்ளவர்களாய் இருக்கிறார்.

(க) நித்தியமுள்ளவரென்பதற்குத் திருட்டாந்தமாக,—

பருவதங்களின் உற்பத்திக்கு முன்னும் பூலோகம் உண்டாகும் முன்னுந் தேவரீர் அநாதியாய் என்றுங் கத்தாவாய் இருக்கிறீர். (சங். கம. உ.) கத்தாவே தேவரீர் என்றென்றைக்கும் இருக்கிறீர். உம்மு

Digitized by Google

டைய ஆசனர் தலைமுறை தலைமுறையா
க நிலைநிற்கும். (யேரே. புல. ரு. ௰கூ.)
(உ) மாருதவரென்பதற்குத் திருட்டா
ந்தமாக,—
இருக்கிறவரும் இருந்தவரும் வ
ருகிறவருமாகிய சருவ வல்லமையுள்ள
கத்தர். நான் அல்பாவும் ஓமேகாவும் ஆ
தியும் அந்தமுமாய் இருக்கிறேனென்று
திருவுளம்பற்றுகிருர். (வெளிப்படுத்தின
விசேஷம். க. அதி. அ.) அன்றியும் யெ
கோவா என்னும் நான் மாருதிருக்கிறபடி
யினுலே, யாக்கோபின் புத்திரராகிய நீங்
கள் அழிக்கப்படவில்லை. (மல். ௩.௬.) எந்
த நல்ல ஈவும் நிறைவுள்ள எந்த வரமும்
உயரத்தினின்று சுடர்களின்பிதாவினுலே
வருகின்றன. அவருக்கு எவ்வளவாகிலும்
மாறுதலும் வேற்றுமையின் நிழலும் இ
ல்லை. (இயாக். க. அதி. ௰எ.) பூருவ
த்தில் தேவரீர் பூமியை அஸ்திவார
ப்படுத்தினீர். வானங்கள் உமது கைக
ளின் கிரியையாய் இருக்கின்றன. அவை
கள் அழிந்துபோம். தேவரீர் சாசுவத
மாய் இருப்பீர். அவைகள் எல்லாம் வஸ்திர

Digitized by Google

த்தைப் போலப் பழசாய்ப்போம். ஒரு உத்தரீயம் போல அவைகளை மாற்றுவீர்; அப்பொழுது மாறிப்போம். தேவரீர் ஒரு தன்மையாய் இருக்கிறீர். உமது ஆண்டுகளுக்கு முடிவில்லை. (சங். ௱௨, ௨௬-௨௭)

பொய் சொல்வதற்குத் தேவன் ஒரு மனிதனல்ல. மனம் மாறுதற்கு அவர் ஒரு மனித புத்திரனல்ல; அவர் சொன்னதைச் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்ததை உறுதியாக்காமல் இருப்பாரா? (௪. மோசே. ௨௩. அதி. ௰௯.)

(௬.) சருவ வல்லவரென்பதற்குத் திருட்டாந்தமாக,—

ஆபிராகாமுக்குத் தொண்ணூற்றொன்பது வயதான பொழுது, யெகோவா ஆபிரகாமுக்குப்பிரசன்னமாகி அவனுடனே, நான் சருவ வல்லமையுள்ள தேவன், நீ எனக்கு முன்பாக நெறியாய் நடந்துகொண்டு உத்தமனாயிருவென்றுசொன்னார். (௧. மோசே, ௰௭. ௧.) அப்பொழுது திரளான சனங்களுடைய சத்தம் போலவும் பெரு வெள்ள இரைச்சல் போலவும் பலத்த இடிமுழக்கம் போலவும் ஒரு சத்

Digitized by Google

தம் உண்டாகக்கேட்டேன். என்னவெ
ன்றால், சருவ வல்லமையுள்ள தேவனாகி
ய யெகோவா இராசரிக்கம்பண்ணுகிறார்.
ஆகையால் அல்லேலூயா. (வெளிப்படுத்
தின விசேஷம். ௰௯. அதி. ௬.) தேவன்
எந்தக் காரியத்தையுஞ் செய்ய வல்லவ
ரென்றார். (மத். ௰௯. அதி. ௨௬.)

(௪) சருவ வியாபகமுள்ளவரென்பத
ற்குத் திருட்டாந்தமாக,—

என் நடக்கையையும் என் படுக்கை
யையும் பரிசோதித்து அறிகிறீர். என் வ
ழிகள் எல்லாம் உமக்கு வழக்கமாய் இரு
க்கின்றன- தேவரீர் பிற்புறத்திலும் முற்
புறத்திலும் எங்கும் வியாபித்து என்னை
ச் சூழ்ந்து உமது கரத்தை என்மேல்
வைத்திருக்கிறீர். உமது ஆவிக்கு மறை
வாக எங்கே போவேன்? உமது முகத்
துக்கு மறைவாக எங்கே ஓடுவேன்? நான்
வானத்துக்கு ஏறினாலும், (அங்கே இரு
ப்பீர்.) நான் பாதாளத்திலே படுத்தாலும்,
(அங்கேயும் இருப்பீர்.) நான் சூரியோ
தயத்தின் சிறகுகளை எடுத்துக் கடலின் க
டைசியில் போய்த் தங்கினாலும், அங்கே

Digitized by Google

யும் உமது கை என்னை நடத்தும், உமது வலக்கரம் என்னைப் பிடிக்கும் (சங். ௱௩௯. ௯, ௰-ம்) நான் தூரத்தில் இருந்து பார்க்கிற யெகோவாவாயிராமற் சமீபத்தில் இருந்து பார்க்கிற யெகோவா தானென்று கர்த்தர் சொல்லுகிறார். தன்னை நான் காணாதிருக்கத்தக்கதாக ஒளிப்பிடங்களில் யாதொருத்தன் ஒளித்துக்கொள்ளக் கூடுமோவென்று கர்த்தர் சொல்லுகிறார். பரமண்டலங்களையும் பூலோகத்தையும் அல்லோ நான் நிரப்புகிறவனென்று கர்த்தர் சொல்லுகிறார். (யெரேமியா. ௨௩. ௨௩, ௨௪.) யெகோவாவுடைய கண்கள் எவ்விடத்திலும் இருந்து பொல்லாதவர்களையும் நல்லவர்களையும் நோக்குகின்றன. (நீதி. ௰௫. ௩ )

(௫) சருவஞானமுள்ளவரென்பதற்குத் திருட்டாந்தமாக,—

யெகோவாவே தேவரீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். நான் உளுக்காருகிறதையும் எழுந்திருக்கிறதையும் அறிந்திருக்கிறீர். என் சிந்தனையை ஆதிமுதல் உணருகிறீர். என் நாவு வசனிக்கும்மு

Digitized by Google

ன்னமே, யெகோவாவே நீர் அவைகள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர். இருளானது என்னை மூடிக்கொள்ளும் என்றாலும், இரவும் என்னைச் சூழப் பிரகாசமாய் இருக்கும். உமக்கு மறைவாக இருளும் (என்னை) அந்தகாரப்படுத்தாதிருக்கும். இராக்காலம் பகலைப்போல் பிரகாசமாய் இருக்கும். (உமக்கு) இருளும் ஒளியுஞ் சமம். (சங். ௱௩௯. ௧, ௨, ௪, ௰௧, ௰௨.) மனிதனுடைய வழிகள் யெகோவாவுடைய கண்களுக்கு முன்பாக இருக்கின்றனவே. அவனுடைய பாதைகள் யாவையும் அவர் நிறுத்துப் பார்க்கிறார். (நீதிமொழி. ரு. அதி. உக.) அவருக்கு முன்பாகத் தோன்றாதிருக்கிற சிருட்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிருவாணமாயும் வெளியரங்கமாயும் இருக்கின்றன. அவருக்கே நாங் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். (எபிரேயர். ௪. அதி. ௰௩.)

நமது இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால் நம்முடைய இருதயத்திலும் தேவன் பெரியவராய்

Digitized by Google

இருக்கிறாரென்றுஞ் சகலத்தையும் அறி
ந்திருக்கிறாரென்றும் நினைப்போமாக.
(க. யோவான். ௩. அதி. உய.) தேவரீர்
ஒருத்தர் எல்லா மனுப்புத்திரரின் இரு
தயத்தையும் அறிகிறீர். (இராசாக்களி
ன் க. புஸ்த. அ. ௩௯.) கர்த்தர் எல்லா இ
ருதயங்களையும் ஆராய்ந்து சிந்தனைகளி
ன் தோற்றுதலை எல்லாம் உணருகிறார்.
(நாளாகமத்தின். க. புஸ்த. உஅ. ௯.)
நட்சத்திரங்களைக் கணக்கிட்டு அவைக
ளின் எல்லாவற்றையும் பேர் பேராக
அழைக்கிறார். நம்முடைய ஆண்டவர் ம
கத்துவமுள்ளவருமாய் மிகுந்த பலமு
ள்ளவருமாய் இருக்கிறார். அவருடைய பு
த்திக்கு அளவில்லை. (சங்கீ. ா சஎ. சரு.)
அந்திகால முதலாய்ப் பராபரனுடைய
கிரியைகள் எல்லாம் அவருக்குத் தெரி
ந்திருக்கின்றன. (அப்போ. யரு. யஅ.)
உங்கள் தலையின் மயிர் எல்லாம் எண்ண
ப்பட்டிருக்கின்றது. (மத். ய. அதி. ௩ய.)
அவர்கள் சேர்ந்து இனியேற் சம்பவி
ப்பவைகளை நமக்கறிவிக்கட்டும். முத
லாவது நடப்பவைகள் இவைகளென்று

Digitized by Google

அவர்கள் அறிவிக்கட்டும். அப்பொழு
து நம்முடைய மனதை அவைகளின்
மேல் வைத்து அவைகள் நிறைவேறும்
வகையை அறிவோம்.— அல்லது பின்வ
ருங் காரியங்களை நாங் கேட்கும்படி செ
ய்யட்டும். பிற்காலத்தில் நடப்பவைகளை
யே நமக்கறிவியுங்கள். அப்பொழுது நீங்
கள் தேவர்களென்று அறிவோம். நன்மை
யையாகிலுந் தீமையையாகிலுஞ் செய்யு
ங்கள். அப்பொழுது நாங்கள் ஆச்சரியத்
தோடே பார்த்து ஏகமாய்ப் பயப்படு
வோம். (ஏசாயா. சக. அதி. உஉ, உங.)
எல்லாவற்றையும் பார்க்க இருதயமே தி
ருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாய் இரு
க்கின்றது. அதை அறிபவன் ஆர்? கர்த்தரா
கிய நாம் அவனுக்கும் அவன் வழிகளுக்கு
ம் அவன் செய்கைகளின் கனிகளுக்குந் தக்
கதைக் கொடுக்கும் படிக்கு இருதயத்தை
ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோ
தித்தறிகிறவருமாய் இருக்கிறோம். (எரே
மியாவின் தீர்க். மஎ. அதி. க, ம.) சன
ங்களில் மிருகக் குணமுள்ளவர்களே, நீ
ங்கள் உணருங்கள். புத்தியீனரே, எப்

Digitized by Google

பொழுது புத்திமான்களாவீர்கள்? கா தை உண்டாக்குகிறவர் கேளாரா? கண்ணை உருவாக்குகிறவர் காணாரா? புறத்தேசத்தாரைத் தண்டிக்கிறவர் (உங்களை) கடிந்துகொள்ள மாட்டாரா? மனிதனைப் போதிக்கிறவர் அவர் தான். (சங்கீ. ௯௪. அ—௰௧.) அவர் என் வழிகளைப் பார்த்து என் நடைகளை எல்லாம் எண்ணுகிறவர் அல்லவோ? (யோபு. ௩௧. அதி. ௪.)

(௩) நல்லவரென்பதற்குத் திருட்டாந்தமாக,—

யெகோவா நல்லவர், அவருடைய தயை என்றுமுள்ளது, ஆகையால் அவரைத் துதியுங்கள். (சங்கீ. ௱௩௯. ௧.) யெகோவாவே கிருபையும் இரக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த தயையுமுள்ளவர். யெகோவா யாவருக்கும் நல்லவர். அவருடைய இரக்கங்கள் அவருடைய கிரியைகள் எல்லாவற்றின் மேலும் உள்ளது. (சங். ௱௪௫. அ ௯.) அவர் நான் என்னுடைய நன்மைஎல்லாம் உனக்கு முன்பாகச் செல்லும்படி செய்து யெகோவாவின் நாமத்தை உனக்கு முன்பாகக் கூறி ஒருவன் மே

ற் கிருபையை வைக்க எனக்குச் சித்தமா
யிருந்தால், அவன்மேற் கிருபையை வைப்
பேன். ஒருவன் மேல் இரக்கம் வைக்க எ
னக்குச் சித்தமாயிருந்தால் அவன் மேல்
இரக்கமாய் இருப்பேனென்று சொன்ன
துமல்லாமல், யெகோவா இரக்கமுங் கி
ருபையும் நீடியசாந்தமும் மிகுந்த தயை
யும் உண்மையுமுள்ள தேவனாய் இருக்கி
றவர். அவர் ஆயிரந் தலைமுறைவரைக்குந்
தயை வைத்துக் காக்கிறவர். அக்கிரமத்
தையும் மீறுதலையும் பாவத்தையும் அவர்
பொறுக்கிறவர். (உ. மோ. ௩௩. ௰௮,
௰௯, ௩௪. ௬ ௭.) யெகோவா மனு
ஷபுத்திரருக்குத் தயையும் அற்புதங்க
ளையுஞ் செய்கிறதற்காக அவர்கள் அவ
ரைத் துதிக்கக் கடவார்கள். (சங்கீ.
௱௭. ௮) கர்த்தருடைய தயை நாடோ
றுமுள்ளது. (சங்கீ. ௫௨. ௧.) தேவன்
அன்பாய் இருக்கிறார். தேவனுடைய
ஒரே பேறான குமாரனாலே நாம் பி
ழைக்கும் படிக்கு அவரை இவ்வுலகத்
திலே அனுப்பினதினாலே தேவன் நம
து பேரிலே வைத்த அன்பு வெளிப்ப

Digitized by Google

ட்டது. (க. யோவான். ச. அதி. கூ.) பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதா பொல்லாதவர்கள் மேலும் நல்லவர்கள் மேலுந் தமது சூரியனை உதிக்கவும் நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யவும் பண்ணுகிறார். (மத்தேயு. ரு. அதி சரு.) தேவனாகிய ஒருவரே தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே. (மத்தேயு. ௰கூ. அதி. ௰எ.) ஆண்டவரே, இரக்கமுங் கிருபையும் நீடிய சாந்தமும் மிகுந்த தயையும் உண்மையுமுள்ள தேவனே. (சங்கீ. அகூ. ௰ரு.)

(ஏ) நீதியுள்ளவரென்பதற்குத் திருட்டாந்தமாக,—

பூமி முழுமைக்கும் நியாயாதிபதியானவர் நீதியைச் செலுத்தாதிருப்பாராவென்றான்? (க. மோசே. ௰அ. அதி. உரு.) யெகோவா இராசரிக்கம் பண்ணுகிறார். சனங்கள் நடுங்குவார்கள். இயாக்கோப்பிலே நியாயத்தையும் நீதியையுஞ் செய்தீர். (சங்கீ. கூகூ. க. ச.) நெருக்கப்பட்ட யாவருக்கும் யெகோவா நீதியும் நி

யாயமுஞ் செய்கிறார். (சங்கீ. ௱௬. ௬. ௱௰௧. ௱௯௭.) என்னுடைய வழிகள் செம்மையாய் இராதோ? உங்கள் வழிகள் அல்லோ செம்மையல்லாதிருக்கின்றன. (எசேக்கியேலின் தீர்க்க. ௰௮. அதி ௨௯.) யெகோவா தமது வழிகள் எல்லாவற்றிலேயும் நீதியுள்ளவருமாய்த் தமது கிரியைகள் எல்லாவற்றிலேயுந் தயையுள்ளவருமாய் இருக்கிறார். (சங்கீ ௱௪௫. ௰௭.) தேவனாகிய யெகோவா மெய்யாய் உம்முடைய நியாயத்தீர்ப்புக்கள் சத்தியமும் நீதியுமானவைகள். (வெளிப்படுத்தின விசேஷம். ௰௬. அதி. ௭.) அவருடைய நெறிகள் எல்லாம் நியாய நெறிகள். அவர் அக்கிரமமில்லாத சத்தியமுடைய தேவன். அவர் நீதியுஞ் செம்மையுமுள்ளவர். (௫. மோசே. ௩௨. அதி. ௪.)

(அ) பரிசுத்தரென்பதற்குத் திருட்டாந்தமாக,—

(அவர்களை) ஒருவரை ஒருவர் நோக்கிச் சேனைகளையுடைய யெகோவா பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தரென்று கூப்பிட்டார்கள். (எசாயா. ௬. அதி. ௩.)

Digitized by Google

நீ இஸ்ரவேற் சந்ததியாகிய சபையார் அனைவருக்குஞ் சொல்ல வேண்டியதென்னவெனில், உங்கள் தேவனாகிய யெகோவாவாய் இருக்கிற நானே பரிசுத்தராய் இருக்கிறபடியால் நீங்களும் பரிசுத்தராய் இருக்க வேண்டும். (௩. மோசே. ௰௯. அதி. உ.) சர்வ வல்லமையுள்ள தேவனாய் இருக்கிற கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தரென்று இரவும் பகலும் ஓய்வில்லாமற் சொல்லிக்கொள்ளுகிறவைகளுமாய் இருந்தன. (வெளிப். ௪. அதி. அ.) பொல்லாங்கைப் பார்க்க மாட்டாத சுத்தக் கண்ணே, தீவினையை நோக்கிக்கொண்டிருக்க மாட்டீரே. (ஆபகூ. க. ௰௩.) அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமாய் இருக்கின்றது. (சங். ௱௰௧. ௯.) இஸ்ரவேலரின் துதிகளையுடைய தேவரீர் பரிசுத்தர். (சங். உஉ. ௪.) கர்த்தாவே, ஆர் உமக்குப் பயப்படாமலும் உமது நாமத்தைத் துதியாமலும் இருக்கலாம்? என்னத்தினாலெனில், நீர் ஒருவரே பரிசுத்தமுள்ளவர். (வெளிப்படுத்தின விசேஷம். ௰ரு. அதி. ௪.)

Digitized by Google

(கூ) சத்தியமுள்ளவரென்பதற்குத் திருட்டாந்தமாக,—

யெகோவாவுடைய உண்மை என்றென்றைக்கும் உள்ளது. அல்லேலூயா. (சங்கீ. ராயஎ. உ.) தேவரீர் அப்படிக் கடிந்து பேசும் பொழுது நீதிபரராகவும் நியாயந் தீர்க்கும் பொழுது புனிதராகவும் இருப்பீரென்று எழுதியிருக்கிறபடி, மனிதர் யாவரும் பொய்யராயி இருந்தாலும், தேவன் சத்தியமுடையவரென்போமாக. (உரோ. ௩. அதி. ௪.)

5. அவர் மாத்திரமே வணங்கப்படத்தக்கவர்.

நான் உங்களுக்குச் சொன்ன யாவையுங் காத்துக்கொள்ளக் கடவீர்கள். மற்றத் தேவர்களுடைய பேரை நினையாதிருங்கள். அது உங்கள் வாயில் இருந்து புறப்படவுங் கூடாது. (உ. மோ. உ௩ அதி. ய௩.) யெகோவாவுக்கு மாத்திரமேயல்லாமல், வேறு தேவர்களுக்குப் பலியிடுகிறவன் அழிக்கப்பட வேண்டும். (உ. மோசே. உஉ. அதி. உய)

Digitized by Google

யெகோவாவுக்கு எரிச்சலானவரென்று பேர். அவர் எரிச்சலுள்ள தேவன், ஆகையால் அந்நிய தேவர்களை நீங்கள் தொழுதுகொள்ளக் கூடாது. (உ. மோ. ௩ச. ௰ச.) உங்கள் தேவனாகிய யெகோவாவை நீங்கள் மறந்து வேறு தேவர்களைப் பின்பற்றி அவர்களிடத்திற் சேவகம் பண்ணி அவர்களைத் தொழுதுகொள்வீர்களானால், நிச்சயமாய் அழிந்து போவீர்களென்று இன்று உங்களுக்குத் திடமான சாட்சியாய் அறிவிக்கிறேன். (ரு. மோ. அ. ௰கூ.) ஆகையால் உங்கள் இருதயம் வஞ்சிக்கப்படாமலும் நீங்கள் வழுவி அன்னிய தேவர்களிடத்திற் சேவகம்பண்ணித் தொழுதுகொள்ளாமலும் இருக்கும்படிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். (ரு. மோ. ௰க. ௰௬.) உங்களைச் சூழ்ந்திருக்குஞ் சனக்கூட்டங்களின் தேவர்களாகிய அன்னிய தேவர்களைப் பின்பற்றுதிருப்பீர்களாக. (பின்பற்றினால்) உங்கள் தேவனாகிய யெகோவா உங்களுக்குள்ளே எரிச்சலுள்ள தேவனானபடியினாலே அவருடைய கோபம் உங்களுக்கு விரோதமாக மூண்டு உங்

களைப் பூமியில் வையாமல் அழித்துப் போடும். (ரு. மோ. ா. அதி.௰௪, ௰௫.) இன்று நான் உங்களுக்குக் கட்டளையிடுகிற வசனங்கள் யாவையும் விட்டு நீங்கள் போய் வேறு தேவர்களிடத்திற் சேவகம் பண்ணும் படி வலது இடது புறமாக விலகாமல் இருங்கள். (ரு. மோசே. உ௮. அதி. ௰௪.) உங்களுக்குள்ளே சேஷிமாய் இருக்கிற இந்தச் சனக்கூட்டங்களுக்கு ஐக்கியமாய்ப் போகாமலும், அவர்களுடைய தேவர்களின் பேரை நினையாமலும், அவர்களின் மேலே ஆணையிட்டுக்கொள்ளாமலும், அவர்களிடத்தித் சேவகம்பண்ணாமலும், தொழுதுகொள்ளாமலும் இருக்கும் படிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். (யோசுவா. உ௩. அதி. எ.) கர்த்தர் இவர்களோடே உடம்படிக்கைபண்ணி இவர்களுக்குக் கற்பித்ததாவது, நீங்கள் வேறே தேவர்களுக்குப் பயப்படாமலும், அவர்களைப் பணிந்து கொள்ளாமலும், சேவியாமலும், அவர்களுக்குப் பலியிடாமலும், உங்களை மகா வல்லமையினாலும், நீட்டினபுய

த்திலும் எகிப்த்துத் தேசத்தில் இருந்து எறிவரப் பண்ணின கத்தருக்கே பயந்து அவரையே பணிந்துகொண்டு அவருக்கே பலியிடுங்கள். (உ. இரா. மஎ. ௩௫, ௩௬.) உங்களுக்குள்ளே வேறு தேவன் உண்டாயிருக்கக்கூடாது, அன்னிய தேவனை நமஸ்கரிக்கவுங்கூடாது. (சங். அக. கூ) அப்பொழுது யேசுவானவர் அவனை நோக்கி உனது தேவனாகிய கத்தரைத் தொழுதுகொண்டு அவரொருவருக்கே ஆராதனைசெய்வாயாகவென்று எழுதியிருக்கின்றதாகையால் சாத்தானே, அப்புறம் போவென்றார். (மத். ச. ம.) மனுஷன் மேலே நம்பிக்கையை வைத்துத் தசையைத் தன் புயமாக்கிக்கொண்டு கத்தரைவிட்டு மனம் விலகுகிற மனுஷன் சபிக்கப்பட்டவனென்று கத்தர் சொல்லுகிறார். கத்தர்மேலே நம்பிக்கையை வைத்துக் கத்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் ஆசீர்வதிக்கப்பட்டவன். (எரே. மஎ. ரு, எ. (யோவானாகிய நானே இவைகளைக்கண்டு கேட்டேன். நான் கேட்டுக் கண்ட

பொழுது இவைகளை எனக்குக் காண்பி த்த தூதனுடைய பாதங்களின் முன்பா கத் தொழுதுகொள்ள விழுந்தேன். அவ ன் என்னை நோக்கி நீ இப்படிச் செய்யா தபடிக்குப் பார். உன்னோடும் உன் சகோ தரராகிய தீர்க்கதரிசிகளோடும் இந்தப் புத்தகத்தின் வசனங்களைக் கைக்கொள் ளுகிறவர்களோடுங் கூட நானும் ஊழி யக்காரனாய் இருக்கிறேன். தேவனைத் தொழுதுகொள்ளென்றான். (வெளிப்படு த்தின விசேஷம். உஉ. அதி. அ, கூ.)

6. அவரை நாம் விக்கிரகத்தைக் கொ ண்டாவது சொரூபத்தைக் கொண்டாவ து வணங்கக் கூடியதல்ல.

உயர்ந்த வானத்திலுந் தாழ்ந்த பூ மியிலும் பூமியின் கீழ்ச் சலத்திலும் உ ண்டாயிருக்கிற வஸ்துகளுக்கு ஒப்பா ன ஒரு சித்திர சொரூபத்தையாகிலும் மற்றொரு விக்கிரகத்தையாகிலும் நீ உ னக்காக உண்டாக்கவும் அவைகளை நம ஸ்கரிக்கவும் சேவிக்கவுங் கூடாது. என் னத்தினாலெனில் உன் தேவனாகிய யெ கோவாவாய் இருக்கிற நான் எரிச்சலுள்ள

Digitized by Google

தேவனாய் இருந்து பிதாக்களுடைய அக்
கிரமத்தை எனக்குப் பகைசெய்கிற பிள்
ளைகளிடத்தில் மூன்று நாலு தலைமுறைப
ரியந்தம் விசாரித்துத் தண்டிக்கிறவராய்
இருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்
து என் கட்டளைகளைக் கைக்கொள்ளுகி
றவர்களுக்கு ஆயிரந் தலைமுறை பரியந்த
ந் தயைசெய்கிறவராய் இருக்கிறேன்.
(௨. மோசே. ௨௰. அதி. ௪, ௫, ௬.) வா
ர்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்
காகச் செய்யக்கூடாது. (௨. மோ. ௩௪.
௰௭.) விக்கிரகங்களை நோக்காமலும் வார்
ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு
உண்டாக்கிக்கொள்ளாமலும் இருப்பீர்
களாக. (௩. மோசே. ௰௯. அதி. ௪.) யெ
கோவாவாகிய நான் உங்கள் தேவனாகை
யால், நீங்கள் தொழுதுகொள்ளும் பொ
ருட்டு உங்களுக்காகச் சொரூபங்களை
வார்ப்பியாமலும், உங்களுக்கு முன்பாக
க் கற்சிலையையாவது மரவிக்கிரகத்தை
யாவது நாட்டாமலுஞ், சித்திர சொரூப
முள்ள கல்லை உங்கள் தேசத்தில் வையா
மலும் இருப்பீர்களாக. (௩. மோ. ௨௬. ௧.)

Digitized by Google

யெகோவா ஓரேப்பிலே அக்கினியின் நடு
வில்இருந்து உங்களுடனே பேசினநாளி
லே நீங்கள் ஒரு சுரூபத்தையுங் காணவி
ல்லை. ஆகையால் நீங்கள் உங்களைக் கெ
டுத்துக்கொள்ளும் படி ஆணுக்கும் பெ
ண்ணுக்கும் பூமியிலுள்ள ஒரு மிருகத்தி
ற்கும், ஆகாசத்திற் பறக்கிற ஒரு பட்சிக்
கும், பூமியிலே ஊருகிறவைகளில் ஒன்
றிற்கும், பூமியின் கீழ்ச் சலத்திலுள்ள ஒ
ரு மச்சத்திற்கும் உருபங்களாகிய சுரூப
ங்கள் யாவற்றிற்கும் ஒப்பனையான விக்கிர
கத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்
கும், நீங்கள் உங்கள் கண்களை வானத்தி
ன் கண் உயர்த்தி உங்கள்தேவனாகிய யெ
கோவா வானத்தின் கீழெங்குமுள்ள ச
னக்கூட்டங்கள் எல்லாவற்றிற்கும் பகு
த்திட்ட வானத்தின் மிகுந்த சேனையாகி
ய சூரியன், சந்திரன், நட்சத்திரங்களையுந்
நோக்கி, அவைகளைத் தொழுதுசேவிக்கி
றதற்கு இணங்காதபடிக்கும், உங்கள் ஆ
த்துமாக்களுக்காக மிகவும் எச்சரிக்கை
யாய் இருங்கள். (௫. மோ. ௪. ௰௫, ௰௯.)
உங்கள் தேவனாகிய யெகோவாவைப் ப

Digitized by Google

கைக்கிற சிலையை உங்களுக்காக நிறுத்தாமலும் இருப்பீர்களாக. (௫. மோ. ௰௬. ௨௨.) நீங்கள் யெகோவாவை விட்டு அன்னிய தேவர்களிடத்திற் சேவகம்பண்ணினால், அவர் உங்களுக்கு நன்மை செய்ததற்குப்பின்பு திரும்பிக்கொண்டு உங்களுக்குத் தீமையைச் செய்து உங்களை அழித்துப்போடுவார் என்றான். (யோசு. ௨௪. ௨௰.) நாம் தேவனுடைய வம்சத்தாராயிருக்க, தெய்வம் மனிதருடைய சித்திர வேலையினாலுந் தோற்றுதலினாலும் பொன், வெள்ளி, கல், இவைகளாற் செய்யப்பட்டதற்கு ஒப்பாயிருக்கின்றதென்று நாம் நினைக்கலாகாது. (அப்போஸ்தலர். ௰௭. அதி. ௨௯.) எனக்குப் பிரியமானவர்களே விக்கிரகாராதனைக்கு விலகியோடுவீர்களாக. (௧. கொரி. அதி. ௰. ௰௪.)

7. விக்கிரகாராதனையை தேவன் மிகவும் வெறுக்கிறார்.

அவர்களுடைய தேவர்களின் சுரூபங்களை அக்கினியினாற் சுட்டெரிக்கவேண்டும். அவைகளாற் சிக்கிக்கொள்ளா

Digitized by Google

த படிக்கு நீங்கள் அவைகளிலுள்ள வெள்ளியையும் பொன்னையும் இச்சியாமலும், அவற்றை எடுத்துக்கொள்ளாமலும் இருப்பீர்களாக. அவைகள் உங்கள் தேவனாகிய யெகோவாவுக்கு அருவருப்பானவைகளே. ஆகையால் அவைகளைப் போல நீங்களுஞ் சாபமடையும்படிக்கு அருவருப்பானதை உங்கள் வீட்டிலே கொண்டுபோகாதிருப்பீர்களாக. அது சாபத்துக்கு உட்பட்டபடியால் சீச்சீயென்று சொல்லி மிகவும் அதை அருவருக்கக் கடவீர்கள். (௫. மோ. எ. உ௫. உ௬.)

கெட்ட சந்ததியாகிய மனிதர்கள் உங்களில் இருந்து புறப்பட்டு உங்களுக்குத் தெரியாத வேறு தேவர்களைச் சேவிப்போம் வாருங்களென்று தங்கள்பட்டினத்தின் குடிகளிடத்தில் வந்து சொன்னார்களென்கிற செய்தியை உங்கள் தேவனாகிய யெகோவா உங்களுக்கு வாசஸ்தலங்களாகக் கொடுத்த பட்டினங்களில் ஒன்றைக் குறித்துக் கேள்விப்படும் பொழுது, நீங்கள் நன்றாய் விசாரித்துக் கேட்டு ஆராய்ந்து அப்படிப்பட்ட அருவரு

Digitized by Google

ப்பான காரியம் உங்களுக்குள்ளே நடந்தது மெய்தான் நிச்சயந்தானென்று கண்டால், அந்தப் பட்டிணத்துக் குடிகள் முழுவதையும் உங்கள் கத்திமுனையினாலே வெட்டி, அதையும் அதிலுள்ள சமஸ்தத்தையும் அதின் மிருகங்களையுங் கத்திமுனையினாலே சங்கரித்து, அந்தப்பட்டிணத்திற்கொள்ளையிட்ட பொருள் யாவையும் அதினுடைய நடுவீதியிலே கூட்டி உங்கள் தேவனாகிய யெகோவாவுக்கென்று அந்தப்பட்டிணத்தையுங் கொள்ளையிடப்பட்ட அந்தப் பொருள் யாவையும் அக்கினியாற் சுட்டெரிக்கக்கடவீர்கள். அது மறுபடியும் உண்டாக்கப்படாமல் எப்பொழுதும் மண்மேடாய் இருக்கக் கடவது. மேலுஞ்சங்காரத்துக்குநியமிக்கப்பட்ட அந்தப் பட்டிணத்தில் ஏதாகிலும் உங்கள் கையில் ஒட்டாதிருப்பதாக. இப்படிக்கு நான் இன்று உங்களுக்குக் கொடுக்கிற உங்கள் தேவனாகிய யெகோவாவுடைய கட்டளைகள் யாவையும் நீங்கள் பேணிக்கொண்டு, உங்கள் தேவனாகிய யெகோவாவுடைய பார்வைக்குச் செம்மையானதை

Digitized by Google

ச் செய்யும்படி அவருடைய சத்தத்துக்குச் செவிகொடுப்பீர்களானால் யெகோவா தமது உக்கிரமான கோபத்தைத் தணிந்து உங்களுக்குத் தயையைக் காண்பித்து, இரக்கமாய் இருந்து தாம் உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டுச் சொன்னபடி உங்களைப் பெருகப்பண்ணுவார். (௫. மோ. ௰௩. ௰௭.-௰௮.) உங்கள் தேவனாகிய யெகோவா உங்களுக்குக் கொடுக்கும் வாசல்களில் ஒன்றில் ஓர் ஆணாவது பெண்ணாவது என்னுடைய கட்டளைக்கு விரோதமாய்ச் சூரியன் சந்திரன் முதலான வானத்துச் சேனைகளாகிய வேறு தேவர்களிடத்திற் சேவகம்பண்ணி, அவர்களைத் தொழுதுகொண்டு, இப்படி உங்கள் தேவனாகிய யெகோவாவுடைய உடன்படிக்கையை மீறி அவருடைய திருப்பார்வைக்குப் பொல்லாங்கானதைச் செய்யக் கண்டு, அதை உங்களுக்கு அறிவிக்க, நீங்கள் கேள்விப்பட்டவுடனே அதை நன்றாய் விசாரணை பண்ண வேண்டும். அருவருப்பான அந்த நடக்கை மெய்யாய் நிச்சயமாய் இஸ்ரவேலருக்குள்ளே நடந்ததென்று அ

Digitized by Google

ந்தால், அப்பொழுது அந்தப் பொல்லாத காரியத்தைச் செய்த அந்த ஆணையாவது பெண்ணையாவது உங்கள் வாசல்களுக்கு வெளியே கொண்டுபோய், அவர்கள் சாகும் படிக்குக் கல்லெறியக் கடவீர்கள். (௫. மோசே. ௰௭. அதி. ௨-௫) தொழிலாளிகளுடைய கைவேலையுமாய் யெகோவாவுக்கு மூனபாக அருவருப்புமாய் இருக்கிற சித்திர சொரூபத்தையும் மற்றொரு விக்கிரகத்தையுஞ் செய்து ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. அதற்குப் பிரத்தியுத்தாரமாகச் சனங்கள் எல்லாரும் ஆமன் என்னக் கடவார்கள். (௫. மோசே. ௨௭. அதி. ௰௫.)

உங்கள் இருதயம் வேறுபடுகிறதினாலே நீங்கள் இதற்குச் செவிகொடாமல் இழுப்புண்டு போய் வேறு தேவர்களைத் தொழுது அவர்களிடத்திற் சேவகம்பண்ணுவீர்களானால், யோர்தானைக் கடந்து நீங்கள் சுதந்தரிக்கும்படி போகிறதேசத்திலே நீடிய நாள் இராமல் நிச்சயமாய் அழிந்து போவீர்களென்று இன்று உங்க

Digitized by Google

ளுக்கு அறிவிக்கிறேன்.(ரு. மோசே. ௩௰.
௰௭, ௰௮.) கர்த்தர் இஸ்ரவேற் புத்திர
ருக்கு முன்பாகத் துரத்திவிட்ட எமோ
ரியர் செய்தபடி எல்லாம் அவன் விக்கிர
கங்களைப் பின்பற்றி போய் மகா அருவ
ருப்பாய் நடந்துகொண்டான். (௧. இரா.
௨௧. ௨௬.) உயர்ந்த சகல மேட்டின்
மேலும் பச்சையான சகல மரத்தின் கீ
ழுந் தங்களுக்குச் சிலைகளையும் விக்கிரகத்
தோப்புகளையும் நிறுத்திக், கர்த்தர் தங்க
ளைவிட்டுக் குடிவிலகின சாதிகளைப் போ
லே அங்கே சகல மேடைகளிலுந் தூப
ங் காட்டிக் கர்த்தருக்குக் கோபம் உண்
டாக்கப் பொல்லாத காரியங்களைச் செ
ய்து, இப்படிச் செய்யாதேயுங்களென்
று கர்த்தர் தங்களை விலக்கச் சொன்ன
நரகலான தேவர்களைச் சேவித்துக்கொ
ண்டிருந்தார்கள். (௨. இரா. ௰௭. ௰-
௰௨.) நாம் பகைக்கிற இந்த அருவருப்
பான காரியத்தைச் செய்யாதேயுங்க
ளென்று நாம் தீர்க்கதரிசிகளாகிய நம்மு
டைய ஊழியக்காரரைக் கொண்டு உங்க
ளுக்கு ஏற்கனவே சொல்லி அனுப்பிச்

Digitized by Google

கொண்டே இருந்தோம். ஆனாலும் அவர்
கள் அன்னிய தேவர்களுக்குத் தூபங் கா
ட்டாத படிக்குத் தங்கள் பொல்லாங்கை
விட்டுத் திரும்புவதற்குக் கேளாமலுந் த
ங்கள் செவிகளைச் சாயாமலும் போ
னார்கள். ஆகையால் நம்முடைய உக்கிர
மும் நம்முடைய கோபமும் ஊற்றப்ப
ட்டு யூதேயாவின் பட்டணங்களிலும் எரு
சலேமின் வீதிகளிலும் பற்றியெரிந்தது.
அதுகள் இந்நாளில் இருக்கிறபடி வனாந்
தரமும் பாழுமாய்ப் போயின. இப்
போது இஸ்ரவேலின் தேவனாகிய சேனை
களுடைய தேவனான யெகோவாச் சொல்
லுகிறதாவது, நீங்கள் யூதாவில் ஒருத்தரை
யும் உங்களுக்கு மீதியாக்காமல் உங்களி
ல் புருஷனையும், இஸ்திரியையும், பிள்ளை
யையும், பாலகனையும் முதலற்றுப்போக
ப் பண்ணும்படிக்கு உங்கள் கைகளின் கி
ரியைகளாலே நமக்குக் கோபமுண்டாகிற
பெரிய பொல்லாங்கை உங்கள் ஆத்துமங்
களுக்கு விரோதமாகச் செய்து உங்களை
த் தானே வேரற்றுப்போகப் பண்ணுவ
ற்காகவும், பூமியினுடைய சகல சாதிகளு

Digitized by Google

க்குள்ளும் சாபமும் நிந்தையுமாவதற்கா கவும், நீங்கள் தங்கியிருக்க வந்த எகிப்த்துத் தேசத்திலே அன்னிய தேவர்களுக்குத் தூபங்காட்டுவானேன்? (எரே. ச. சச. அ.) அவர்கள் பராபரனை அறிந்தும், அவரைப் பராபரனென்று புகழாமலும் தோத்திரஞ் செய்யாமலுமிருந்து தங்கள் யோசனைகளினாலே வீணரானார்கள். புத்தியில்லாத அவர்களுடைய இருதயம் இருள் அடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லிப் பயித்தியகாரராகி அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனிதர், பறவைகள், மிருகங்கள், ஊரிவனவென்பவைகளுடைய சொரூபமாக மாற்றினார்கள். அதற்காக அவர்கள் தங்கள் இருதயங்களின் இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களைக் கனவீனப்படுத்தத்தக்கதாகத் தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனைக் குறித்திருந்த சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, என்றென்றைக்குந் துதிக்கப்படத்தக்க சிருஷ்டிகரைப் பார்க்கிலும்


Digitized by Google

சிருஷ்டியைத் தொழுதுகொண்டு சேவித்தபடியினாலே, தேவனை அவர்களை இகழ்ச்சியுள்ள ஆசைகளுக்கு ஒப்புக்கொடுத்தார். அந்தப்படி அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்திற்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். (உரோ. க. உ௪—உ௬.)

அநியாயக்காரர் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியாமலிருக்கிறீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள். வேசிக்கள்ளரும் விக்கிரகாராதனைக்காரரும் விபசாரக்காரருஞ், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும், தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை. (க. கொரி. ௬. ௯,௰.)

அவர்களுக்குப் பின்னே மூன்றாந் தூதன் வந்து மிகுந்த சத்தத்தோடே சொன்னதாவது, மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் நமஸ்காரம் பண்ணித் தன் நெற்றியிலாவது தன் கையிலேயாவது அடையாளத்தைத் தரித்துக்கொள்ளுகிறவ

Digitized by Google

ன் எவனோ அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிர இரசத்தைக் குடித்துப் பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டிக்கு முன்பாகவும் அக்கினியாலுங் கந்தகத்தாலும் வாதிக்கப்படுவான். (வெளிப்படுத்தின விசேஷம். ௰௪. அதி. ௯, ௰.) பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருக்கப்படத்தக்கவர்களும், கொலைபாதகரும், வேசிமார்க்கருஞ், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரருஞ், சகலவிதமான பொய்யருமானவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியுங் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்களென்றார். (வெளிப்படுத்தல். ௨௧. அதி. ௮.) (அப்பொழுது) விக்கிரகங்களை நம்பி அவைகளை நோக்கி எங்கள் தேவர்கள் என்று சொல்லுகிறவர்கள் பின்னிட்டு, மிகவும் வெட்கப்படுவார்கள் (எசாயா. ௪௨. அதி. ௰௭.)

8. விக்கிரகாராதனை மிகவும் வீணாய் இருக்கின்றது.

Digitized by Google

அப்பொழுது எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளுடனே நீங்கள் ஒரு காளையைத் தெரிந்துகொண்டு, அதை ஆயத்தம்பண்ணி மூந்திக்கொள்ளுங்கள். ஏனெனில் நீங்கள் அனேகர் பிற்பாடு நெருப்புப் போடாமல் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுங்களென்றான். அவன் தங்களுக்குக் கொடுத்த காளையை அவர்கள் வாங்கி ஆயத்தம்பண்ணி பாகாலே, எங்களுக்குக் கேள்விகொடுமென்று காலமே துவக்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். ஆனாலும் ஒரு சத்தமும் மறுவுத்தரங்கொடுக்கிறவனும் இல்லாதிருந்தது. அவர்கள் பண்ணின பலிபீடத்துக்கெதிரே நடனமாய்க் குதித்தார்கள். மத்தியானத்திலேயென்றால் எலியா அவர்களைப் பரிகாசம்பண்ணி, உரத்த சத்தமாய்க்கூப்பிடுங்கள். ஏனெனில் அவன் தேவன், அவன் தியானத்தில் இருக்கிறான். அல்லவென்று அலுவலாய் இருக்கிறான், அல்லவென்று வழிப்பிரயாணத்திலிருக்கிறான், அல்லவென்று அவனை எழுப்பிவிட வேண்டியதாய்

Digitized by Google

த் தூங்குகிறானுக்குமென்றான். அவர்கள் உரத்தசத்தமாய்க்கூப்பிட்டுத் தங்கள்வழ க்கத்தின்படியே இரத்தந் தங்கள் மேலே வடியுமட்டுங் கத்திகளாலும் ஊசிகளா லுந் தங்களைக் கீறிக்கொண்டார்கள். மத் தியான நேரம் பின்னிட்டுப்போனபிற்பா டு அந்திக்காணிக்கை செலுத்தப்படும் நேரம் மட்டாகச் சன்னதஞ் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் ஒரு சத் தம் வாராமலும் மறுவுத்தாரங்கொடுக்கி றவனும் கவனிக்கிறவனும் இல்லாதிருந்த து. (க. இராசா. ௰அ.உ௫—உ௯.)

சொரூபங்களை வணங்கி விக்கிரகங்களை க்குறித்துப் பெருமைபாராட்டினவர்களெல்லா ரும் வெட்கப்படுகிறார்கள். தூதர்கள் எல் லாரும் அவரைத் தொழுதுகொள்ளுகி றார்கள். (சங். ௯௭. எ.) புறத்தேசத் தாருடைய விக்கிரகங்கள் வெள்ளியுமா ய்ப் பொன்னுமாய் மனிதருடைய கை வேலையுமாய் இருக்கின்றன. அவைக ளுக்கு வாய் இருந்தும் பேசாது, கண் கள் இருந்துங் காணாது, காதுகள் இருந் துங் கேளாது. அவைகளுடைய வாய்க

ற் சுவாசம் இல்லை. (சங். ௱௩௫. ௰௫-௰௭.)
கைகள் இருந்தும் பரிசியாது, கால்க
ள் இருந்தும் நடவாது, தங்கள் தொண்
டையினால் சத்தமிடாது, அவைகளைப் ப
ண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிற
யாவரும் அவைகளைப் போலவே இருக்
கிறார்கள். (சங். ௱௰௫. ௭, ௮.)
விக்கிரகத்தை உண்டாக்குகிற யாவரும்
வீணராய் இருக்கிறார்கள். அவர்களுக்கு வி
ருப்பமானவைகள் ஒன்றுக்கும் உதவா
து. அவர்களே (அதற்குச்) சாட்சிகள். அவ
ர்கள் வெட்கப்படத்தக்தாகக் காணமலு
ம் அறியாமலும் இருக்கிறார்களே. ஒன்று
க்கும் உதவாத தேவனை உருவாக்கி, விக்
கிரகத்தை வார்க்கிறவனே அப்படிப்பட்
டவன். கேள், அவனுடைய கூட்டாளிகள்
எல்லாரும் வெட்கப்படுவார்கள். அவர்க
ள் மனிதர்களில்த் தோன்றிய தொழிலா
ளிகள் அல்லவா? அவர்கள் எல்லாருங் கூ
டிக்கொண்டு நின்றாலும், ஏகமாய்த் திகை
த்து வெட்கப்படுவார்கள். (கொல்லன்
ஒரு துண்டு இரும்பை) அறுத்து அதை
த் தழலிலே காய்ச்சிச் சுத்தியல்களால் அ

Digitized by Google

தை உருவேறப்படுத்தித் தன் புயத்தின் பலத்தினால் அதைச் செப்பனிட்டுவரு கையில், அவன் பட்டினிகொண்டு பெல னற்றுப்போகிறான். தண்ணீர் குடியா மல் இளைப்படைகிறான். தச்சன் (மரத்தி னிடத்தில்) நூலைப் பிடித்துச் செம் மண் ணினால் அதற்குக் குறிபோட்டு அதை இ ழைப்புளியினால் இழைத்து அளவூசியால் அதற்குக் குறிபோட்டு ஒரு கோவிலில் வாசமாய் இருக்கும்படிக்கு அதை ஒரு புருஷனுக்கொப்பாக அழகுள்ள உருவாக் குகிறான். அவன் தனக்காகக் கேதுரு மர ங்களை வெட்டி, ஒருபுனக மரத்தையும் ஒரு கருவாலிய மரத்தையும் எடுத்துக் கொண்டு, காட்டுமரங்களிற் பலமானதை த் தனக்காகத் தெரிந்துகொண்டு கேது ரு மரத்தை நாட்டுகிறான். மழையினால் அ து பெரிதாகின்றது. மனிதன் அவற்றால் நெருப்புண்டாக்குவான். அல்லது அவை களை எடுத்துக்குளிர்காய்ந்து கொள்ளுவா ன். அல்லது நெருப்பை மூட்டி அப்பஞ் சுடுவான் (அவற்றாலே) ஒரு தேவனையும் உண்டுபண்ணி அதைத் தொழுதுகொள்

றுகிறான். ஒரு விக்கிரகத்தை அதினாற் செய்து அதற்கு முன்பாக வணக்கமாய் விழுகிறான். அந்த மரத்திலே ஒரு பங்கை அடுப்பிலே எரிக்கிறான். ஒரு பங்கினால் இறைச்சியைச் சமைத்துச் சாப்பிடுகிறானே. அல்லது பொரிக்க வேண்டியதைப் பொரித்துத் திருத்தியாய்ச் சாப்பிடுகிறான். குளிருங் காய்ந்துகொண்டு ஆகா, வெம்மையடைந்தேன். நெருப்பைக் கண்டேனென்கிறான். அதின் சேஷமான பங்கைத் தேவனாகவுந் தனக்கு விக்கிரகமாகவுஞ் செய்து, அதற்கு முன்பாக விழுந்து அதைத் தொழுது நீ என் தேவன், ஆகையால் என்னை இரட்சிக்க வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணுகிறான். அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள். அவர்களுடைய கண்கள் காணாதபடிக்கும் அவர்களுடைய இருதயம் உணராதபடிக்கும் அவைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதில் ஒரு பங்கை அடுப்பில் எரித்தேன். அதின் தணலின்மேல் அப்பத்தையுஞ் சுட்டு இறைச்சியையும் பொரித்துப் புசித்தேன். அதின் சேஷமான பங்கை நான் அருவரு

Digitized by Google

க்கப்படத்தக்க விக்கிரகமாக்கலாமா? ஒரு மரத்தின் துண்டை வணங்கலாமாவென்று சொல்லுகிறதற்கு அவன் மனதுக்குள்ளே யோசனை வராது, அம்மாத்திரம் அறிவும் புத்தியும் அவனுக்கில்லை. அவன் சாம்பலிலே மேய்கிறான், வஞ்சிக்கப்பட்ட இருதயம் அவனை வழுவப்பண்ணிற்று. அதினாலே அவன் தன் ஆத்துமாவை இரட்சிக்கவும் என் வலதுகையிலே பொய் இல்லையாவென்று சவலைப்படவும்மாட்டான். (ஏசா. ௪௪. அதி. ௯-௨௰.) பையில் இருக்கிற பொன்னைக் கொட்டி வெள்ளியைத் தராசிலே நிறுத்துக் கூலிக்காகத் தட்டானுடனே பேசிக்கொள்ளுகிறார்கள். அவன் அதை ஒரு தேவனாக்குகிறான். அதற்கு முன்பாக விழுந்து தொழுதுகொள்ளுகிறார்கள். அதைத் தோளின்மேல் ஏற்றிச் சுமந்து தகுதியான ஸ்தலத்திலே அதை வைக்கிறார்கள். அங்கே அது நிற்கும் தன் இடத்தைவிட்டு நீங்காது. ஒருவன் அதை நோக்கிக் கூப்பிட்டால் அது மாறுத்தரவுகொடாது. இடுக்கண்ணில் இருந்து அவனை இரட்சியாது. (ஏசாயா.

Digitized by Google

சசு. அதி. கூ. எ.) நீ உனக்குண்டுபண்ணின தேவர்கள் எங்கே? உன் தீங்குகாலத்தில் உன்னை இரட்சிக்குமோவென்று அவைகள் எழும்பட்டும். ஏனெனில் யூதாவே உன் பட்டினங்களின் இலக்கமும் உன் தேவர்களின் இலக்கமுஞ் சரி. (யெரேமியாவின் தீர்க். உ. அதி. உஅ.) சனசதளங்களின் பிரமாணங்கள் மாய்கையாய் இருக்கின்றன. அதேதென்றால் காட்டில் ஒருமரத்தை வெட்டுகிறார்கள். அதிலே தச்சன் கைகளில் இருக்கிறவாய்ச்சியாலே வேலை செயய்ப்படும். வெள்ளியினாலும் பொன்னினாலும் அதை நேர்த்தியாக்கி அது ஆடாதபடிக்கு அதை ஆணிகளாலுஞ் சுத்தியல்களாலும் உரமாக்குகிறார்கள். அவைகள் பனைமரத்தைப் போலக் கெட்டியாய் இருக்கும். அவைகள் பேச மாட்டாது. அவைகள் நடக்க மாட்டாததினாலே சுமக்கப்பட வேண்டும். அவைகளுக்குப் பயப்படாதிருங்கள். ஏனெனில் தீமைசெய்ய மாட்டாது. நன்மைசெய்வதும் அவைகளில் இல்லையென்கிறார். (எரேமி. ம. அதி. கூ-ரு.) சித்திரகாரனுக்கு அவன் செ

Digitized by Google

ப்பணிட்ட சொரூபமும், ஊமையான தேவர்களை உண்டுபண்ணித் தான் உருவாக்கின சொரூபத்தை நம்பினவனுக்கு அந்த வார்க்கப்பட்டதும் பொய்ப்போதகம்பண்ணுகிறதுமான விக்கிரகமும் என்னத்துக்கு உதவும்? மரத்தைப் பார்த்து விழியென்றும் ஊமையான கல்லைப் பார்த்து எழும்பென்றுஞ் சொல்லுகிறவனுக்கையோ! அது போதிக்குமோ? இதோ அது பொன்னும் வெள்ளியுமான தகடு அடித்திருக்கின்றது. அதின் உள்ளத்திலே ஒரு ஆவியும் இல்லை. (ஆபக்கூ. உ. அதி. ௰அ. ௰௯.)

9. விக்கிரகாராதனை பூலோகத்தை விட்டு அகற்றப்பட்டு, அதற்குப் பதிலாக யெகோவாவையும் கிறிஸ்துவையும் வணங்கும் வணக்கம் இஸ்தாபிக்கப்படும்.

யெகோவாமாத்திரம் அந்நாளிலே உயர்ந்திருப்பார். விக்கிரகங்கள் முழுவதும் ஒழிந்துபோம். பூமியை நடுங்கப்பண்ணும்படி யெகோவா எழும்பும்பொழுது அவர் கொடுக்கும் பயத்தினாலும் அவருடைய மகிமையின் பிரகாசத்தினாலுங் கல்ம

Digitized by Google

ல்களின் குகைகளிலேயும் பூமியின் வெ
டிப்புகளிலேயும் புகுந்துகொள்ளுவார்
கள். பூமியை நடுங்கப் பண்ணும்படிக்
கு யெகோவா எழும்பும் அக்காலத்திலே
அவர் கொடுக்கும் பயத்தினாலும், அவரு
டைய மகிமையின் பிரகாசத்தினாலும் கல்
மலைகளின் வெடிப்புகளிலேயுங் குன்று
களின் சந்துகளிலேயும் புகுந்துகொள்ளு
ம்படிக்கு, மனிதனானவன் தான் தொழு
துகொள்ளும்படிக்கு செய்திருந்த வெள்
ளிவிக்கிரகங்களையும், பொன் விக்கிரகங்க
ளையும் மூஞ்சூறுகளுக்குந் துருஞ்சில்க
ளுக்கும் எறிந்துபோடுவான். சூரியன் உதி
க்கிற திசை தொடங்கி அது அஸ்தமிக்கிற
திசை வரைக்கும் எனது நாமம் புறத்தே
சத்தாருக்குள்ளே பெரிதாய் இருக்கும்.
எனது நாமம் புறத்தேசத்தாருக்குள்ளே
பெரிதாயிருப்பதால் சகல இடங்களிலே
யும் எனது நாமத்துக்கு மகத்துவமுஞ்
சுத்தமான காணிக்கையுஞ் செலுத்தப்படு
மென்றார். (மல். ௨. ௰௧.) அதினாலே தேவ
ன் அவரை மிகவும் உயர்த்தி, பரமண்டல
த்திலும் பூமண்டலத்திலுங் கீழ்லோகத்தி

Digitized by Google

றுமுள்ள யாவும் யேசுவின் நாமத்தைத் தொழுது முழந்தாட் படியிடும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்குத் துதி உண்டாக யேசுக்கிறிஸ்து கத்தரென்று நாவுகள் யாவும் அறிக்கையிடும்படிக்கும் சகல நாமங்களுக்கு மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார். (பிலிப்பியர். ௨. அதி. ௭— ௧௧.) கடைசிக் காலத்தில் சம்பவிப்பதென்னவெனில், தேவனுடைய ஆலயமுள்ள பருவதம் மற்றப் பருவதங்களின் தலையாகத் திடப்பட்டுக் குன்றுகளின் மேலே உயரும். உலகத்தார் எல்லாரும் அதற்கு ஓடுவார்கள். திரளான சனக்கூட்டங்கள் ஒருவரை ஒருவர் நோக்கி யெகோவாவுடைய பருவதத்தின்மேலுள்ள யாக்கோபினுடைய தேவாலயத்துக்குப் போகக் கடவோம். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார். நாம் அவருடைய பாதைகளில் நடக்கக் கடவோம் வாருங்களென்பார்கள். என்னத்தினாலெனில் வேதம் சீயோனிலும் தேவனுடைய பட்டணம் எருசலேமிலும் இருந்து புறப்படும். (ஏசா. ௨. ௨, ௩.)



Digitized by Google

இராத்திரியில் எனக்குண்டான தரிசனையி லே நான் பார்த்துக்கொள்ளுகையில், ம னிதகுமாரனைப் போன்ற ஒருவர் வான த்தின்மேகங்களோடே வருகிறவராயிருந் தார். அவர் பூரண ஆயுளையுடையவரிட த்திற் சென்று அவருக்குமுன்பாகச் சே ரப்பண்ணப்பட்டார்.—சகல சனக்கூ ட்டத்தாரும் வமிசத்தாரும் பாஷைக்கா ரரும் அவரிடத்தில் ஊழியஞ்செய்யும்ப டி அவருக்கே அதிகாரமும், கனமுஞ், சுயாதீனமுங் கொடுக்கப்பட்டன. அவரு டைய அதிகாரம் மாற்றப்படாத நித்தி ய அதிகாரமுமாய் அவருடைய இராச்சி யம் அழியாததாயும் இருக்கின்றது.-வா னத்தின் கீழெங்குமுள்ள இராச்சியங்களி ன் இராசரிக்கமும், ஆளுகையும், மகத்து வமும் உன்னதமானவருடைய பரிசுத்த வான்களாகிய சனங்களுக்குக் கொடுக் கப்படும். அவருடைய இராச்சியமே நித்தியமான இராச்சியம். அதிகாரங்கள் யாவும் அவரிடத்தில் ஊழியம்பண்ணி அ வருக்குக் கீழ்ப்படியுமென்றான். (தா னியேல். எ. அதி. யங, யச, உஎ.) அன்

Digitized by Google

றியும் இந்த இராசாக்களுடைய நாட்களி
ல் பரமண்டலத்தின் தேவன் ஒருக்காலு
ம் அழியாத ஒரு இராச்சியத்தை எழும்
பப்பண்ணுவார். இந்த இராச்சியம் வே
றே சனத்திற்கு விட்டு வைக்கப்படாது.
தானாக ஒருகல்லு மலையில் இருந்து பே
யர்ந்துருண்டு வந்து இரும்பையும் வெ
ண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளி
யையும் பொன்னையும் நொருக்கினது.
இது அந்த இராச்சியங்கள் எல்லாவற்றை
யும் நொருக்கி முடித்துப்போட்டுத் தா
ன் மாத்திரம் என்றென்றைக்கும் நிற்கு
ம். (தானியேல். உ. அதி. சச.)

10. தேவன் தம்முடைய சிருட்டி
கள் தம்மில் மேலான அன்புகூரவும் அ
வர்கள் தங்களைப் போலத் தங்கள் அய
லவர்களை நேசிக்கவும் வேண்டுமென்று
ஒரு பிரமாணங்கொடுத்திருக்கிறார்.

உங்கள் நிறைந்த இருதயத்தினாலும்
நிறைந்த ஆத்துமாவினாலும் நிறைந்த தி
ராணியினாலும் உங்கள் தேவனாகிய யெ
கோவாவினிடத்தில் அன்புகூருவீர்களாக.
(ரு. மோசே. சு. அதி. ரு.) இப்போது இ

Digitized by Google

ஸ்ரவேலரே உங்கள் தேவனாகிய யெகோ
வா உங்களிடத்தில் என்னத்தைக் கேட்
கிறார்? உங்களுக்கு நன்மை உண்டாகும்
படி நீங்கள் அவருக்குப் பயந்து அவரு
டைய வழிகள் எல்லாவற்றிலேயும் நடந்
து அவரிடத்தில் அன்புகூர்ந்து உங்கள்
தேவனாயிருக்கிற யெகோவாவுக்கு உங்க
ள் நிறைந்த இருதயத்தினாலும் உங்கள் நி
றைந்த ஆத்துமாவினாலுந் தொண்டுசெ
ய்து, இன்று நான் உங்களுக்குக் கொடுக்
கிற அவருடைய கட்டளைகளையும் பிரமா
ணங்களையுங் கைக்கொண்டு நடக்க வேண்
டுமென்பதையேயல்லாமல் வேறேதை உ
ங்கள் தேவனாகிய யெகோவா உங்களிடத்
தித் கேட்கிறார்? (௫. மோ. ௰. ௰௨, ௰௩.)
உன்னுடைய சனக்கூட்டத்தாரிடத்திற்
பழிவாங்காமலும் கோபம் வையாமலும்
உன்மேலுள்ள அன்பு போலவே பிறன்
மேலும் அன்பாய் இருக்கக்கடவாய். நா
னே யெகோவா (௩. மோசே. ௰௯. அதி.
௰௮.) அவர்களில் நியாயசாஸ்திரி ஒரு
வன் அவரைச் சோதிக்கும் படிக்கு போ
தகரே, வேதத்தில் எது பிரதானமான

Digitized by Google

கற்பனையாய் இருக்கின்றதென்று கேட்டான். யேசுவானவர் சொன்னது உன்தேவனாகிய கர்த்தரில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூர்வாயாகவென்பது முதலாவது பிரதானமான கற்பனையாய் இருக்கின்றது. (மத். உஉ. ௩௫-௩௮.) அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கைச் செய்யாது. ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறதாய் இருக்கின்றது. (உரோ. ௰௩. ௰.)

**11.** அவர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்காதபடி கட்டளைபண்ணியிருக்கிறார்.

உன்தேவனாகிய யெகோவாவுடைய நாமத்தை வீணாய் வழங்காதிருப்பாயாக. யெகோவா தம்முடைய நாமத்தை வீணாய் வழங்குகிறவனைத் தண்டியாமல்விடார். (உ. மோசே. உ௰. அதி. ௭.) எனது திருநாமத்தைக்கொண்டு பொய்யாணையிடாமலும் இருந்து இப்படி உங்கள் தேவனுடைய நாமத்தை இகழ்ச்சிபண்ணாமலும் இருப்பீர்களாக. நானே தேவன். (௩.

Digitized by Google

மோசே. யக. அதி. யஉ.) வீணானதையு
ம் பொய்யான வசனிப்பையும் எனக்
குத் தூரமாக்கும். அல்லாமலும் நான்
பரிபூரணமடைந்து, உம்மை மறுத்து
யெகோவா ஆரென்று (இகழ்ச்சி) சொ
ல்லாதபடிக்குந் தரித்திரப்பட்டுத் திரு
டி, என் தேவனுடைய நாமத்தைத் தூஷ
ணியாதபடிக்குந் தரித்திரத்தையும் ஐசு
வரியத்தையும் எனக்குக் கொடாமல் என
க்குத் தகுதியான ஆகாரத்தைத் தந்து
என்னைக் காப்பாற்றியருளும். (நீதிமொ
ழிகள். ருய. அதி. அ. க.)

12. ஏழு நாளில் ஒரு நாளைப் பரிசுத்த
மாய் ஆசரிக்கும்படியாக தேவன் நிய
மித்திருக்கிறார்.

தேவனானவர் தான் செய்யுங் கிரியை
யை ஏழு நாளுக்குள்ளே முடித்தார்.
அவர் சகல கிரியைகளையுஞ் செய்தபின்
ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். தேவ
ன் தான் செய்யுங் கிரியைகள் எல்லாவற்
றையும் முடித்தபின் அந்த ஏழாம் நாளி
லே ஓய்ந்திருந்தபடியினாலே அந்த நாளை
ஆசீர்வதித்துப் பரிசுத்தமாக்கினார். (க.

மோசே. உ. அதி. உ, ௩.) ஒய்வுநாளை ப்பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக ஆறுநாளும் நீ வேலைசெய்து உன் கிரியை கள் யாவையும் நடத்துவாயாக. ஏழாம் நாள் உன் தேவனாகிய யெகோவாவுடைய ஒய்வுநாள், யெகோவா வானத்தையும் பூமியையுஞ் சமூத்திரத்தையும் அவைக ளிலுள்ளயாவையும் ஆறு நாளைக்குள்ளே உண்டாக்கி ஏழாம் நாளிலே ஒய்ந்திருந் து ஒய்வுநாளை ஆசீர்வதித்து அதைப்ப ரிசுத்தமாக்கினபடியினாலே, நீயானாலு ம், உன் குமாரனானாலும், உன் குமா ரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலு ம், உன் வேலைக்காரியானாலும், உன் மி ருகஜீவனானாலும்,உன் வாசல்களில் இருக்கி ற பரதேசியானாலும், அதிலே யாதொரு வேலையையுஞ் செய்யக் கூடாது. (உ. மோ. உ௰. அதி. அ,—௰க.)ஒய்வுநாள் உ ங்களுக்குள்ளே பரிசுத்தமாய் இருக்க வே ண்டும். ஆதலால் அதை ஆசரித்துக் காத் துக்கொள்வீர்களாக. அதின் பரிசுத்தங் கு லைப்பண்ணினவன் நிச்சயமாய்ச் சா வான். அதிலே வேலைசெய்கிறவனுந் -

ன் சனக்கூட்டத்தில் இராதபடி அறுக்கப்படுவான். ஆறுநாளும் வேலை செய்யவேண்டும். ஏழாம் நாள் ஓய்வுநாளாயிருக்கின்றது. அது யெகோவாவுக்குப் பரிசுத்தமானது. ஓய்வுநாளிலே வேலை செய்கிற யாவரும் நிச்சயமாய்ச் சாவார்கள். (உ. மோசே. ௩௧. அதி. ௰௪, ௰௫.) இப்படிச் செய்கிறமனிதனும் இதையேபற்றிக்கொண்டு ஓய்வுநாள் அசுசிப்படாதபடிக்கு அதைக் காத்து ஒரு பொல்லாங்கையுஞ் செய்யாதபடிக்குத் தன் கையைக் காத்துக்கொண்டிருக்கிற மனிதபுத்திரனுமானவன் பாக்கியவானென்கிறார். (ஏசா. ௫௬. அதி. உ.) என்னுடைய பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளிலே உன் இஷ்டத்தொழிலைச் செய்யாதபடிக்கு நீ உன் கால்களைத் திருப்பிக்கொண்டு, ஓய்வுநாளைச் சந்தோஷநாளென்றும் யெகோவாவுடைய பரிசுத்த நாளை மகிமையுள்ளதென்றுஞ் சொல்லி, உன்னுடைய வழிகளில் நடவாதபடிக்கும் உன் இஷ்டத்தொழிலைச் செய்யாதபடிக்குந் (தகாத) வார்த்தைகளைப் பேசாதபடிக்கும் அந்தநாளைக் கனஞ்செய்

Digitized by Google

து வந்தால், அப்பொழுது நீ யெகோவாவைக் குறித்துச் சந்தோஷிப்படுவாய். நீ பூமியின் உயரமான ஸ்தலங்களில் ஏறி இருக்கும்படிக்கும் உன் தகப்பனாகிய யாக்கோபுக்குரிய சுதந்திரத்தை அநுபவிக்கும் படிக்குஞ் செய்வேனென்று யெகோவாவினுடைய திருவாய் அருளிச் செய்கின்றது. (எசாயா. ௫௮. அதி. ௰௩, ௰௪.) ஆறு நாள் உன் வேலையைச் செய்து ஏழாம் நாளிலே உன் மாடுங் கழுதையும் இளைப்பாறும் படியாகவும் உனக்கடிமையானவனும் அன்னியனும் விடாய்தீரும் படியாயும் ஓய்ந்திருப்பாயாக. (௨. மோசே. ௨௩. அதி. ௰௨.) ஆறு நாள் வேலை செய்தபின்பு ஏழாம் நாள் ஓய்வுநாளாய் இருக்கவேண்டும். அதிலே சபை பரிசுத்தமாய்க் கூடி வரவேண்டும். அதிலே ஒரு வேலையையுஞ் செய்யக் கூடாது. அது உங்கள் வாசஸ்தலங்கள் யாவற்றிலுந் தேவனுக்கேற்ற ஓய்வுநாளாய் இருப்பதாக. (௩. மோசே. ௨௩. அதி. ௩.) அந்த நாட்களில் நான் யூதாவிலே ஓய்வுநாளில் ஆலைகளை மிதிக்கிற சிலரையுங்

Digitized by Google

கழுதைகளின்மேல் ஏற்றின தானியப் பொதிகளைக் கொண்டுவருகிற சிலரை யும் ஓய்வுநாளிலே எருசலேமுக்குக் கொண்டுவரப்படுகிற திவியதாட்சப்பழா சம், திவியதாட்சப்பழங்கள், அத்திப்பழ ங்கள் முதலானவைகளின் பல பல சுமை களையுங் கண்டு, அவர்கள் தின் பண்டங்க ளை விற்கிற நாளிலே திடச் சாட்சியாய் அவர்களைக் கடிந்துகொண்டேன். மீன் களையுஞ் சகலவித சரக்கையுங் கொண் டுவந்து, ஓய்வுநாளிலே யூத புத்திரருக் கும் எருசலேமிலும் விற்கிற சில திறிய ரும் உள்ளே குடியிருந்தார்கள். ஆகையா ல் நான் யூதாவின் பெரியவர்களோ டே வழக்காடி நீங்கள் ஓய்வுநாளைப் ப ரிசுத்த குலைச்சலாக்குகிற இந்தப் பொல் லாத செய்கை என்ன! உங்கள் பிதாக் கள் இப்படிச்செய்ததினாலே எங்கள் தே வன் எங்கள் மேலும் இந்தப் பட்டின த்தின் மேலும் இந்தத் தீங்கை எல்லா ம் வரப்பண்ணினதில்லையோ! நீங்களோ வென்றால் ஓய்வுநாளைப் பரிசுத்தகுலைச்ச லாக்குகிறதினால் இஸ்ரவேலின்மேல் இரு

Digitized by Google

க்கிற உக்கிரத்தை வர்த்திக்கப்பண்ணு
கிறீர்களென்று அவர்களுக்குச் சொன்
னேன். ஆகையால் ஓய்வுநாளுக்கு முன்
னே எருசலேமின் பட்டின வாசல்க
ளுக்கு நிழற்படுகிற போது, நான் கத
வுகளைப் பூட்டவும், ஓய்வுநாட் கழியுமட்
டும் அவைகளைத் திறவாதிருக்கவும் வே
ண்டுமென்று சொல்லி, ஓய்வுநாளிலே ஒ
ருசுமையும் உள்ளே வராதபடிக்கு வாசல்
கள் அண்டையிலே என் வேலைக்காரரிலே
சிலரை நிறுத்தினேன். அப்போது வர்
த்தகருஞ் சகலவித சரக்குவிற்கிறவர்க
ளும் இரண்டொரு தரம் எருசலேமுக்
குப் பிறம்பே இராத்தங்கினார்கள். அப்
போது நான் அவர்களைத் திடச்சாட்சி
யாய்க் கடிந்துகொண்டு நீங்கள் அலங்க
த்தண்டையிலே இராத்தங்குகிறதென்ன?
நீங்கள் இன்னும் ஒரு தரம் அப்படிச்
செய்தால் உங்கள் மேலே கைகளைப்
போடுவேனென்று அவர்களோடே சொ
ன்னேன். அந்தக் காலந்துவக்கி அவர்கள்
ஓய்வுநாளில் வராதிருந்தார்கள். (நேகே.
௰௩. அதி. ௰௫—உக.)

Digitized by Google

13. தேவன் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்குக் கீழமையும்படி சற்பிக்கிறார். உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் வாழ்நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையுந் தாயையுங் கனம்பண்ணுவாயாக. (௨. மோசே. ௨௰. அதி. ௰௨.) தன் தகப்பனையாவது தன் தாயையாவது சாவ அடிக்கிறவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படவேண்டும். தன்னுடைய தகப்பனையாவது தாயையாவது சபிக்கிறவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படவேண்டும். (௨. மோசே. ௨௧. அதி. ௰௫, ௰௭.) பற்சேபாள் அதோனியாவுக்காக இராசாவாகிய சாலோமோனோடே பேச அவனண்டைக்குட் பிரவேசித்தாள். அப்போது இராசா எழுந்திருந்து அவளுக்கெதிர்க்கொண்டுபோய் அவளை வணங்கி, தன் ஆசனத்தின் மேல் உளுக்கார்ந்து இராசாவின்தாயார் தன் வலது புறமாக உளுக்கார அவளுக்கொரு ஆசனத்தை வைப்பித்தான். (இராசா. ௧. புஸ். ௨. அதி. ௰௯.) என் மகனே, உன் தகப்பன் சொல்லுகிற

Digitized by Google

புத்தியைக் கேள், உன் தாயினுடைய பிரமாணத்தை விட்டு விடாதிருப்பாயாக. அவைகள் உன் தலைக்கு நேர்த்தியான முடியுமாய் உன் கழுத்துக்குப் பதக்கங்களுமாய் இருக்குமே. (நீதிமொழி. க. அதி. அ, கூ.) என் மகனே, நீ உன் தகப்பனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு உன் தாயின் பிரமாணத்தைக் கைவிடாதிருப்பாயாக. (நீதிமொழி. சு. அதி. உ௰.) புத்தியீனன் தன் தகப்பனுடைய கண்டிப்பை அசட்டைபண்ணுகிறான். கடிந்துகொள்ளுதலைக் காத்துக்கொள்ளுகிறவன் கருத்துள்ளவனுவான். (நீதிமொழி. ௰ரு. அதி. ரு.) (தன்) தகப்பனைக் கெடுக்கிறவன் (தன்) தாயைத் துரத்துகிறான். அந்தப் பிள்ளை இலச்சையுண்டாக்கி வெட்கங்கெட்டவனுய் இருக்கிறான். (நீதிமொ. ௰கூ. அதி. உசு.) தன் தகப்பனையுந் தாயையுந் தூஷிணிக்கிறவனுடைய தீபங் காரிருளிலே அவிந்துபோம். (நீதிமொழி. உ௰. அதி. உ௰.) உன்னைப் பெற்ற தகப்பனுடைய சொல்லைக் கேள், உன் தாய் விருத்தாப்பியமாய் இருக்கும் பொ



Digitized by Google

ழூது அவனை அசட்டை பண்ணதிரு: நீதிமானுடைய தகப்பன் மிகவுங் களிகூருவான், ஞானியைப் பெற்றவன் அவனாலே மகிழுவான். ஆகையால் உன் தகப்பனும் உன் தாயும் மகிழ்ச்சியாய் இருக்கும்படியாயும் உன்னைப் பெற்றவள் களிகூரும்படியாயுஞ் செய். (நீதிமொழி. உ௩. அதி. உஉ. உச, உரு.) தகப்பனைப் பரிகாசம்பண்ணித் தாய்க்குக் கீழ்ப்பணிய அசட்டைசெய்கிற கண்ணை நீர்க் காக்கைகள் பிடுங்கும். கழுகின் குஞ்சுகளுந் தின்னும். (நீதிமொ. ௩௰. அதி. ௰௭.)

இரேகாபியருடைய வீட்டாருக்கோவென்றால் எரேமியா சொன்னதாவது, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளுடைய கத்தர் சொல்லுகிறதேதெனில் நீங்கள் உங்கள் தகப்பனாகிய யோனதாபின் கற்பனைக்குக் கீழ்ப்படிந்து அவனுடைய கற்பனைகளை எல்லாங் கைக்கொண்டு அவன் உங்களுக்குக் கற்பித்தபடி எல்லாஞ் செய்துவந்தபடியினாலே, சகல நாட்களிலும் நமக்கு முனபாக நிற்கத்தக்க புருஷின் இரேகாபின் குமாரனாகி

Digitized by Google

ய யோனதாபுக்கில்லாமற் போவதில்லை
யென்று இஸ்ரவேலின் தேவனாகிய சே
னைகளையுடைய கத்தர் சொல்லுகிறாரென்
றான். (எரேமியாவின் தீர்க்கதரிசனம்.
௩௫. அதி. ௰௮, ௰௯.) பிள்ளைகளே, கத்
தருக்குள் உங்களைப் பெற்றவர்களுக்குக்
கீழ்ப்படுங்கள், அதுவே நியாயமாய் இரு
க்கின்றது. உனக்கு நன்மை உண்டாயிருக்
கும்படிக்கும் பூமியிலே உன் வாழ்நாள்
மிகுதியாய் இருக்கும்படிக்கும் உன் தக
ப்பனையும் உன் தாயையுங் கனம்பண்ணு
வாயாகவென்பதே வாக்குத்தத்தமுள்ள
முதலாங் கற்பனையாய் இருக்கின்றது. (எ
பேசி. ௬. அதி. ௧-௩.) பிள்ளைகளே, உங்
களைப் பெற்றவர்களுக்கு எவ்விதத்திலுங்
கீழ்ப்பட்டிருங்கள். அதுவே தேவனுக்
குப்பிரியமாய் இருக்கின்றது. (கொலோ.
௩. அதி. ௨௰.)

14. கொலைசெய்ய வேண்டாமென்று கற்பிக்கிறார்.

பின்பு காயீன் தன் சகோதரனாகிய ஆ
பேலுடனே பேசிக் கொண்டான். அவ
ர்கள் வெளியிலே இருந்த பொழுது காயீ

Digitized by Google

ன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு
விரோதமாய் எழும்பி அவனைக் கொலை
செய்தான். அப்பொழுது யெகோவா கா
யீனை நோக்கி, உன் சகோதரனாகிய ஆபே
ல் எங்கேயென்றார்? அதற்கு அவன் என
க்குத் தெரியாது. என் சகோதரனுக்கு
நான் காவலாளியாவென்றான். அப்பொ
ழுது அவர், என்ன செய்தாய்? உன் சகோ
தரனுடைய இரத்தம் பூமியில் இருந்து எ
ன்னை நோக்கிச் சத்தமிட்டுக்கொண்டி
ருக்கின்றது. இப்பொழுது உன் சகோ
தரனுடைய இரத்தத்தை உன் கையிலே
வாங்கிக் கொள்ளும்படி தன் வாயைத்
திறந்த இந்த நிலத்திலே நீ இராதபடிக்
குச் சபிக்கப்பட்டிருக்கிறாய். (எப்படி
என்றால்) நீ நிலத்திற் பயிரிடுகிற பொழு
து அது தன்பலனை உனக்குக் கொடாது.
நீ பூமியிலே நிலையற்றவனுமாய் அலை
கிறவனுமாய் இருப்பாயென்றார். அப்
பொழுது காயீன் யெகோவாவுடனே எ
ன் அக்கிரமம் மன்னிக்கப்படக் கூடாத
படிக்கு மிகுந்திருக்கின்றது. இதோ இ
ன்று என்னை இந்தத் தேசத்தை விட்டு

Digitized by Google

த் தூரத்திவிடுகிறீர். தேவரீருடைய சந்நிதானத்துக்கு விலகி மறைந்து பூமியிலே நிலையற்றவனுமாய் அலைகிறவனுமாயிருப்பேன். என்னைக் காணும் யாவனும் என்னைக் கொலைசெய்வானேயென்றான். அதற்கு யெகோவா, காயீனாகிய உன்னைக் கொல்லுகிறவன் எவனோ அவன் மேல் ஏழு பழி தங்குமென்று சொல்லிக் காயீனை எவன் கண்டாலும் அவனைக் கொல்லாத படிக்கு யெகோவா அவனுக்கு ஓர் அடையாளத்தை அனுக்கிரகித்தார். (க. மோசே. ச. அதி. அ-டுரு.) மேலும் உங்கள் உயிராயிருக்கிற உங்கள் உதிரத்துக்காகப் பழிவாங்குவேன். சீவசெந்துகளிடத்திலும் அவனவனுக்கடுத்த பிறனிடத்திலும் மனிதனுடைய உயிருக்காகப் பழிவாங்குவேன். மேலுந் தேவனவர் தமது சாயலாக மனிதனைச் செய்தபடியால் மனிதனுடைய இரத்தத்தைச் சிந்துகிறவன் எவனோ அவனுடைய இரத்தம் மனிதனாலே சிந்தப்படக் கடவது. (க. மோசே. கூ. அதி. ரு, சு) ஒருவன் அகங்காரத்தோடே வந்

து ஒருவனைக் கபடமாய்க் கொலைசெய்தால் என் பீடத்தருகே இருந்தாலும், அவனைப் பிடித்துக்கொண்டு கொலைசெய்ய வேண்டும். ஒருவன் தனக்கு அடிமைப்பட்டவனை அல்லது அடிமைப்பட்டவளைக் கோலினால் அடிக்க அவர்கள் அவன் கையின் கீழ்ச் செத்துப்போனால், பழிக்குப் பழி வாங்கப்பட வேண்டும். ஒரு மாடு நெடுகிலும் முட்டுகிறதாயும் அதினுடைய எசமானுக்கு அது அறிவிக்கப்பட்டதாயும் இருந்தால் அவன் அதைப் பத்திரம் பண்ணாததினாலே, அது ஓர் ஆணையாவது பெண்ணையாவது கொன்று போடும் பொழுது, மாடுங் கல்லெறியப்பட்டுச் சாக வேண்டும். அதினுடைய எசமானுங் கொலைசெய்யப்பட வேண்டும். (உ. மோசே. உக. ௰௪, உ௰, உ௯.) ஒருவன் இரும்பாற் செய்த ஆயுதத்தினால் ஒருவனை வெட்டினதினாலே அவன் செத்தால், அவன் கொலைபாதகனாய் இருப்பான். அந்தக் கொலைபாதகன் நிச்சயமாய்க் கொலையுண்ணக்கடவன். அல்லது ஒருவனைக் கொன்றுபோடத்தக்க கல்லை ஒருவன்

Digitized by Google

எடுத்து ஒருவன் மேல் எறிந்ததினாலே அவன் செத்தால், அவன் கொலைபாதகனாய் இருப்பான். அந்தக் கொலைபாதகன் நிச்சயமாய்க் கொலையுண்ணக் கடவன். அல்லது ஒருவனைக்கொன்றுபோடத்தக்க மரத்தாற் செய்த ஆயுதத்தை ஒருவன் எடுத்து ஒருவனை அடித்ததினாலே அவன் செத்தால், அவன் கொலைபாதகனாய் இருப்பான். அந்தக் கொலைபாதகன் நிச்சயமாய்க் கொலையுண்ணக் கடவன். இரத்தப் பழி வாங்க வேண்டியவனே கொலைபாதகனைக்கொன்றுபோடலாம். ஒருவன் குரோதத்தால் ஒருவனை விழத்தள்ளினதினாலே யாவது மனதறிய அவன்மேல் யாதாகிலும் எய்ததினாலேயாவது அவனைப் பகைத்துத் தன் கையினாலே அடித்ததினாலே யாவது அவன் செத்தால், அடித்தவன் நிச்சயமாய்க் கொலையுண்ணக் கடவன். அவன் கொலைபாதகன். இரத்தப்பழிவாங்குகிறவன் அந்தக்கொலைபாதகனைச் சந்திக்கிற பொழுது கொன்றுபோடலாம். எவனாகிலும் ஒரு மனிதனைக் கொன்றால் அப்பொழுது சாட்சிகளுடைய வாக்கு

Digitized by Google

மூலத்தின்படியே அந்தக் கொலைபாதக னைக் கொலைசெய்யக் கடவார்கள். ஒரே ஒரு சாட்சியைக் கொண்டு (மாத்திரம்) ஒரு மனிதன் சாகும்படி செய்யக் கூடா து. மேலுஞ் சாகும்படி குற்றஞ் சும ந்த கொலைபாதகனுடைய பிராணனை மீட்பதற்கானபொருளை நீங்கள் வாங்கக் கூடாது. அவன் நிச்சயமாய்க் கொலை செய்யபடவேண்டும். உங்கள் தேசத்தை இகழ்ச்சிப்படுத்தாதிருப்பீர்களாக. அப் படிப்பட்ட இரத்தந் தேசத்தை இகழ்ச் சிப்படுத்துமே. தேசத்திற் சிந்தின இர த்தத்துக்காக இரத்தஞ் சிந்திப்போட்ட வனுடைய இரத்தத்தினாலே மாத்திரம் அல்லது வேறொன்றாலுந் தேசத்தின் பா வத்தை நிவிர்த்திசெய்யக் கூடாது (௪. மோசே ௩௫. அதி. ௰௬-௨௧. ௩௰, ௩௧, ௩௩.) உங்கள் தேவனாகிய யெகோவா உங் களுக்குச் சுதந்திரமாகக் கொடுக்கிற தே சத்திலே கொலைசெய்யப்பட்டுக் கிடக்கி ற ஒருவன் வெளியிலே காணப்படும்பொ ழுது அவனைக் கொன்றவன் இன்னனெ ன்று தெரியாதிருந்தால், உங்கள் மூப்

பரும் நியாயாதிபதிகளும் புறப்பட்டுப் போய்க் கொலைசெய்யப்பட்டவனுக்கும் அவனைச் சுற்றியிருக்கிற பட்டினங்களுக்கும் இவ்வளவு தூரமென்று அறியும்படி அளப்பார்களாக. அப்பொழுது அவனுக்குச் சமீபமென்று கண்ட பட்டினத்தின் மூப்பர் வேலையிற் பண்படாததுமாய் நுகத்தடியில் இணைக்கப்படாததுமாய் இருக்கிற ஒரு கடாரியைப் பிடித்து, உழாமலும் விதையாமலுமிருக்கிற கரம்பான பள்ளத்தாக்கிலே அதைக்கொண்டுபோய் அந்தப் பள்ளத்தாக்கிலே அதின் தலையை வெட்டிப்போடக்கடவர்கள். அப்பொழுது இலேவியின் குமாரராகிய ஆசாரியர்கள் சமீபமாய் இருக்க வேண்டும். உங்கள் தேவனாகிய யெகோவா தமக்கு ஆராதனைசெய்கிறதற்கும் யெகோவாவுடைய நாமத்தினால் ஆசீர்வாதஞ் செய்கிறதற்கும் அவர்களையே தெரிந்தெடுத்துக் கொண்டாரே. அவர்களுடைய வாக்கின்படியே சகல வழக்குகளுஞ் சகல அடிபிடிகளும் விசாரணைபண்ணப்பட வேண்டும். கொலைசெய்

யப்பட்டவனுக்குச் சமீபமான பட்டி
னத்தின் மூப்பர் எல்லாரும் பள்ளத்தாக்
கிலே தலை வெட்டப்பட்ட கடாரியின்
மேலே தங்கள் கைகளைக் கழுவி, எங்க
ள் கைகள் அந்த இரத்தத்தைச் சிந்தவு
மில்லை (சிந்துதலை) எங்கள் கண்கள் க
ண்டதுமில்லையென்று சொல்லி, பின்பு
யெகோவாவே தேவரீர் மீட்டுக்கொண்
ட உம்முடைய சனங்களாகிய இஸ்ரவேல
ர் மேலே கொலையுண்டவனுடைய இரத்
தப்பழியைச் சுமத்தாமல் உம்முடைய ச
னங்களாகிய இஸ்ரவேலர் மேலே கிருபை
யுள்ளவராய் இருமென்பார்களாக. அப்
பொழுது இரத்தப்பழி அவர்களை விட்
டு நிவிர்த்தியாகும். இப்படிக் கொலையு
ண்டவனுடைய இரத்தப்பழியை உங்களி
ல் இருந்து நீக்கக் கடவீர்கள். யெகோவா
வுடைய திருப்பார்வைக்குச் செம்மையா
னதை நீங்கள் செய்ய வேண்டுமே. (உ.
மோசே. உக. அதி. க—கூ.) கொலை
செய்யாதிருப்பாயாகவென்பதுங் கொ
லைசெய்தவன் நியாயத்தீர்ப்புக்கு ஏது
வா ருப்பானென்பதும் பூர்வத்தா

Digitized by Google

ருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, சகோதரனை வீணாய்க் கோபித்துக்கொள்பவன் எவனோ அவன் நியாத்தீர்ப்புக்கேதுவாய் இருப்பான். சகோதரனை வீணனென்கிறவன் எவனோ அவன் பெரிய சங்கத்துக்கு ஏதுவாய் இருப்பான். (மத். ரு. உக, உஉ.) தன் சகோதரனைப் பகைக்கிறவன் மனித கொலைபாதகனாய் இருக்கிறான். மனித கொலைபாதகன் எவனோ அவனுக்குள்ளே நித்திய சீவன் நிலைத்திராதென்று அறிந்திருக்கிறீர்கள். (க. யோவான். ரு. அதி. யரு.)

15. விபசாரம்பண்ண வேண்டாமென்று கற்பிக்கிறார்.

விபசாரம் பண்ணாதிருப்பாயாக. (உ. மோசே. உய. அதி. யச.) பிறனுடைய மனைவியுடனே நீ அனுபோகஞ் செய்யாமலும் அவளாலே உன்னை ஆசுசப்படுத்தாமலும் இருப்பாயாக. (ரு. மோ. யஅ. அதி. உய.) ஒருவனுடைய மனைவியுடனே ஒருவன் விபசாரம்

ண்ணினால், இப்படிப் பிறனுடைய மனை வியினிடத்தில் விபசாரம் பண்ணினவனும் அந்த விபசாரக்காரியும் நிச்சயமாய்க் கொலைசெய்யப்பட வேண்டும். (ரு. மோ. உ௰. ௰.) வேசையானவளைப் பின்பற்றுகிறது ஒரு துண்டு அப்பத்தை இரக்கும்படிக்கு ஏதுவாக்கும். விபசாரியானவள் விலையுயர்ந்த ஆத்துமாவை வேட்டையாடுகிறாள். ஆகையால் உன் இருதயத்திலே அவளுடைய அழகை இச்சியாதிருப்பாயாக. கண்ணிமைகளால் அவள் உன்னைப் பிடிக்க ஒட்டாதிருப்பாயாக. ஒருவன் தன் மடியிலே நெருப்பை வைத்துக்கொண்டால், அவனுடைய வஸ்திரங்கள் வெந்துபோகாமல் இருக்குமா? ஒருவன் தழலின்மேலே நடந்தால், அவனுடைய கால்கள் சுடாமல் இருக்குமா? அப்படிப் போலப் பிறனுடைய மனைவியினிடத்திற் பிரவேசித்து அவளைத்தொடுகிற யாவரும் ஆக்கினைக்குத் தப்பார்கள். ஒருவன் பசியாய் இருந்து தன் வயிற்றை நிரப்பும்படிக்குத் திருடினாலும், அதினாலே அந்தத் திருடனை அற்

Digitized by Google

பமாக எண்ண மாட்டார்கள். அவன் கண்டு பிடிக்கப்பட்டால் ஏழத்தனையாய்ப் பதில் செலுத்தப்படுவான். தன் வீட்டின் பொருள் யாவையுங் கொடுப்பான். ஒரு பெண்பிள்ளையோடே விபசாரம் பண்ணுகிறவன் மதியீனமுள்ளவன். அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவைக் கெடுக்கிறவன், வாதையையும் இலச்சையையும் அடைவான். அவனுக்கு வரும் நிந்தை துடைக்கப்பட மாட்டாது. அவள் புருஷனுடைய ரூர்க்கம் வயிராக்கியமாய் இருக்குமே. அவன் பழிவாங்கும் காலிலே தப்ப விடானே. விடுதலைக்காக எந்தப் பொருளையும் ஏற்றுக்கொள்ளான். நீ காணிக்கையை மிகுதியாய்க் கொடுத்தாலுஞ் சம்மதிக்க மாட்டான். (நீதிமொழி. சு. அதி. உச-ஙரு) என் மகனே, நீ என் மொழிகளைக் காத்து என் கற்பனைகளை உன்னிடத்திலே வைத்துக்கொள். என் கற்பனையையும் என் போதகத்தையும் உன் கண்மணியைப்போலக் காத்துக் கொள் அப்பொழுது பிழைப்பாய். அவைகளை உன் விரலில் அணிந்துகொள். அவை

Digitized by Google

களை உன் இருதயத்தின் பலகையில் எழு
து ஞானத்தை நோக்கி, நீ என் சகோதரி
யென்றுசொல்லு. விவேகத்தை உனக்கு
இனத்தாளென்றழைப்பாயாக. அப்பொ
ழுது அன்னியப் பெண்பிள்ளைக்கும் இ
ச்சகமான வார்த்தைகளைப் பேசுகிற மற்
றப் பெண்பிள்ளைக்கும் உன்னை விலக்கிக்
காப்பாய். எப்படியென்றால் நான் என் வீ
ட்டின் பல்கணியில் நின்று நாராசங்களின்
இடைவழியாய்ப் பேதைகளைப் பார்க்கி
றபொழுது வாலிபருக்குள்ளே மதியீன
முள்ள ஒரு வாலிபனைக் கண்டேன். அவன்
கருகுமாலைகாலமாகிய அஸ்தமன நேரத்
திருளிலேபொதுப் பெண்கள் இருக்குந்
தெருச் சந்தியிலே போய் அவர்களுடை
ய வீட்டு வழியே உலாவினன். அப்பொ
ழுது மனத்தந்திரமுள்ள ஒரு பெண் வே
சிகளுடைய ஆடை ஆபரணம் அணிந்து
வந்து, அவனை எதிர்ப்பட்டாள். தன்னு
டையமிகுந்த போதனையினலே அவனை
இணக்கிக்கொண்டு தன் உதடுகளின் இச்ச
கத்தாலே அவனை இழுத்தாள். உடனே அ
வன் ஒரு மாடானது அடிக்கப்படுதற்கா

Digitized by Google

ண ஸ்தலத்துக்கும் விலங்கிலே போடப்
பட்ட மூடனானவன் தண்டனைக்கும் போ
கிறது போலவும் ஒரு குருவி தன் சீவ
னை வாங்குகிறதற்கான கண்ணியை அறியா
மல் அதற்குத் தீவிரிக்கிறது போலவும்
அவள் பின்னே அம்பு அவனுடைய ஈர
லைப் பிளக்குமட்டும் போனான். ஆதலாற்
பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுத்து
என் வாயின் வார்த்தைகளைக் கருதிக்கொ
ள்ளுங்கள். அநேகர் அவளாற் காயப்பட்
டு விழுந்தார்களே. அவளாற் கொலைசெ
ய்யப்பட்டவர்கள் எல்லாரும் பலத்த கூ
ட்டம். அவளுடைய வீடு மரித்தோர்ஸ்தல
த்தின் வழிகளுள்ளது. அவைகள் மரண
அறைகளுக்குக் கொண்டுபோகின்றன.
ஆனபடியினாலே உன் இருதயம் அவை
களுடைய வழிகளுக்குச் சாயாதிருப்ப
தாக அவளுடைய பாதைகளில் திரிந்
து அலையாதிருப்பாயாக. (நீதிமொழி.
௭. அதிகாரம்)

ஆகையாற் பூமியிலே வேசித்தனமும்
அசுத்தமும் விரகதாபமுந் துரிச்சையு
மாகிய உங்கள் அவயவங்களை அழித்துப்

Digitized by Google

போரேங்கள். அவைகளின் நிமித்தம் பராபரனுடையகோபங் கீழ்ப்படியாமையுள்ள பிள்ளைகள் மேல் வருமே. (கொலோசர். ௩. அதி. ௫, ௬.) நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகிறதே பராபரனுடைய சித்தமாய் இருக்கின்றது. அந்தப்படி நீங்கள் வேசிமார்க்கத்திற்கு விலகி, பராபரனை அறியாத அஞ்ஞானிகளைப்போல விரகதாபமாகிய இச்சைக்குள்ளாகவல்ல, பரிசுத்தத்திற்குங் கனத்திற்குமுள்ளாகவே உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைக் காத்துக்கொள்ளுதற்கு வகையை அறிந்து, (௧. தெசலோனிக். ௪. ௩, ௪.) சோதோங்கொமோரு பட்டினத்தார்களும் அவைகளைச் சூழ்ந்த பட்டினத்தார்களும் இவர்களுடையவிதமாய் வேசித்தனத்தில் அமிழ்ந்து அன்னிய மாமிசத்தைச் சேர்ந்துபோனதினாலே நித்திய அக்கினியை ஆக்கினையாக அடைந்து திருட்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள். (யூதாவின் நிருபம். ௧, ௭.) விபசாரம்பண்ணாதிருப்பாயாகவென்பது பூர்வத்தாருக்கு உரை

Digitized by Google

க்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கி
றீர்கள். அல்லாமலும் நான் உங்களுக்குச்
சொல்லுகிறதாவது, ஒரு ஸ்திரியை இச்சி
ப்போடே பார்க்கிறவன் எவனே அவ
ன் தன் இருதயத்திலே அவளோடே வி
பசாரஞ் செய்தாயிற்று (மத்தேயு. ரு.
அதி. உஎ, உஅ.) ஆகையால் எவனா
னும் வேசிமார்க்கமாய் நடவாமலிருக்கி
ற மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்
தியை விவாகம்பண்ணினால் அவன் விப
சாரம்பண்ணுகிறான். தள்ளிவிடப்பட்டவ
ளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரம்
பண்ணுகிறானென்று உங்களுக்குச் சொ
ல்லுகிறேனென்றார். (மத்தேயு. ௰௧.
அதி. கூ.) அதெட்டியென்றால் புருஷ
னைக்கொண்ட ஸ்திரி தன் புருஷனுடை
ய சீவ காலமளவும் நியாயப்பிரமாணத்தி
ன்படியே அவனோடே சேர்க்கப்பட்டி
ருக்கிறாள். புருஷன் மரித்த பின்பு அவள்
தன் புருஷனுடைய பிரமாணத்திற்கு நீ
க்கப்படுகிறாள். மேலும் புருஷன் உயி
ரோடிருக்கையில் அவள் வேறொரு புரு
ஷனை விவாகம்பண்ணினால் விபசாரியெ

Digitized by Google

ன்று அழைக்கப்படுவாள். புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையாகி வேறொரு புருஷனை விவாகம்பண்ணினாலும் விபசாரியல்ல. (உரோமர். ௭. அதி. ௨, ௩.) அநியாயக்காரர் பராபரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியாமலிருக்கிறீர்களா! வஞ்சிக்கப்படாதிருங்கள். வேசிக்கள்ளரும் விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும், திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும் உதாசினரும், கொள்ளைக்காரரும் பராபரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை. (௧. கொரி. ௬. அதி. ௯, ௰.) விவாகம்பண்ணுதல் யாவருக்குள்ளும் கனம்பொருந்தியதாய் இருக்கக் கடவது. சமுசாரமார்க்கத்தாருடையபடுக்கை விபசாரத்தினாலே அசுசிப்படாதிருப்பதாக. வேசிமார்க்கருக்கும் விபசாரக்காரருக்கும் தேவன் நியாயத்தீர்ப்புக்கொடுப்பாரே. (எபிரேயர். ௰௩. அதி. ௪.)

16 களவு செய்யாதிருப்பாயாகவென்

Digitized by Google

து தேவன் கற்பித்திருக்கிறார்.

களவுசெய்யாதிருப்பாயாக. (௨. மோசே. ௨௰. அதி. ௧௫) ஒருவன் ஒரு மாட்டையாவது ஒரு ஆட்டையாவது திருடி அதைத் தான் (சாப்பிட) அடித்தால் அல்லது அதை விற்றால் அவன் அந்த மாட்டுக்கு ஐந்து மாடுகளையும் ஆட்டுக்கு நாலு ஆடுகளையும் பதிற் கொடுக்க வேண்டும். திருடன் கன்னமிடுகையிற் கண்டுபிடிக்கப்பட்டு அடிக்கப்பட்டுச் செத்தால் அவனுக்காக இரத்தப்பழிவாங்க வேண்டுவதில்லை. சூரியன் அவன்மேலே உதயமானதுண்டானால் அவனுக்காக இரத்தப் பழிவாங்க வேண்டும். திருடனொருவன் நிச்சயமாய்ப் பதிற் கொடுக்க வேண்டும். அவனுக்கில்லாதிருந்தால்த் தன் களவுக்காக விலைப்படக் கடவன். அவன் திருடின மாடாகிலுங் கழுதையாகிலும் ஆடாகிலும் உயிருடனே அவன் கையிற் காணப்பட்டால், இரட்டிப்பாய்ப் பதிற்கொடுக்க வேண்டும். ஒருவன் வயலிலாவது திராட்சச்செடித்தோட்டத்திலாவது தன் மிருகத்தை

Digitized by Google

மேயப்பண்ண வேண்டுமென்று (நினைத்து) அதை மற்றொருவனுடைய வயலிலே மேயப்பண்ணினால், அவன் தன்வயலிலுந் திராட்சச்செடித் தோட்டத்திலுமுள்ள பலனைப் பதிற் கொடுக்க வேண்டும். (உ. மோசே. உஉ. அதி. க-ரு.) ஒருவன் பிறனிடத்திலே திரவியத்தையாவது பண்டங்களையாவது, அடைக்கலமாக வைத்த பின்பு அது அவனுடைய வீட்டில் இருந்து திருடப்பட்டால், திருடன் அகப்படும் பொழுது அதற்கு இரட்டிப்பாய்க் கொடுக்க வேண்டும். திருடன் அகப்படாமற் போனால், அப்பொழுது அந்த வீட்டுக்காரன்தானே பிறனுடைய பொருளை அபகரித்தானோ இல்லையோவென்று அறியும் பொருட்டாக நியாயாதிபதிகளிடத்திற்குக் கொண்டுபோகப்பட வேண்டும். ஒருவன் (பிறனிடத்தில்) மாடு, கழுதை, ஆடு, வஸ்திரம் முதலான பொருள்களைக் (கண்டு) இது காணாமற்போன என்னுடைய பொருளென்று சொல்லிக் குற்றஞ் சாற்றினால், இருபேருடைய காரியமும் நியாயாதி

Digitized by Google

பதிகளிடத்திற்குச் செல்லவேண்டும். நி
யாயாதிபதிகளாற் குற்றவாளியென்று தீ
ர்க்கப்படுபவன் எவனோ அவன் மற்ற
வனுக்கு இரட்டிப்பாய்க் கொடுக்கக்க
டவன். ஒருவன் தன் கழுதையையாவது
மாட்டையாவது ஆட்டையாவது வே
றொரு மிருகத்தையாவது பிறனிடத்தில்
அடைக்கலமாக விட்ட பின்பு அது செத்
தால், அல்லது சேதப்பட்டால் அல்லது
ஒருவருங் காணாதபடிக்கு ஓட்டிக்கொண்
டுபோகக்காணப்பட்டால், அவன் தானே
பிறனுடைய பொருளை அபகரிக்கவில்லை
யென்பதை நிச்சயிக்கும்படிக்குத் தே
வன் மேலே ஆணையைக்கொண்டு இரு
வருக்கும் நியாயந்தீர்க்க வேண்டும். அப்
பொழுது அதின் எசமான் அதை ஏற்று
க்கொள்ள வேண்டும். மற்றவனும் பதிற்
கொடுக்க வேண்டுவதில்லை. அது அவன் வ
சத்தில் இருந்து திருடப்பட்டுப் போயிற்
றானால், அவன் அதின் எசமானுக்கு பதிற்
கொடுக்க வேண்டும். அது பீறுண்டு போயி
ற்றானால், அதைச் சாட்சியாலே ஒப்புவி
க்கவேண்டும். அப்பொழுது பீறுண்டதற்

Digitized by Google

காக பதிற்கொடுக்க வேண்டுவதில்லை. (௨. மோசே. ௨௨. அதி. ௭-௰௫.) களவு செய்யாதிருங்கள். (௩. மோசே. ௰௯. ௰௧.) நீட்டளவிலும் நிறுக்கிற நிறையிலும் படியிலும் நியாயக்கேடு செய்யாதிருப்பீர்களாக. ஒத்த தராசும் ஒத்த படிகளும் ஒத்த மரக்காலும் ஒத்த நாழியும் உங்களுக்கு உண்டாயிருக்க வேண்டும். யெகோவாவாகிய நானே உங்களை எகிப்த்து தேசத்தில் இருந்து புறப்படப்பண்ணின உங்கள் தேவன். (௩. மோ. ௰௯. ௩௫,௩௬.)

17. பொய்யாணையிடாதிருப்பாயாகவென்று கற்பிக்கிறார்.

பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக. (௨. மோசே. ௨௰. அதி. ௰௬.) ஒரு அக்கிரமத்தையாவது ஒரு பாவத்தையாவது பாவங்களுக்கேதுவான ஏதையாவது ஒருவன் செய்தால் ஒரே சாட்சியினால் அவனுக்குத் தீர்ப்புக் கொடுக்கக் கூடாது. இரண்டு மூன்று சாட்சிகளினாலே ஒரு காரியத்தை ஸ்தாபிக்க வேண்டும். ஒருவன்மேல் ஒரு குற்றத்தைச் சுமத்

Digitized by Google

இப்படிக்கு அநீதியுள்ளவன் அவனுக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்ல வந்தால், வழக்காடுகிற இருவரும் தேவனுடைய சன்னிதானத்திலே அக்காலத்தில் இருக்கும் ஆசாரியர்களுக்கும் நியாயாதிபதிகளுக்கும் முன்பாகப் போய் நிற்பார்களாக. அப்பொழுது நியாயாதிபதிகள் நன்றாய் விசாரிக்கவேண்டும். சாட்சிக்காரன் தன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பொய் சொன்னானென்று கண்டால், அப்பொழுது அவன் தன் சகோதரனுக்கு வரும்படி நினைத்த தண்டனையை அவனுக்கே செய்ய வேண்டும். இவ்விதமாய்ப் பொல்லாங்கை உங்களில் நின்று நீக்கக் கடவீர்கள். மற்றவர்கள் அதைக் கேட்டு இனிமேல் இப்படிப்பட்ட தீமையை உங்களுக்குள்ளே செய்யாதபடிக்குப் பயந்து நடப்பார்கள். உங்கள் கண்கள் அப்படிப்பட்டவனுக்கு இரங்கக்கூடாது. உயிருக்குப் பதிலாக உயிரையுங் கண்ணுக்குப் பதிலாகக் கண்ணையும் பல்லுக்குப் பதிலாகப் பல்லையும் கைக்குப் பதிலாகக் கையையும் காலுக்குப் பதி

Digitized by Google

லாகக் காலையும் வாங்க வேண்டும். (௫. மோ. ௰௯. அதி. ௰௫—௨௧ ) அந்தரங்கத்திலே பிறனை அவதூறுபண்ணுகிறவனைச் சங்கரிப்பேன். இறுமாந்த கண்ணுள்ளவனையும் செருக்கு மனமுள்ளவனையும் வைக்க மாட்டேன். தேசத்திலுள்ள உண்மையானவர்கள் என்னிடத்தில் இருக்கும்படிக்கு என் கண்கள் அவர்களை நோக்கும். சன்மார்க்கன் எனக்குத் தொண்டு செய்பவனும். வஞ்சகஞ் செய்கிறவன் என் வீட்டுக்குள் இருக்க மாட்டான். பொய் சொல்லுகிறவன் என் கண்களுக்கு முன் நிலைத்திருக்க மாட்டான். (சங். ௱௧. ௫—௭. ) பொய்ச்சாட்சிக்காரன் தண்டனையில்லாமற் போகான். அபத்தங்களைப் பிறப்பிக்கிறவன் தப்ப மாட்டான். பொய்ச்சாட்சிக்காரன் தண்டனையில்லாமற் போகான். அபத்தங்களைப் பிறப்பிக்கிறவன் கெட்டுப்போவான். (நீதிமொழி. ௰௯. அதி. ௫, ௯.) நாய்களுஞ் சூனியக்காரரும் வேசியார்க்கரும் கொலைபாதகரும் விக்கிரகாராதனைக்காரரும் பொய்யை விரும்பிநடப்பிக்கிறயாவரும்

Digitized by Google

புறம்பே இருப்பார்கள். (வெளிப்படுத்தல். உஉ. அதி. யரு.)

18. இச்சியாயாகவென்று கற்பிக்கிறார்.

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக, பிறனுடைய மனைவியையும் அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும் அவனுடைய கழுதையையும் மற்றும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாகவென்றார். (உ. மோசே. உய. அதி. யஎ.) அப்பொழுது அந்த விருட்சத்தின் கனி புசிப்புக்கு நலமுமாய்க் கண்களுக்கு இன்பமுமாயிப் புத்தியை அடைகிறதற்கு இச்சிக்கப்படத் தக்கதுமாய் இருக்கிறதென்று இஸ்திரீயானவள் பார்த்து அதின் கனியைப் பறித்துப் புசித்துத் தன்னோடே இருந்த புருஷனுக்குங் கொடுத்தாள். (க. மோசே. ௩. அதி சு.) அப்பொழுது ஆகான் யோசுவாவுக்கு மாறுத்தரமாகச் சொன்னது, மெய்யாகவே நான் இஸ்ரவேலின் தேவனாகிய யெகோவாவுக்கு விரோதமாகப் பாவஞ் செய்தேன். எப்



Digitized by Google

படியென்றால் கொள்ளையிடப்பட்டவை களில் நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும் இருநூறு வெள்ளிச்சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன் நாக்கையும் நான் கண்டு அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன். அவைகள் என் கூடாரத்தின் நடுத் தரையிலும் வெள்ளி அதின் கீழும் புதைத்திருக்கின்றனவென்றான். அங்கே யோசுவா அவனை நோக்கி நீ எங்களைக் கலங்கப் பண்ணினபடியினாலே இன்று யெகோவா உன்னைக் கலங்கப்பண்ணுவா ரென்றான். உடனே இஸ்ரவேலர் எல்லாரும் அவன்மேற் கல்லெறிந்து பின்பு அவைகளை அக்கினியிலாற் சுட்டெரித்து அவன்மேல் இந்நாள் வரைக்கும் இருக்கிற பெரிய கூட்டமாகிய கற்களைக் குவித்தார்கள். (யோசு. எ. அதி. உ௰, உக-உ௫.)

19. மேற் சொல்லப்பட்ட அக்கட்டளைகளை மீறுவது பாவந்தான்.

பாவஞ் செய்கிறவன் எவனோ அவன் நியாயப்பிரமாணத்துக்கு விரோதஞ்செய்கிறான். பாவமானது நியாயப்பிரமா

Digitized by Google

ணத்துக்கு விரோதமாயே இருக்கின்ற து. (க. யோவான். ஙு. அதி. ச.)

20. சகல மனிதரும் பாவிகளாயிருக்கிறார்கள்.

ஒரு மனுஷின் சுத்தமாயிருக்கிறதற்கும் இஸ்திரியினிடத்திற் பிறந்தவன் நீதிமானாய் இருக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்! இதோ தம்முடைய பரிசுத்தவான்களையும் அவர் நம்பார். பரமண்டலங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமல்ல. எத்தனை அதிகமாய் அநியாயத்தைத் தண்ணீரைப் போலக் குடிக்கிற மனுஷின் அருவருப்புந் துற்கற்தமுமுள்ளவனாய் இருக்கிறான். (யோட்பு. யரு. அதி. யச-யசு.) இப்படி இருக்க மனுஷின் தேவனுக்கு முன்பாக நீதிமானாய் இருப்பதெப்படி! ஸ்திரியினிடத்திற் பிறந்தவன் சுத்தமாய் இருப்பதெப்படி! சந்திரனை அண்ணார்ந்து பாரும். அதுவும் பிரகாசமற்றது. நட்சத்திரங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமற்றவைகள். புழுவாய் இருக்கிற மனிதனும் பூச்சியாய் இருக்கிற மனுப்புத்திரனும் எத்தனை அதிகமென்று

Digitized by Google

ன். (யோப்பு. உரு. அதி. ச-சு) பாவ ஞ் செய்யாத மனுஷனே இல்லை (க. இரா சா. அ. அதி. சசு.) இதோ நான அக்கிரு மத்துடனே உருவாகிப் பாவத்தோ டே என் தாயினிடத்தில் உற்பத்தியா னேன். (ருக. சங்கீதம். ரு.) மாமிசத்தேகி யாகிய எனக்குள்ளே நன்மைவாசமாய் இ ருக்கிறதில்லை. (உரோமர். எ. அதி. ய அ.) ஒரு பாவமுஞ் செய்யாமல் நன்மையை யே செய்யத்தக்க நீதிமான் பூமியில் இல்லை. (பிரசங்கியின். எ. அதி. உய.) அந்தப்படியும் எழுதியிருக்கிறதாவது, நீதிமான் ஒருவனுமில்லை. மெய்யுணர்வு ள்ளவனில்லை. தேவனைத் தேடுகிறவன் இ ல்லை. எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெ ட்டுப்போகிறார்கள். நன்மை செய்கிறவ ன் ஒருவனும் இல்லை. அவர்கள் தொண் டை திறக்கப்பட்ட சமாதியாயிருக்கின்ற து. தங்கள் நாவுகளால் வஞ்சனை செய்கிறா ர்கள். பாம்புகளின் விஷம் அவர்களின் உதடுகளின் கீழ் இருக்கின்றது. அவர்களு டைய வாய் சபிப்பினாலும் உபாதிக்கிற பேச்சினாலும் நிறைந்திருக்கின்றது. அவ

Digitized by Google

ர்களுடைய கால்கள் இரத்தஞ் சிந்துகிற தற்குத் தீவிரமாய் இருக்கின்றன. அழிவும் இடுக்கண்ணும் அவர்களுடைய வழிகளில் இருக்கின்றன. சமாதான மார்க்கத்தை அவர்கள் அறியார்கள். அவர்கள் கண்க ளுக்கு முன்பாகத் தேவ பயம் இல்லையெ ன்பதே. (உரோமர். ங. அதி. ய-யஅ.) எல்லாரும் பாவஞ்செய்து தேவனுடைய மகிமையற்றவர்களாய் இருக்கிறார்கள். (உரோமர். ங. அதி. உங.) நாம் பாவஞ் செய்யவில்லையென்றோமானால், நாம் அவ ரைப் பொய்யனாக்குகிறதாக இருக்கும். அவருடைய வார்த்தையும் நமக்குள்ளே இராது. (க.யோவான். க. அதி ய.)

21. கற்பனைகளை இடைவிடாது கைக் கொள்பவர்களுக்கு மோட்ச பாக்கியம் உண்டென்றும் சற்றென்கிலும் வழுச்செ ய்கிறவர்களுக்கு நரகம் உண்டென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

அவைகளின்படி செய்கிற மனிதன் அ வைகளாலே பிழைப்பான். நானே யெ கோவா.(ங.மோசே.யஅ. அதி. ரு.) இந்த வேதவசனங்களை உறுதிப்படுத்தி இவைக

Digitized by Google

ளின்படி செய்யாதவன் சபிக்கப்பட்டவ னென்பார்களாக. சனங்கள் எல்லாரும் ஆமன் என்னக் கடவர்கள். (ரு. மோசே. உஎ. அதி. உசு.) துன்மார்க்கரும் யெ கோவாவை மறக்கிற எந்தேசத்தாரும் நரகபாதாளத்தில் இடப்படுவார்கள். (சங். கூ. ௰எ.) எலலா ஆத்துமங்களும் நம்மு டையவைகள் தானே, தகப்பனின் ஆ த்துமம் எப்படியோ, அப்படியே ம கனின் ஆத்துமமும் நம்முடையதாய் இருக்கின்றது. பாவஞ் செய்கிற ஆத் துமமே சாகும். (எசேக். ௰அ. அதி. ச.) மேலும் மோசே நியாயப்பிரமாணத்தி னால் வருகிற நீதியைக்குறித்து இவைகளை ச் செய்கிற மனுஷன் இவைகளாற் பிழை ப்பானென்று எழுதினார். (உரோமர். ௰. அதி. ரு.) ஒருவன் வேதநூல் முழுவதையு ங் கைக்கொண்டாலும் ஒரே பிரமாணத் திற்குத் தப்பி நடந்தால் எல்லாப் பிரமா ணங்களுக்கும் விரோதமாய்க் குற்றவா ளியாய் இருப்பான். என்னத்தினாலென்றா ல் விபசாரம் பண்ணாதிருப்பாயாகவென் று சொன்னவர் கொலை செய்யாதிருப்பா

Digitized by Google

யாகவென்றுஞ் சொன்னார். ஆனதால் நீ விபசாரம்பண்ணாமலிருந்தாலும், கொலை செய்தாயானால் வேதநூலை மீறி நடந்திருப்பாயே. (இயாக்கோபு. உ. அதி. ய, யக.) நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியைக்காரராகிய யாவரும் நியாயப்பிரமாணப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளை எல்லாஞ் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனே அவன் சபிக்கப்பட்டவனென்று எழுதியிருக்கிறபடியாற் சாபத்திற்குக் கீழாய் இருக்கிறார்கள். (கலாத். ரு. அதி. ய.) சீவவிருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாகும்படிக்கும் வாசல்களாற் பட்டினத்திற்குட் பிரவேசிக்கும்படிக்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். (வெளிப். உஉ. அதி. யச.)

22. ஒருவருங் கற்பனைகளை என்றைக்குந் தவறாமற் கைக்கொள்வதற்கு மேலாக ஒன்றுஞ் செய்யக் கூடாதபடியால், மனிதர் பாவஞ்செய்தபின் தங்கள் நற்செய்கைகளின் நிமித்தம் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

Digitized by Google

அன்றியுந் 'தங்களை நீதிமான்களென்று நம்பி மற்றவர்களை அற்பமாக எண்ணின சிலருக்கு அவர் சொன்ன உவமையாவது, இரண்டு மனிதர் செபம்பண்ணும்படிக்குத் தேவாலயத்துக்குப் போனார்கள். அவர்களில் ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன், பரிசேயனானவன் தனித்து நின்று பண்ணின செபமாவது, பராபரனே, நான் பறிகாரர், அநீதர், விபசாரர் இப்படிப்பட்ட மற்ற மனிதரைப் போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராதவனானபடியினாலே, உமக்குத் தோத்திரஞ் செலுத்துகிறேன். வாரத்துக்குள்ளே இரண்டுதரம் உபவாசிக்கிறேன். எனக்கு உண்டான யாவற்றிலும் பத்திலொன்றைச் செலுத்துகிறேனென்றான். பின்பு ஆயக்காரன் தூரமாய் நின்று தன் கண்களையும் வானத்துக்கு உயர்த்தத்துணியாமல் தன் மார்பிலே அடித்துக்கொண்டு பராபரனே! பாவியாகிய என்மேல் இரக்கமாயிருமென்றான். அவனல்ல இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனானென்று உ-

Digitized by Google

ங்களுக்குச் சொல்லுகிறேன். தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவனை உயர்த்தப்படுவானென்றார்.(லூக். ௰௮. அதி. ௯-௰௪.) அல்லாமலும் மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் விடுதலையாகக் கூடாத காரியம் எதுவோ அதினின்று விசுவாசிக்கிற யாவனும் அவராலே விடுதலையாகிறானென்று அறிந்துகொள்வீர்களாக. (நடபடி. ௰௩. அதி. ௩௯.) ஒரு மனிதனும் நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியைகளினாலே அவருக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. (உரோமர். ௩. அதி. ௨௰) ஆதலால் மனிதர்கள் நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியைகளினாலேயல்ல, விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறார்களென்று தீர்க்கிறோம்.(உரோமர். ௩. அதி. ௨௮.) ஆதலாற் புறத்தேசத்தாரிற் பிறந்த பாவிகளாய் இராமற் சுபாவப்படி யூதராயிருக்கிற நாமும் இயேசுக் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலேயன்றி நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியைகளால் மனித

Digitized by Google

ன் நீதிமானாகிறதில்லையென்று அறிந்து நியாயப்பிரமாணத்துக்கேற்ற கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாகும் படிக்குக் கிறிஸ்து யேசுவின் மேல் விசுவாசிகளானோமே. நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியைக்காரராகிய யாவரும் நியாயப்பிரமாணப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளை எல்லாஞ் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவனென்று எழுதியிருக்கிறபடியாற் சாபத்திற்குக் கீழாய் இருக்கிறார்கள். (கலாத்தி. ௨. அதி. ௰௬. ௩. அதி. ௰.) கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். அது உங்களாலுமல்ல கிரியைகளினாலுமல்ல, ஒருவன் மேன்மைபாராட்டாதபடிக்கு அது தேவனுடைய ஈவாய் இருக்கின்றது. (எபேசி. ௨. அதி. ௮, ௯.) நாம் செய்த நீதிக்கேற்ற கிரியைகளின் நிமித்தமல்ல மறுபிறப்பாகிய முழுக்கினாலும் பரிசுத்த ஆவி செய்கிற புதிதாக்குதலினாலுமே அவர் தமது சுய இரக்கத்தினாலே ந

Digitized by Google

ம்மை இரட்சித்தார். (தீத்து. ௩. அதி. ரு.)

23. நமக்குப் பாவ நிவிர்த்தி செய்யும் பொருட்டு தேவன் தமது குமாரனாகிய யேசுக் கிறிஸ்துவைப் பாடுபட்டுச் சீவனை விடும்படியாக இவ்வுலகத்திலே அனுப்பினார்.

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு அவரையே கொடுத்து, இவ்வளவாய் உலகத்தாரிடத்தில் அன்பாயிருந்தார். தேவன் உலகத்தாரை ஆக்கினைக்குட்படுத்தும்படிக்கல்ல உலகத்தாரை இரட்சிக்கும்படிக்காகவே தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பினார். (யோவா. ௩. அதி. ௰௬, ௰௭.) கிறிஸ்துவோ நாம் பாவிகளாயிருக்கையிலே நமக்காக மரித்ததினாலே தேவன் நம்து மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார். (உரோ. ரு. அதி. அ.) பாவிகளை இரட்சிக்கும்படிக்குக் கிறிஸ்து யேசு உலகத்தில் வந்தாரென்கிறது உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்குப் பாத்திரமுமான வார்க்

கதயாய் இருக்கின்றது பாவிகளில் நான் பிரதானமானவன். (க. தீமோ. க. அதி. ௰ரு.) அன்றியும் நீங்கள் அறிந்திருக்கிறபடி அவர் நம்முடைய பாவங்களை நீக்கும்படிக்கு வெளிப்பட்டார். அவரிடத்திலே பாவம் இல்லை. (க. யோ. ௩. அதி. ரு.)

24. இயேசுக் கிறிஸ்து தெய்வீகத் தன்மையும் மனுஷீகத் தன்மையுமுள்ளவராய் இருந்தார்.

ஆதியிலே வார்த்தை இருந்தது அவ்வார்த்தை தேவனிடத்தில் இருந்தது. அல்லாமலும் அவ்வார்த்தையே தேவன். அந்த வார்த்தை மனிதனாகிக் கிருபையினாலுஞ் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம்பண்ணினார். அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கொரே பேறானவருடைய மகிமையாகவே இருந்தது. (யோவா. க. அதி. க, ௰ச.) தேவ தத்துவத்தின் நிறைவெல்லாம் மெய்யாய்க் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாய் இருக்கின்றது. (கொலோ. உ. அதி. கூ.) பிதாக்களுடையவர்களாய் இருக்கிறார்களே. மேலுஞ் சரீரத்தின்படிக்குக் கிறிஸ்து அ

Digitized by Google

வர்களில் உண்டானாரே. அவர் என்றென்றைக்குந் தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவனானவர். (உரோ ௯. அதி. ௫ ) மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி நாம் மெய்யானவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைக் கொடுத்தார். அந்தப்படி நாம் அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவிலுள்ள மெய்யானவரைப் பற்றியிருக்கிறோம். அவரே மெய்யான தேவனுமாய் நித்திய சீவனுமாய் இருக்கிறார். (௧. யோவான். ௫. அதி. ௨௰.) அவர் தேவனுடைய சாயலாய் இருந்தும், தேவனுக்கு ஒப்பாயிருக்குதலைக் கொள்ளையிடப்பட்ட உடைமையென்றெண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் உருவம் எடுத்து, மனிதர் சாயலாகப் பிறந்ததுமல்லாமல் அவர் மனிதரூபமாகக் காணப்பட்டபின்பு மரணத்துக்குத் தம்மைத் தாழ்த்திச் சிலுவையின் மரணத்திற்கே கீழ்ப்பட்டவரானார். (பிலி. ௨. அதி. ௬-௮.) காலம் நிறைவேறின பொழுது தேவன் தமது குமார



Digitized by Google

அனுப்ப அவர் நியாயப்பிரமாணத்தின் கீழானவர்களாகிய நம்மை மீட்டுக்கொண்டு புத்திரசுவிகாரம் நமக்கு உண்டாகும்படி செய்யும்படிக்கு, இஸ்திரியினிடத்திற் பிறந்து நியாயப்பிரமாணத்திற்குக் கீழானார். (கலா. ச. அதி. ச, ரு) அன்றியும் தேவன் மாமிசமுள்ளவராக வெளிப்பட்டும், ஆவியினாலே நீதியுள்ளவனென்றுஞ் சொல்லப்பட்டும், தேவதூதர்களாற் காணப்பட்டும், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டும், மகிமையிலே உயர்த்தப்பட்டுமிருக்கிறாரென்று சொல்லிய மெய்த்தேவபத்திக்குரிய இந்தஇரகசியம் யாவராலும் அறிக்கையிடப்பட்டபடி மேன்மையாய் இருக்கின்றது. (க. தீமோத். ஙு. அதி. யசு.) அன்றியும் அவர் (தம்முடைய) சனங்களின் பாவங்களை நிவர்த்திசெய்வதற்கேதுவாக இரக்கமுள்ளவராயும் பராபரனுக்குரியவைகளைக் குறித்து உண்மையான பிரதான ஆசாரியராயும் இருக்கும்படிக்கு எவ்விதத்திலுந் (தம்முடைய) சகோதரருக்கொப்பாக வேண்டியதாயிருந்தது. (எபி. உ. யஎ.)

25. அவர் பாவமற்றவராய் இருந்தார்.

Digitized by Google

பரிசுத்தராயும், தீமைசெய்யாதவராயும், அசுத்தமில்லாதவராயும், பாவிகளைவிட்டுப் பிரிந்தவராயும், வானங்களுக்குமேல் உயர்ந்தவராயும் இருக்கிற இப்படிப்பட்ட பிரதான ஆசாரியரே நமக்குவேண்டும். (எபிரே. ௭: அதி. ௨௬.) அவர் பாவஞ்செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை, அவர் வையப்பட்டபொழுது பதில் வையாமலும் பாடுபட்டபொழுது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புக்கொடுக்கிறவருக்கு அதை ஒப்புவித்தார். (௧. பேது. ௨. அதி. ௨௨, ௨௩.) குற்றமும் மாசுமில்லாத ஆட்டுக்குட்டியைப் போன்ற கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள். (௧. பேதுரு. ௧. அதி. ௰௮.) பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்துக் கொலைபாதகனான மனிதனை உங்களுக்காக விடுதலையாக்கவேண்டுமென்று கேட்டீர்கள். (நடபடி. ௩. அதி. ௰௪.) அன்றியும் நீங்கள் அறிந்துகொண்டபடி அவர் நம்முடைய பாவங்களை நீக்கும்படிக்கு வெளி

Digitized by Google

ப்பட்டார். அவரிடத்திலே பாவம் இல்லை. (௧. யோவான். ௩. அதி. ௫.) இனி நான் மிகவும் உங்களுடனே பேசுவதில்லை உலகத்தின் பிரபு வருகிறானே, அவனுக்கு என்னிடத்தில் ஒன்றும் இல்லை. (யோவா. ௰௪. அதி. ௩௰.) அல்லாமலும் அவர் சகலத்தையும் நன்றாய்ச் செய்தருளினார். (மாற்கு. ௭. அதி. ௩௭.) அல்லாமலுஞ் செப ஆலயத்திலே அசுத்தமான ஆவியுள்ள ஒரு மனிதன் இருந்தான். அவன் (அவரைக்கண்டு) ஐயோ, நாசரேத்தூராகிய யேசுவே! எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக்கெடுக்க வந்தீரோ? உம்மை அறிந்திருக்கிறேன். நீர் தேவனுடைய பரிசுத்தரென்று மிகுந்தசத்தத்துடனே கூப்பிட்டான் (லூக். ௪. அதி. ௩௩, ௩௪.) அப்பொழுது அவரைக் காட்டிக்கொடுத்த யூதாவென்பவன் அவர் மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபம் அடைந்து அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியரிடத்திற்கும் மூப்பரிடத்திற்குந் திருப்பக் கொண்டுவந்து, குற்றமில்லாதவரை நான் காட்டிக் கொடு

Digitized by Google

த்தினால், எனக்குப் பாவம் வந்ததெ
ன்றான் (மத்தே. உஎ. அதி. ரு, ச.) பின்
பு பிலாத்தென்பவன் பிரதான ஆசாரி
யரையுஞ் சனக்கூட்டத்தையும் நோக்கி,
இந்த மனிதனிடத்திலே ஒரு குற்றத்
தையுங் காணேனென்றான். அப்பொழு
து பிலாத்தென்பவன் பிரதான ஆசாரி
யரையுந் தலைவரையுஞ் சனங்களையுங் கூ
டிவரச்செய்து அவர்களை நோக்கி, நீங்
கள் இந்த மனிதன் சனங்களைக் கலகப்
படுத்துகிறவனென்று சொல்லி, இவனை
என்னிடத்திற் கொண்டுவந்தீர்கள். அந்த
ப்படி நான் உங்களுக்கு முன்பாக இவ
னைச் சோதித்தபொழுது, நீங்கள் இவ
ன்மேற் சாற்றின குற்றங்களில் ஒன்றையு
ம் நான் இவனிடத்திலே காணவில்லை. அ
வன் மூன்றாந் தரஞ் சொன்னது, இவன்
என்னப் பொல்லாங்கைச் செய்தான்? இவ
னிடத்திலே மரணத்துக்கேதுவான கு
ற்றம் ஒன்றையுங் காணேனே. ஆகையா
ல் நான் இவனைத் தண்டித்து விடுதலைப
ண்ணுவேனென்றான்.(லூக்கா. உரு. அதி.
ச. ௰ரு, ௰ச, உஉ.) அல்லாமலும் அ

Digitized by Google

வுன் நியாயாசனத்தில் உளுக்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவியினால் அனுப்பப்பட்ட ஒருவன் வந்து நான் இன்றைக்குச் சொப்பனத்திலே இந்த நீதிமானைக் குறித்து மிகவும் பாடுபட்டேன். ஆகையால் நீர் அவரைக் குறித்து ஒன்றுஞ் செய்யாதிருப்பீராகவென்று அம்மாள் அறிவிக்கச் சொன்னாளென்றான். (மத். உ எ. அதி. ௰௯.)

26. அவர் தமது சீவிய காலம் முழுவதும் நன்மையையே செய்துகொண்டுவந்தார்.

யெகோவா என்னுங் கத்தாவினுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். என்னைத் திருவெலனில் வருத்தப்படுகிறவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி யெகோவா எனக்கு அபிஷேகம்பண்ணியிருக்கிறார். இருதயம் நொருக்கப்பட்டவர்களுடைய காயத்தைக் கட்டும்படியாயுஞ் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் கட்டப்பட்டவர்களுக்குக் கட்டவிழ்ப்பையும் அறிவிக்கும்படியாயும், யெகோவாவுடைய தயவு விளங்கும் வருஷத்தையும் நம்முடைய தேவன் பழிவாங்கு

Digitized by Google

ம் நாளையும் அறிவிக்கும்படியாயுந் துய
ரப்படுகிற யாவருக்கும் ஆறுதலைச் செய்
யும் படியாயுஞ், சீயோனிற் துயரப்படு
கிறவர்களைச் சீர்ப்படுத்திச் சாம்பலுக்கு
ப்பதிலாக ஆபரணத்தையும் துயரத்து
க்குப் பதிலாகச் சந்தோஷம் என்னும் எ
ண்ணெய்யையுங் கஸ்டப்படுகிற ஆவிக்குப்
பதிலாக துதி என்னும் ஆடையையும் அ
வர்களுக்குக் கொடுக்கும்படியாயும் எ
ன்னை அநுப்பினார் (எசா. ௬௧. அதி. ௧-
௩.) தேவன் அவருடனே கூட இருந்த
படியால் அவர் நன்மை செய்கிறவராக
வும் பசாசின் வல்லமையில் அகப்பட்ட
யாவரையுங் குணமாக்குகிறவராகவுஞ் சுற்
றித்திரிந்தார். (நடபடி. ௰. அதி. ௩௮.) பி
ன்பு யேசுவானவர் கலிலேயா நாடெங்
குஞ் சுற்றி நடந்து, அவர்களுடைய செ
ப ஆலயங்களிற் சனங்களுக்கு உபதேச
ஞ் செய்து, பரலோக இராச்சியத்தைக்
குறித்துச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து
சனங்களுக்குண்டாயிருந்த சகலவிதமான
வியாதிகளையும் சகலவிதமான நோய்க
ளையும் (நீக்கி அவர்களைக்) குணமாக்

Digitized by Google

கிறார். அவருடைய கீர்த்தி சீரியாத் தே
சத்திலெங்கும் பிரபலமாயிற்று. பின்பு
பலபல வியாதிகளையும் வேதனைகளையு
ம் அடைந்த பிணியாளிகள் யாவரையும் ப
சாசுபிடித்தவர்களையும் சந்திரரோகிகளை
யும் திமிர்வாதக்காரரையும் அவரிடத்திற்
குக் கொண்டுவந்தார்கள். அவர்களைக் கு
ணமாக்கிறார். (மத். ௪. அதி. உ௩, உ௪.)
அவர் மலையில் இருந்திறங்கிவந்தபொழுது
திரளான சனங்கள் அவரைப் பின்தொடர்
ந்தார்கள். அப்பொழுது ஒரு குஷ்டரோ
கி வந்து அவருக்கு முன்பாக விழுந்து
வணங்கி ஆண்டவரே, உமக்குச் சித்தமா
னால், என்னைச் சுத்தமாக்க உம்மாலாகு
மென்றான். இயேசுவானவர் தமது கை
யை நீட்டி அவனைத் தொட்டு எனக்குச்
சித்தம் உண்டு, சுத்தமாகுவென்றார். உட
னே குஷ்டரோகம் நீங்க அவன் சுத்தமா
னான். அல்லாமலும் இயேசுவானவர் அவனை
நோக்கி நீ இதை ஒருவனுக்குஞ் சொல்லா
மலிருக்க நினை. அவர்களுக்குச் சாட்சியா
கும்படிக்கு நீ போய் ஆசாரியனுக்கு
உன்னைக் காண்பித்து மோசே சட்டனை

Digitized by Google

யிட்ட காணிக்கையைச் செலுத்துவென்றார். இயேசுவானவர் கப்பர்நாகூம் பட்டணத்திற் பிரவேசித்த பின்பு நூறுபேருக்குச் சேர்வைக்காரனொருவன் அவரிடத்தில் வந்து அவரை நோக்கி, ஆண்டவரே, என் வேலைக்காரன் திமிர்வாதமுள்ளவனாய் வீட்டிலே கிடந்து மிசவும் உபாதிப்படுகிறானென்று வேண்டிக்கொண்டான். அவனுடனே யேசுவானவர் நான் வந்து அவனைக் குணமாக்குவேனென்றார். அதற்கு அந்தச் சேர்வைக்காரன் சொன்னது, ஆண்டவரே, நீர் என் வீட்டுக்குட் பிரவேசிப்பதற்கு நான் பாத்திரனல்ல அல்லாமலும் நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாய் இருந்தும், எனக்குட்பட்டிருக்கிற சேவகரில் ஒருவனைப் போவென்னப் போகிறான், மற்றொருவனை வாவென்ன வருகிறான். எனக்கு அடிமையானவனை இதைச் செய்யென்னச் செய்கிறான். ஆகையால் நீர் ஒரு வார்த்தை மாத்திரஞ் சொல்லல் என் வேலைக்காரன் சொஸ்தமடைவானென்றான். அ

Digitized by Google

த்தத் தலைவனை நோக்கி, ௨ பேர்
உன் விசுவாசத்தின்படி உனக்கா
கவேதென்றார். அந்நாழிகையிலே
னுடைய வேலைக்காரன் சொஸ்தம்
ந்தான். இயேசுவானவர் பேதுரு
வீட்டிலே வந்து அவனுடைய மா
மாய்க் கிடக்கிறதைக் கண்டு, அவ
ளைத் தொட்டார். உடனே சுரம்
விட்டு நீங்கித்து. அவள் எழுந்தி
அவர்களுக்கு ஊழியஞ்செய்தா
ல் அஸ்தமனமான பொழுது பசாசு பி
ருந்த அநேகரை அவரிடத்துக்குக்
கொண்டுவந்தார்கள். அவர் மெது ப
க்களை எதிர்க்கொண்டு தம்மு
நோய்களைச் சுமந்தாரென்று தீர்
சொல்லிய வசனச்சொன்னது நி
வேறாம் படிக்கு அவர் அந்த ஆவி
ரு வார்த்தையினாலே துரத்திப்
வியாதிகள் எல்லாரையுங் குணமாக்கி
மத்தே. அ. அதி. ௪-௯. ௰௩-௰௭.)
இவைகளை அவர்களோடே பேசு
தலைவனொருவன் வந்து வணக்க
விழுந்து அவரை நோக்கி, இந்நே

Digitized by Google

ரத்திலே என் மகள் இறந்துபோனாள். அவள் உயிர் அடையும்படிக்கு நீர் வந்து அவள்மேல் உமது கையை வையும். அப்பொழுது பிழைப்பாளென்ருன். இயேசுவானவர் எழுந்திருந்து தமது சீஷரோடுங் கூட அவன் பின்னே போனார். பின்பு யேசுவானவர் அத்தலைவனுடைய வீட்டிற் சேர்ந்து தாரை ஊதுகிறவர்களையும் இரைகிற சனங்களையுங் கண்டு, அவர்களை நோக்கி, வெளியே போங்கள். இந்தப் பெண் இறந்துபோகவில்லை, நித்திரை பண்ணுகிருளென்ருர். அவர்கள் அவரை நோக்கி, நகைத்தார்கள். சனங்கள் வெளியே துரத்தப்பட்ட பின்பு அவர் உள்ளே பிரவேசித்து அந்தப் பெண்ணின் கையைப் பிடித்தார். உடனே அவள் எழுந்திருந்தாள். அந்தச் செய்கையினலே அவருடைய கீர்த்தி அத்தேசத்திலெங்கும் பிரபலமாயிற்று. இயேசுவானவர் அவ்விடம் விட்டுப் போகையிற் குருடர் இருவர் அவர் பின்னே சென்று, ஆ! தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்குமென்று கூப்பிட்டார்கள். அ

Digitized by Google

ர் வீட்டிலே வந்தபின்பு அந்தக் குருடர் அவரிடத்துக்கு வந்தார்கள். இயேசுவானவர் அவர்களை நோக்கி இப்படிச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களோவென்றார். ஆண்டவரே, விசுவாசிக்கிறோமென்றார்கள். அப்பொழுது அவர் அவர்களுடைய கண்களைத் தொட்டு, உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்காகக் கடவதென்றார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன. பின்பு இயேசுவானவர் அவர்களை நோக்கி நீங்கள் இதை ஒருவனுக்கும் அறிவிக்கவேண்டாமென்று கெட்டியாய்க் கட்டளையிட்டார்: அவர்களோ புறப்பட்டு அத்தேசத்திலெங்கும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம் பண்ணினார்கள். அவர்கள் புறப்பட்டுப்போகையிற் பசாசுபிடித்திருந்த ஊமையனை அவரிடத்திற் கொண்டுவந்தார்கள். பசாசு துரத்தப்பட்ட பின்பு ஊமையன பேசினான். சனங்கள் ஆச்சரியப்பட்டு இப்படியாக இஸ்ரவேலருக்குள்ளே ஒருக்காலுங் காணப்பட்டதில்லையென்றார்கள். (மத். ௯. அதி. ௰அ, ௰௯, உ௩, ௩௩.)

Digitized by Google

அந்தருணத்திலே காவலில் இருந்த யோ
வான் கிறிஸ்துவின் கிரியைகளைக் கேள்வி
ப்பட்டுத் தன் சீஷரில் இரண்டு பேரை அ
ழைத்து, நீங்கள் போய் அவரை நோ
க்கி, வருகிறவர் நீர்தாமோ அல்லது வே
றொருவர் வர நாங்கள் காத்திருக்க வே
ண்டுமோவென்று கேளுங்களென்று சொ
ன்னான். அவர்கள் அப்படியே வந்து கே
ட்ட பொழுது யேசுவானவர் அவர்களு
க்கு மாறுத்தரமாகச் சொன்னதாவது,
நீங்கள் கேட்டுங் கண்டும் இருக்கிறவைக
ளை யோவானுக்குப் போய் அறிவியுங்கள்
என்னவெனில், என்றலே குருடர் பார்
வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கி
றார்கள், குஷ்டரோகிகள் சுத்தம் அடை
கிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்
தோர் எழுந்திருக்கிறார்கள், எளியவர்களு
க்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகின்ற
து. (மத். ௰௧. ௨-௫.) அப்பொழுது ப
சாசு பிடித்த குருடும் ஊமையுமான ஒரு
வன் அவரிடத்திற் கொண்டுவரப்பட்டா
ன். குருடும் ஊமையுமானவன் பேசவுங்
காணவுந் தக்கதாக அவனைக் குணமாக்கி



Digitized by Google

றார். சனங்கள் எல்லாரும் பிரமித்து இவர் தாவீதின்குமாரன் அல்லவாவென்றார்கள். (மத். ௰௨. ௨௨,௨௩.) இயேசுவானவர் புறப்பட்டுத் திரளான சனங்களைக் கண்டு அவர்களுக்கு இரக்கமாய் மனதுருகி அவர்களில் வியாதிப்பட்டவர்களைக் குணமாக்கிறார். சாயங்காலத்திலே அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து இது வனாந்தரமான் இடம், அல்லாமலும் பகல் போயிற்று, ஆதலால் இந்தச் சனங்கள் கிராமங்களுக்குப்போய்த் தங்களுக்காகப் போசன பதார்த்தங்களைக் கொள்ளும்படிக்கு இவர்களை அனுப்பிவிடுமென்றார்கள். அதற்கு இயேசுவானவர் இவர்கள் போகவேண்டுவதில்லை, நீங்களே இவர்களுக்குச் சாப்பாடு கொடுங்களென்றார். அவர்கள் சொன்னது, ஐந்தப்பமும் இரண்டு மீன்களுமேயல்லாமல் வேறொன்றும் எங்களிடத்தில் இல்லையென்றார்கள். அவைகளை எனக்கு இங்கே கொண்டுவாருங்களென்றார். பின்பு சனங்கள் புல்லின்மேற் பந்தியிருக்கும் படிக்கு அவர் கட்டளையிட்டு அவ்வைந்து அப்பங்களையும் இரண்டு

Digitized by Google

மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்துபார்த்து அவைகளை ஆசீர்வதித்து அப்பங்களைப் பிட்டுச் சீஷர்களுக்குக் கொடுத்தார். சீஷர்கள் அவைகளைச் சனங்களுக்குக் கொடுத்தார்கள். அவர்கள் எல்லாருஞ் சாப்பிட்டுத் திருத்தி அடைந்தார்கள். அதுவுமல்லாமற் சேஷமானவைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள். அப்படிச் சாப்பிட்டவர்கள் பெண்களும் பிள்ளைகளுந் தவிர ஏறக்குறைய ஐயாயிரம் பேர் இருந்தார்கள். (மத். ௰௪. அதி. ௰௫-௨௧.) அவ்விடத்து மனிதர் அவரை அறிந்து அந்தத் திசைகளில் எங்கும் ஆட்களை அனுப்பிப் பிணியாளிகள் எல்லாரையும் அவரிடத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தை மாத்திரம் தொடும் படிக்கு உத்தரவுகேட்க அதைத் தொட்ட யாவருஞ் சொஸ்தமடைந்தார்கள். (௩௫, ௩௬.) அப்பொழுது அவ்விடங்களின் எல்லைகளில் இருந்து வந்த கானான் தேசத்தாளாகிய ஒரு ஸ்திரி அவரை நோக்கி ஆண்டவரே, தாவீதின் கு

Digitized by Google

மாரனே, என் மகள் பசாசினாலே கடினமாய் வாதிக்கப்படுகிறாள். எனக்கு இரங்க வேண்டுமென்று சொல்லிக் கூப்பிட்டாள். அவரோ அவளுக்கு மாறுத்தரமாக ஒரு வார்த்தையுஞ் சொல்லவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர் வந்து, அவரை நோக்கி, இவள் நம்மைப் பின்றொடர்ந்து கூப்பிடுகிறாளே. ஆதலால் இவளை அனுப்பிவிடுமென்று வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர் காணமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேற் குடும்பத்தாரிடத்துக்கேயன்றி, (மற்றவர்களிடத்தில்) நான் அனுப்பப்படவில்லையேயென்றார். அவளோ வந்து ஆண்டவரே, எனக்குச் சகாயஞ் செய்ய வேண்டுமென்று அவரை நமஸ்காரம் பண்ணினாள். அவர் சொன்னது பிள்ளைகளுடைய அப்பத்தை எடுத்து, நாய்களுக்குப் போடுகிறது நல்லதல்லவேயென்றார். அதற்கவள் ஆண்டவரே, மெய்தான். ஆகிலும் நாய்கள் தங்கள் எசமான்கள் போசனஞ்செய்கிற பலகைகளில் இருந்து விழுகிற உச்சிட்டங்களைத் தின்னு

Digitized by Google

றேமேயென்றாள். அப்பொழுது யேசுவானவர் அவளைநோக்கி ஆ! ஸ்திரியே, உன் விசுவாசம் பெரிதாய் இருக்கின்றது. நீ விரும்பினபடி உனக்காகக் கடவதென்றார். அந்நேரமே அவளுடைய மகள் சுகம் அடைந்தாள். பின்பு யேசுவானவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுக் கலிலேயாக் கடலின் அருகே வந்து ஒரு மலையில் ஏறி அங்கே உட்கார்ந்தார். அப்பொழுது சப்பாணிகள், குருடர், ஊமையர், முடவர்கள் முதலான அநேகம் பேரைக் கூட்டிக் கொண்டுவந்த மிகுந்த சனங்கள் யேசுவினிடத்தில் வந்து அவர்களை அவருடைய பாதத்தினிடத்தில் வைத்தார்கள். அவர்களை அவர் குணமாக்கினார். ஊமையர் பேசுகிறதையும், முடவர்கள் சொஸ்தம் அடைகிறதையும், சப்பாணிகள் நடக்கிறதையும், குருடர் காணுகிறதையுஞ் சனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டு இஸ்ராவேலின் தேவனைத் துதித்தார்கள். பின்பு யேசுவானவர் தமது சீஷரைத் தம்மிடத்தில் அழைத்து சனங்களைக் குறித்து மன உருக்கமாய் இருக்கிறேன். என்னத்

Digitized by Google

தினாலென்றால், இவர்கள் மூன்று நாள் எ
ன்னிடத்திலே தங்கிப் போசனமில்லா
திருக்கிறார்கள். இவர்கள் வழியிலே சோ
ர்ந்து போகும்படிக்குப் பட்டினியாய்
இவர்களை அனுப்பிவிட மாட்டேனென்
றார். அதற்கு அவருடைய சீஷர்கள் இ
வ்வளவு சனங்களுக்குத் திருத்தி உண்டா
கும்படிக்கு வேண்டிய அப்பங்கள் இந்
த வனாந்தரத்திலே நமக்கு எப்படி அக
ப்படுமென்றார்கள். யேசுவானவர் உங்க
ளிடத்தில் எவ்வளவு அப்பங்கள் உண்டெ
ன்றார். எழு அப்பங்களுஞ் சில சிறு மீன்
களும் உண்டென்று சீஷர் சொல்ல, அ
வர் சனங்களைத் தரையிலே பந்தியிருக்க
ச்சொல்லி, பின்பு அந்த எழு அப்பங்க
ளையும் மீன்களையும் எடுத்துத் தோத்தி
ரஞ்செய்து அவைகளைப் பிட்டுத் தம்மு
டைய சீஷர்களுக்குக் கொடுத்தார். சீ
ஷர் அவைகளைச் சனங்களுக்குக் கொடு
க்க எல்லாருஞ் சாப்பிட்டுத் திருத்தி அ
டைந்தார்கள். பின்பு சேஷமானவைகள் எ
ழு கூடை நிறையச் சேகரித்துக்கொள்
ளப்பட்டன. பெண்களும் பிள்ளைகளுந்

Digitized by Google

தவிர போசனம்பண்ணின புருஷர் நாலாயிரம் பேர். (மரு. அதி. உஉ—௬அ.) பின்பு அவர்கள் சனக்கூட்டத்தினிடத்திற் சேர்ந்த பொழுது ஒரு மனிதன் அவரிடத்தில் வந்து அவர் முன்பாக முழங்காற் படியிட்டு, ஆண்டவரே, என் மகனுக்கிரங்கும். அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப்படுகிறான். எப்படியென்றால், அடிக்கடி தீயிலேயும் அடிக்கடி சலத்திலேயும் விழுகிறான். அவனை உம்முடைய சீஷரிடத்திற் கொண்டு வந்தேன். அவர்களுக்கு அவனைக் குணமாக்கத் திராணியில்லையென்றான். அதற்கு யேசுவானவர் சொன்னது, ஆ! விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியாரே, எதுவரைக்கும உங்களோடிருப்பேன்? எதுவரைக்கும் உங்களிற் பொறுமையாயிருப்பேன்? அவனை என்னிடத்திற் கொண்டுவாருங்களென்றார். அவனைக் கொண்டுவந்த பொழுது, யேசுவானவர் அவனிலுள்ள பசாசை அதட்டினார். உடனே அது அவனை விட்டுப்போயிற்று. அந்தப் பிள்ளை அந்நேரமே சுகம் அடை

Digitized by Google

ர்தான். (யெ. அதி. ௰௪—௰௮.) மறு
நாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்
குப் போனார். அவருடைய சிஷர் அநேக
ரும் மற்றநேக சனங்களும் அவருடனே
கூடப் போனார்கள். அவர் ஊரின் வாச
லுக்குச் சமீபமான பொழுது, ஒரு கை
ம்பெண்ணுடைய ஒரே குமாரன் இ
றந்துபோய் வெளியே கொண்டுவரப்
பட்டான். ஊராரில் அநேக சனங்களு
ம் அவளுடனே கூட வந்தார்கள். கர்த்
தர் அவளைப் பார்த்து அவள்மேல் உரு
க்கமாய் இரங்கி நீ அழ வேண்டாமென்
று சொல்லிக் கிட்டப் போகையிற் பா
டையைச் சுமக்கிறவர்கள் நின்றார்கள். உ
டனே அவர் அதைத் தொட்டு வாலிப
னே! எழுந்திருவென்று உனக்குச் சொல்
லுகிறேனென்றார். அப்பொழுது மரித்த
வன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொ
டங்கினான். அவனை அவர் தாய்க்கு ஒப்பு
க்கொடுத்தார். (லூக். எ. ௰௧—௰௫.)
பதினெட்டு வருஷமாய்ப் புலவீனமா
கச் செய்கிற ஆவியையுடைய ஒரு ஸ்தி
ரி அங்கே இருந்தாள். அவள் எவ்வளவு

Digitized by Google

ம் நிமிரக் கூடாத கூனியாய் இருந்தாள்.
யேசுவானவர் அவளைக் கண்டு தம்மிடத்
தில் அழைத்து ஸ்திரியே! உன் பலவீ
னத்தில் இருந்து விடுதலையாக்கப்பட்டா
யென்று சொல்லி அவள் மேலே தமது
கைகளை வைத்தார். உடனே அவள் நிமி
ர்ந்து தேவனைத் துதி செய்தாள். (லூக்.
௰௩. அதி. ௰௧—௰௩.)

அதின் பின்பு யூதருடைய பண்டிகை
உண்டான பொழுது, யேசுவானவர் எ
ருசலேமுக்குப் போனார். அந்த எருச
லேம் நகரத்திலே ஆட்டுவாசலின் அருகே
எபிரேயுப் பாஷையிலே பெதெஸ்தாவெ
ன்னப்பட்ட ஒரு குளம் இருக்கின்றது.
அதற்கு ஐந்து மண்டபங்கள் உண்டு. அ
வைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்
பின உறுப்புடையவர்கள் முதலான அநே
க வியாதிக்காரர் படுத்துக்கொண்டு சலம்
அசைகிற வரைக்கும் பார்த்திருந்தார்கள்.
என்னத்தினாலெனில் சிலகாலங்களிலே தே
வதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்
கிச் சலத்தைக் கலக்குகிறதுஞ் சலங் கல
க்கப்பட்ட பின்பு முதலாவது அதற்கு

Digitized by Google

ட்படுகிறவன் எவனே அவன் எந்த வியா
திப்பட்டவனாய் இருந்தாலுங் குணம் அ
டைகிறதும் வழக்கமாய் இருந்தது. அ
தின் பொருட்டாக, அங்கே முப்பத்தெ
ட்டு வருஷம் வியாதியுள்ள ஒரு மனிதன்
இருந்தான். படுத்திருந்த அவனை யேசு
வானவர் கண்டு, அவன் அநேக நாள் வி
யாதியுள்ளவனென்று அறிந்து, அவனை
நோக்கி, நீ சொஸ்தமடைய விரும்புகிறா
யாவென்றார்! வியாதிப்பட்டவன் அவரு
க்கு மாறுத்தரமாகச் சொன்னது, ஆண்
டவனே, சலங் கலக்கப்படுகிற பொழு
து என்னைக் குளத்திற் கொண்டுபோய்
விடுகிறதற்கு ஒருவரும் இல்லை. நான் நட
ந்துபோகிறதற்கு முன்னாக வேறொருவ
ன் இறங்குவானென்றான். யேசுவானவர்
சொன்னது, எழுந்திரு. உன் படுக்கை
யை எடுத்துக்கொண்டு நடவென்றார்.
உடனே அந்த மனிதன் குணமடைந்து
தன் படுக்கையை எடுத்துக்கொண்டு ந
டந்துபோனான். (யோவா. ரு. க—கூ.)
அவர் அப்புறம் போகையிற் பிறவிக் கு
ருடனாகிய ஒரு மனிதனைக் கண்டார். அ

Digitized by Google

ப்பொழுது அவருடைய சீஷர் அவரை
நோக்கி இரபீ, இவன் குருடனாய்ப் பிற
க்கும் படிக்கு இவனோ இவனைப் பெ
ற்றவர்களோ ஆர் பாவஞ் செய்தார்
களென்று கேட்டார்கள்? அதற்கு யே
சுவானவர் சொன்னது, இவனும் பாவ
ஞ் செய்யவில்லை, இவனைப் பெற்றவர்
களும் பாவஞ்செய்யவில்லை. பராபரனு
டைய கிரியைகள் இவனிடத்திலே வெளி
ப்படும் பொருட்டாக(இப்படிப் பிறந்
தான்.( பகற்காலம் இருக்கும் அளவும் நான்
என்னை அனுப்பினவருடைய கிரியைகளை
ச் செய்ய வேண்டும். ஒருவனுங் கிரியை
யைச் செய்யக் கூடாத படிக்கு இராத்தி
ரி வருகின்றது. நான் உலகத்தில் இருக்
கையில் உலகத்தின் ஒளியாய் இருக்கிறே
னென்றார். இப்படி அவர் சொல்லிப் பி
ன்பு தரையிலே துப்பி உமிநீரினாற் சே
றுண்டாக்கி அந்தச் சேற்றைக் குருடனு
டைய கண்களின் மேற் பூசி, பின்பு நீ சீ
லோவாக்குளத்திற் போய்க் கழுவென்றா
ர். சீலோவாவென்பதற்கு அனுப்பப்ப
ட்டவனென்று அருத்தம். அந்தப்படி

Digitized by Google

அவன் போய்க் கழுவிப் பார்வை அடைந்
து திரும்பி வந்தான் (யோவா. ௯. ௭.)
யேசுவானவர் செய்த மற்ற அநேககாரிய
ங்களும் உண்டு. அவைகள் ஒவ்வொன்றாய்
எழுதப்பட்டால் அதினாலே உண்டாகும்
புத்தகங்கள் வைக்கிறதற்கு உலகம் போ
தாதென்றெண்ணுகிறேன். (௨௧. ௨௫.)

27. நம் இரட்சிக்கப்படும் பொருட்
டு கிறிஸ்துநாதர் பொல்லாத மனிதர் கை
யிலே தம்மை ஒப்புக்கொடுத்துச் சிலு
வையில் அறையுண்டு மரித்தார்.

அவர் அசட்டைபண்ணப்பட்டவருமா
ய் மனிதரில் தள்ளப்பட்டவருமாய் வே
தனைகளுள்ளவருமாய் நோய்களில் வழ
க்கப்பட்டவருமாய் இருந்தார். நாம் அ
வரைவிட்டு முகங்களை மறைத்துக்கொள்
ளலாயிற்று. நாம் அவரை எண்ணிக்கொ
ள்ளாமல் அசட்டைபண்ணினோம். மெய்
யாயே அவர் நம்முடைய நோய்களை எடுத்
துக்கொண்டு நம்முடைய வேதனைகளைச்
சுமந்தார். நாம் அவரைத் தேவனாலே அ
டிக்கப்பட்டும் அறையப்பட்டும் வருத்த
ப்படுத்தப்பட்டும் இருக்கிறவரென்று எ

Digitized by Google

ண்ணினோம். (அப்படியல்லவே.) அவர் நம்முடைய துன்மார்க்கங்களின் நிமித்தங் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதான சவுக்கியம் உண்டாகிறதற்கேதுவான ஆக்கினை அவர்மேல் இறங்கிற்று. அவர் காயப்பட்டதினாலே நாம் குணமடைகிறோம். (எசா. ருங. அதி. ரு-ரு.) அது முதல் யேசுவானவர் தாம் எருசலேமுக்குப் போய்ப் பெரியோர்களாலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் மிகுந்த பாடுபடவுங் கொலை செய்யப்படவும், மூன்றாம் நாளிலே எழுந்திருக்கவும் வேண்டுமென்று தம்முடைய சீஷருக்குக் காண்பிக்கத் தொடங்கினார். அப்பொழுது பேதுரு அவரைத் தனியே அழைத்து, ஆண்டவரே, உமக்கிது இரக்கம் உண்டாவதாக. அப்படி உமக்கு வாராதிருப்தாகவென்று அவருடனே கண்டிப்பாய்ச் சொன்னான். யேசுவானவர் திரும்பிப் பேதுருவினிடத்தில், ஆ! சாத்தானே, நீ என் முன் இராமற் போ. நீ பராபரனுக்குப் பிரி

Digitized by Google

யமானவைகளைச் சிந்தியாமல் மனிதருக்குப் பிரியமானவைகளைச் சிந்திக்கிறபடியினாலே எனக்குத் துன்பமாய் இருக்கிறாயென்று சொன்னார்,(மத்தே. ௰௬. அதி. உக—உ௩.) அக்காலத்திலே பன்னிருவரில் ஒருவனாகிய இஸ்காரியோத்தென்று பேர் கொண்ட யூதாவுக்குள்ளே சாத்தான் புகுந்தான். ஆதலால் அந்த யூதாவென்பவன் பிரதான ஆசாரியரும் ஆலயத்தலைவருமானவர்களிடத்திற் போய், அவர்களுக்கு அவரைக் காட்டிக் கொடுக்கும் வகையைக் குறித்து அவர்களுடனே போசனை பண்ணிக்கொண்டான். அவர்கள் சந்தோஷிப்பட்டு அவனுக்குத் திரவியங் கொடுக்கத் தீர்மானித்தார்கள். அதற்கு அவன் பொருந்திச் சனக்கூட்டமில்லாத பொழுது, அவரை அவர்களுக்குக் காட்டிக் கொடுக்கும் படிக்குத் தகுதியான காலத்தைத் தேடினான். (லூக்கா. உஉ. அதி. ௩—௬.)

அவர்கள் போசனம்பண்ணுகையில் அவர் உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பானென்று மெய்யாய் உங்களு

Digitized by Google

க்குச்சொல்லுகிறேனென்றார். அப்பொ ழுது அவர்கள் மிகவுந் துக்கப்பட்டு அ வரைநோக்கி ஆண்டவரே, நானோ! அப் படிச் செய்வேனென்று ஒவ்வொருவ ர்சொல்லத்தொடங்கினார்கள். அதற்கு அ வர் சொன்னது, என்னோடே கூடத் தா லத்திலே கை தோய்க்கிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான். மனிதனுடைய குமாரன் தன்னைக் குறித்து எழுதியிரு க்கிற விதமாய்ப் போகிறான். அப்படி இ ருந்தும் ஐயோ! மனிதனுடைய குமார ன் எந்த மனிதனாலே காட்டிக்கொடுக் கப்படுவானோ அம்மனிதனுக்கு வேத னை வரும். அம்மனிதன் பிறவாதிருந்தா னால் அவனுக்கு நலமாய் இருக்குமெ ன்றார். (பின்னாலே) அவரைக் காட்டிக் கொடுத்த யூதாவும் அவரை நோக்கி, இ ரபீ, நானோ! அப்படிச் செய்வேனென் றான். நீ சொன்னபடியே இருக்குமெ ன்றார். அன்றியும் அவர்கள் போசனம் பண்ணுகையில் இயேசுவானவர் அப்பத் தை எடுத்துக்கொண்டு ஆசீர்வதித்து அதைப் பிட்டுச் சீஷர்களுக்குக் கொடுத்

து இது என்னுடைய சரீரமாய் இருக்கி
ன்றது. நீங்கள்எடுத்துப் புசியுங்களெ
ன்றார். பின்பு அவர் பாத்திரத்தையும் எ
டுத்துக்கொண்டு தோத்திரம் பண்ணி
அதை அவர்களுக்குக் கொடுத்து நீங்க
ள் எல்லாரும் இதிற் பானம் பண்ணுங்க
ள். இது அநேகருக்குப் பாவ மன்னிப்
பு உண்டாகும் படிக்குப் புதிய உடம்ப
டிக்கைக்கேற்றதாய்ச் சிந்தப்படுகிற என்
இரத்தமாய் இருக்கின்றது. இதுமுதற்
கொண்டுநான் உங்களோடே கூட என்
பிதாவின் இராச்சியத்திலே நவமாய்ப்
பானம் பண்ணும் நாள் வரைக்கும் இந்
தத் தீவிதிராட்ச இரசத்தை நான் பான
ம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச்
சொல்லுகிறேனென்றார். அவர்கள் தோ
த்திரப் பாட்டைப் பாடின பின்பு ஒலிவ
மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள். அ
ப்பொழுது இயேசுவானவர் அவர்களை
நோக்கி நான் மேய்ப்பனை உபத்திரப்
படுத்தும் பொழுது, ஆடுகள் சிதறிப்
போமென்று எழுதியிருக்கின்றது. ஆ
கையால் இந்த இராத்திரியிலே நீங்கள்

Digitized by Google

எல்லாரும் என்னைக் குறித்துக் கலக்கம் அடைந்து போவீர்கள். நானோ எழுந்திருந்த பின்பு உங்களுக்கு முன்னே கலிலேயா நாட்டுக்குப் போவேனென்றார். (மத். ௨௬. அதி. ௩௧-௩௨.) இயேசுவானவர் இவைகளைச் சொன்னபின்பு அவர் தம்முடைய சீஷருடனே கூடக் கீதிரோன் என்னும் ஆற்றுக்கப்புறம் போனார். அங்கே ஒருதோட்டம் இருந்தது. அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள். இயேசுவானவர் தம்முடைய சீஷருடனே கூட அடிக்கடி அங்கே கூடிவந்திருந்தபடியினாலே அவரைக் காட்டிக்கொடுத்த யூதாவும் அந்த இடத்தை அறிந்தான். ஆதலால் யூதாவானவன் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையுங் கூட்டிக்கொண்டு பந்தங்களோடும், தீவட்டிகளோடும், ஆயுதங்களோடும் அவ்விடத்திற்குப் போனான். அப்பொழுது இயேசுவானவர் தமது மேல் வரும் யாவையும் அறிந்து புறப்பட்டு அவர்க

Digitized by Google

ளை நோக்கி யாரைத் தேடுகிறீர்களென்
ருர். அதற்கவர்கள் நாசரேத்தூராளுகி
ய இயேசுவைத் தேடுகிறோமென்ருர்கள்.
இயேசுவானவர் நானே அவனென்ருர்.
அவரைக் காட்டிக்கொடுத்த யூதாவும்
அவர்களுடனே கூட நின்ருன். நானே
அவனென்று அவர் சொன்ன பொழுது,
அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்
தார்கள். பின்பு அவர் மறுபடியும் அவ
ர்களை நோக்கி யாரைத் தேடுகிறீர்க
ளென்றுகேட்டார். நாசரேத்தூராளுகி
ய இயேசுவைத் தேடுகிறோமென்ருர்க
ள். இயேசுவானவர் சொன்னது, நானே
அவனென்று உங்களுடனே சொன்னே
னே, நீங்கள் என்னைத் தேடினீர்களாளுல்
இவர்களை விட்டுவிடுங்களென்ருர். அதி
ளுலே நீர் எனக்குக் கொடுத்தவர்களில்
ஒருவனையாகிலும் நான்இழக்கவில்லையெ
ன்று அவர் சொல்லிய வசனம் நிறைவே
றிற்று. அப்பொழுது சீமோன் பேதுரு
தன்னிடத்தில் இருக்கிற கத்தியை உருவி
ப்பிரதான ஆசாரியனுடைய வேலைக்கா
ரனுடைய வலது காதற வெட்டினுன். அ

Digitized by Google

ந்த வேலைக்காரனுக்கு மல்குவென்று பேர். (யோவான். ௰அ. அதி. க-௰.) அப்பொழுது இயேசுவானவர் இம்மட்டில் நிறுத்துங்களென்று சொல்லி, அவனுடைய காதைத் தொட்டு அவனைக் குணமாக்கினார். (லூக்கா. உஉ. அதி. ருக.) இயேசுவானவர் பேதுருவை நோக்கிக் கத்தியை உறையிலே போடு. பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாமல் இருப்பேனாவென்றார். (யோவான். ௰அ. அதி.௰க.) (என்னைக் காப்பாற்றும் படிக்கு) என் பிதா அரை இலட்சத்திற்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்ப வேண்டுமென்று நான் இப்பொழுதே அவரைவேண்டிக்கொள்ளக் கூடாதென்று நினைக்கிறாயா? (நானே அப்படிச் செய்தால்) வேத எழுத்துக்கள் எப்படி நிறைவேறும்? இப்படியே சம்பவிக்க வேண்டுமென்று சொல்லிப் பின்பு சனக்கூட்டத்தை நோக்கி நீங்கள் ஒரு கள்ளனைப் பிடிக்கும் படிக்குப் புறப்படுகிறதுபோலக் கத்திகளோடுந் தடிகளோடும் என்னைப் பிடிக்க வந்

தீர்கள். தினந்தோறும் நான் தேவாலய
த்திலே உங்களுக்குள்ளே இருந்து உப
தேசம் பண்ணினேன். அப்பொழுது நீ
ங்கள் என்னைப் பிடிக்கவில்லையே. தீர்க்க
தரிசிகளின் எழுத்துக்கள் நிறைவேறும்
படிக்கு இவை எல்லாம் நடந்துவருகி
ன்றனவென்றார். (மத்தேயு. ௨௬. அதி.
௫௫—௫௬.) அத்தருணத்திலே பிரதான
ஆசாரியரும் மற்றப் பெரிய சங்கத்தார்
எல்லாரும் இயேசுவானவரைக் கொலை
செய்யும் பொருட்டாய் அவருக்கு வி
ரோதமாய்ச் சாட்சிகளைத் தேடினார்கள்.
அப்பொழுது சிலர் அவர் மேலே துப்
பி அவருடைய முகத்தை மூடிக் கையி
னாலே அடித்து நீ தீர்க்கதரிசனஞ் சொ
ல்லென்று அவருடனே சொல்லத்தொட
ங்கினார்கள். அல்லாமலும் ஊழியக்காரர்
அவரைக் கன்னத்தில் அடித்தார்கள். (மா
ற். ௰௪. அதி. ௫௫, ௬௫.) இயேசுவானவர்
துரைக்கு முன்பாக நின்ற பொழுது, அ
ந்தத் துரை அவரை நோக்கி, நீ யூதரு
டைய இராசாவாவென்று கேட்டான்.
அதற்கு இயேசு சொன்னது, நீர் சொல்

Digitized by Google

னுகிறபடியே இருக்கின்றதென்றார். பின்பு பிரதான ஆசாரியரும் மூப்பரும் அவர் மேற் குற்றஞ் சாற்றிவருகிற பொழுது, அவர் மாறுத்தரம் ஒன்றுஞ் சொன்னதில்லை. அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி இவர்கள் உன்னைக் குறித்துச் சொல்லுகிற குற்றங்களை நீ கேட்கிறதில்லையோவென்றான். அவரோ துரைக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாகத்தக்கதாக ஒன்றுக்கும் மாறுத்தரமாக ஒரு வார்த்தையையுஞ் சொல்லாமலிருந்தார். காவற் பண்ணப்பட்டவர்களில் எவனைச் சனங்கள் கேட்கிறார்களோ அவனைத் துரை விடுதலையாக்குகிறது பண்டிகைதோறும் வழக்கமாய் இருந்தது. அல்லாமலும் அக்காலத்திலே கீர்த்தியடைந்த பாதகனாகிய பரபாசென்னப்பட்ட ஒருவன் காவலில் வைக்கப்பட்டிருந்தான், ஆகையாற் சனங்கள் கூடியிருக்கையிற் பிலாத்து அவர்களை நோக்கி பரபாசென்பவனுங் கிறிஸ்து என்னப்பட்ட இயேசு என்பவனும் இருக்கிறார்களே. இவர்களில் எவனை நான் உங்களுக்காக விடுதலையாக்

Digitized by Google

க விரும்புகிறீர்களென்று கேட்டான். அவர்கள் அவரைப் பொறாமையினாலே ஒப்புக்கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்தபடியினாலே (அவன் அப்படியே கேட்டான்.) அல்லாமலும் அவன் நியாயாசனத்தில் உளுக்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவியினால் அனுப்பப்பட்ட ஒருவன் வந்து நான் இன்றைக்குச் சொப்பனத்திலே இந்த நீதிமானைக் குறித்து மிகவும் பாடுபட்டேன். ஆகையால் நீர் அவரைக் குறித்து ஒன்றுஞ் செய்யாதிருப்பீராகவென்று அம்மாள் அறிவிக்கச் சொன்னாளென்றான். அத்தருணத்திலே பிரதான ஆசாரியரும் மூப்பரும் பரபாசைக் கேட்கும் படிக்கும் யேசுவைக் கொலைசெய்யப்பண்ணும் படிக்குஞ் சனங்களை (வசனங்களினாலே) ஏவினார்கள். ஆதலால் இவ்விரண்டு பெயரில் எவனை நான் உங்களுக்கு விடுதலைபண்ணவேண்டுமென்று துரை சனங்களை நோக்கிக் கேட்ட பொழுது, அவர்கள் பரபாசை விடுதலையாக்கவேண்டுமென்று கூப்பிட்டார்கள். அதற்கு பிலாத்து சொன்

Digitized by Google

ன து, அப்படியானற் கிறிஸ்து என்னப்ப
டுகிற யேசுவை நான் என்ன செய்யலாம்
என்ருன். அவனைச் சிலுவைமரத்தில் அ
றையப்பண்ணவேண்டுமென்று எல்லாரு
ங் கூப்பிட்டார்கள். அதற்குத் துரை சொ
ன்னது, என், எந்தப் பொல்லாங்கைச்
செய்தானென்ருன். அப்பொழுது அவர்
கள் அவனைச் சிலுவைமரத்தில் அறையப்
பண்ணவேண்டுமென்று அதிகமதிகமா
ய்க் கூப்பிட்டார்கள். பிலாத்து (தன்னு
டைய பிரயாசம்) வீணுய் இருக்கிறதென்
றுங் கலகம் அதிகமாகிறதென்றுங் கண்டு
சனங்களுக்கு முன்பாகத் தண்ணீர் அள்
ளிக் கைகளைக் கழுவி இந்த நீதிமானின்
இரத்தத்தைச் சிந்துகிறதற்கு நான் குற்ற
மில்லாதவன். நீங்களே பாருங்களென்ரு
ன். அதற்குச் சனங்கள் எல்லாருஞ் சொ
ன்னது, இவனுடைய இரத்தம் எங்கள்
மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இரு
ப்பதாகவென்ருர்கள். அப்பொழுது அ
வன் பரபாசை அவர்களுக்காக விடுதலை
யாக்கி யேசுவையோ வாரிஞல் அடிப்பி
த்துப் பின்பு சிலுவையில் அறையப்படு

Digitized by Google

ம்படிக்கு ஒப்புக்கொடுத்தான். பின்பு துரையினுடைய போர்ச்சேவகர் யேசுவை அதிகாரச் சாலையிலே கொண்டுபோயப் போர்ச்சேவகராகிய கூட்டம் எல்லாம் அவர்மேற் கூடிவரப் பண்ணி, அவருடைய வஸ்திரங்களைக் களைந்து சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவருடைய சிரசின்மேல் வைத்து, அவருடைய வலது கையில் ஒரு கோலைக்கொடுத்துப், பின்பு அவர் முன்பாக முழங்காற்படியிட்டு யூதரின் இராசாவே, வாழ்க்வென்று அவரைப் பரிகாசம்பண்ணி, அவர்மேலே துப்பி அந்தக் கோலை எடுத்து, அவருடையசிரசில் அடித்தார்கள். அவரைப் பரிகாசம் பண்ணின பின்பு அவர்கள் அவருக்கு உடுத்தின மேலங்கியைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி அவரைச் சிலுவைமரத்தில் அறையும் படிக்குக் கொண்டுபோனார்கள். போகையில் அவர்கள் சிரேனே ஊரானாகிய சீமோன் என்பவனைக் கண்டு அவன் அவருடைய சிலுவைமரத்தைச் சு

மக்கும் படிக்குப் பலபந்தம் பண்ணினுர்கள். பின்பு அவர்கள் தலையோட்டிடமென்று அருத்தங் கொள்ளுங் கொலுகதா என்னும் இடத்துக்கு வந்த பொழுது, கசப்பான கீரை கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர் அதை ருசிபார்த்துக் குடிக்க மனதில்லாதிருந்தார். அவரைச் சிலுவைமரத்தில் அறைந்தபின்பு அவர்கள் அவருடைய வஸ்திரங்களைக் குறித்துச் சீட்டுப் போட்டு அவைகளைப் பங்கிட்டார்கள். அதினாலே என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு என் உடையின் மேற் சீட்டுப் போட்டார்களென்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறிற்று. (மத்தேயு. ௨௭. அதி. ௩௪-௩௫.) அல்லாமலும் தூக்கிப்போடப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் அவரைத் தூஷணித்து நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்ளென்றான். அப்பொழுது மற்றவன் அவனுடனே சொன்னது இந்த ஆக்கினைக்குள்ளாயிருக்கிற நீயும் தேவனுக்குப் பயப்பட



Digitized by Google

மலா் இருக்கிறாய்? நாம் நம்முடைய நடக்கைகளுக்குத் தகுதியாக இந்த ஆக்கினையை நியாயமாய் அடைகிறோம். இவா் தகாததொன்றையுந் நடப்பிக்கவில்லையென்று அவனைக் கடிந்துகொண்டு, பின்பு இயேசுவுடனே சொன்னது ஆண்டவரே! நீர் உம்முடைய இராச்சியத்திற் சேரும் பொழுது, அடியேனை நினைத்தருளுமென்றான். அவனுடனே இயேசுவானவர் சொன்னது இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசில் இருப்பாயென்று மெய்யாய் உனக்குச் சொல்லுகிறேனென்றார். பின்பு ஏறக்குறைய ஆறும் மணிநேரமாயிற்று. (அதுமுதல்) ஒன்பதாம் மணிநேரம் வரைக்கும் அந்தத் தேசத்தில் எங்கும் அந்தகாரம் உண்டாகச் சூரியன் இருள் அடைந்தது. அல்லாமலுந் தேவாலயத்திலுள்ள திரைச்சேலை நடுவிலே கிழிந்துபோயிற்று. அல்லாமலும் இயேசுவானவர் பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேனென்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அதின் பின்பு சீவனை

Digitized by Google

விட்டார். அப்படிச் சம்பவித்தவைகளைப் படைத்தலைவன் கண்டு மெய்யாய் இந்தமனிதன் நீதிமானாய் இருந்தானென்று தேவனைத் துதிசெய்தான். அல்லாமலும் அந்தச் சங்கதியைப் பார்க்கக் கூடி வந்திருந்த சனங்கள் எல்லாருஞ் சம்பவித்தவைகளைப் பார்த்தபொழுது, தங்கள் மார்புகளில் அடித்துக்கொண்டு திரும்பினார்கள். (லூக்கா. ௨௩. அதி. ௪௭-௪௮.)

28. அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

ஓய்வு நாளுக்குப் பின்பு முதல் நாளின் அதிகாலையில் அவர் எழுந்திருந்த பின்பு முதலாவது மகுதலனூராளாகிய மரியாளுக்குக் காணப்பட்டார். அவராலே ஏழு பேய்களினின்று நீக்கப்பட்டவள் அவளே. அவள் புறப்பட்டுப் போய் அவருடனே இருந்தவர்களுமாய்ப் புலம்பி அழுதுகொள்ளுகிறவர்களுமாய் இருந்த (சீஷர்களுக்கு) அறிவித்தாள். அவர் உயிர் அடைந்து அவளாலே காணப்பட்டாரென்று அவர்கள் கேள்விப்பட்டும், அ

Digitized by Google

தை நம்பவில்லை. அதின் பின்பு அவர்களில் இரண்டுபேர் ஒரு ஊருக்குப் புறப்பட்டுப் போகையில், அவர்களுக்கும் அவர் மறுரூபத்தோடே காணப்பட்டார். அவர்களுந் திரும்பி அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள். அவர்களையும் இவர்கள் நம்பவில்லை. பின்பு அவர் போசனபந்தியில் இருந்த பதினொருவருக்குங் காணப்பட்டுத் தாம் உயிரோடெழுந்து வந்ததைக் கண்டபேர்களுடைய (வார்த்தையை) அவர்கள் நம்பாமல் இருந்தபடியால், அவர்களுடைய அவிசுவாசத்துக்காகவும் இருதயத்திலுள்ள கடினத்துக்காகவும் அவர்களைக் கடிந்துகொண்டார். (மாற்கு. ௧௬. அதி. ௧௨-௰௪.) அப்படி அவர்கள் பேசிக்கொள்ளுகையில், இயேசுவானவர் தாமே அவர்களுக்குள்ளே நின்று உங்களுக்குச் சமாதானசவுக்கியம் உண்டாவதாகவென்று அவர்களுடனே சொன்னார். அவர்கள் அவரை ஒரு ஆவியென்று எண்ணிக் கலக்கமும் பயமும் அடைந்தார்கள். அப்பொழுது அவர் அவர்களை நோக்கி நீங்கள் என்னத்திற்காக

Digitized by Google

க்கலங்குகிறீர்கள்? என்னத்திற்காக உங்கள் இருதயங்களிற் சந்தேகங்கள் எழும்புகின்றன? என் கைகளையுங் கால்களையும் பாருங்கள். நான்தான் இருக்கிறேன். என்னைத் தொட்டுப் பாருங்கள். நீங்கள் காண்கிறபடி எனக்கு மாமிசமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கும் இல்லையேயென்று சொல்லி, கைகளையுங் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார். அப்படி இருந்தும் சந்தோஷத்தினாலே அவர்கள் பின்னும் விசுவாசியாமற் பிரமிப்பாய் இருக்கிற பொழுது, போசனத்துக்கு ஏதாகிலும் இங்கே உண்டாவென்றார். அப்பொழுது அவர்கள் பொரித்த மீன் கண்டத்தையுந் தேன் கூட்டுத் துணுக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவைகளை அவர் எடுத்து அவர்களுக்கு முன்பாகப் புசித்து, பின்பு அவர்களுடனே சொன்னதாவது, மோசேயின் பிரமாணப் புத்தகத்திலேயுந் தீர்க்கதரிசனப் புத்தகங்களிலேயும் சங்கீதப் புத்தகத்திலேயும் என்னைக் குறித்து எழுதியிருக்கிற யாவும் நிறைவேற

வேண்டுமென்று நான் உங்களோடே இருந்த காலத்திலே உங்களுடனே சொல்லிக்கொண்ட சங்கதிகள் இவைகளேயென்று சொல்லி, பின்பு வேத வாக்கியங்களை அவர்கள் அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனசுக்குப் புத்தி கொடுத்து அவர்களுடனே சொன்னதாவது, இவ்விதமாய் எழுதியிருக்கின்றது. அல்லாமலும் அந்தப்படியே கிறிஸ்து பாடுபடவும் மூன்றாம் நாளிலே மரித்தோரில் இருந்து எழுந்திருக்கவும், எருசலேந் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினால் மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் பிரசங்கிக்கவும் வேண்டியதாய் இருந்தது. நீங்களே அவைகளுக்குச் சாட்சிகளாய் இருக்கிறீர்கள். (லூக்கா. ௨௪. அதி. ௪௪,—௪௮.) அப்பொழுது யேசுவானவர் வந்திருந்த காலத்திலே பன்னிருவரில் ஒருவனாகிய தீதிமு என்னப்பட்ட தோமா அவர்களுடனே கூட இருக்கவில்லை. ஆதலால் மற்றச் சீஷர் அவனை நோக்கி நாங்கள் கர்த்தரைக் கண்டோமென்றார்கள். அதற்கு

அவன் சொன்னது, அவருடைய கைகளி
ல் ஆணிகள் அடித்திருந்த தழும்பை நா
ன் கண்டு அந்தத் தழும்பிலே என் விரலை
வைத்து அவருடைய விலாவிலே என்
கையை வையாவிட்டால் விசுவாசிக்க மா
ட்டேனென்றான். எட்டு நாளுக்குப் பின்
பு அவருடைய சீஷர் மறுபடியும் அ
றைக்குள்ளே இருந்தார்கள். தோமாவும்
அவர்களுக்குள்ளே இருந்தான். கதவுக
ள் பூட்டப்பட்டிருந்தன. அப்பொழு
து யேசுவானவர் தோன்றி நடுவே நின்று
உங்களுக்குச் சமாதான சவுக்கியம் உண்
டாவதாகவென்று சொல்லி, பின்பு தோ
மாவை நோக்கி உன் விரலை இங்கே நீட்
டி என் கைகளைப் பார். மேலும் உன்
கையை நீட்டி என் விலாவிலேவை. அவி
சுவாசியாய் இராமல் விசுவாசியாய் இரு
ப்பாயாகவென்றார். அதற்கு மாறுத்தர
மாகத் தோமா அவரை நோக்கி என்
கர்த்தாவே, என் தேவனே, என்றான்.
(யோவான. உ௰. அதி. உ௪—உ௮.)
பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் ம
றுதலித்துக் கொலைபாதகனை மனிதனை

Google

உங்களுக்காக விடுதலையாக்க வேண்டும் என்று கேட்டீர்கள். சீவனையுடைய அதிபதியையே கொலைசெய்தீர்கள். அவரைப் பராபரன் மரித்தோரில் இருந்தெழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். (நடபடி. ௩. அதி. ௰௪. ௰௫.) உபகாரத்தைப்பெற்றுக்கொண்ட வியாதிக்காரனை இவன் எதினாலே சொஸ்தம் அடைந்தானென்று இன்றைக்கு எங்களிடத்தில் விசாரிக்கிறபடியால், உங்களாலே சிலுவைமரத்தில் அறையப்பட்டவருமாய் பராபரனாலே மரித்தோரில் இருந்தெழுப்பப்பட்டவருமாய் இருக்கிற நாசரேத்தூராராகிய யேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று நீங்களும் இஸ்ரயேற் சனங்கள் எல்லாரும் அறிந்திருப்பீர்களாக. (நடபடி. ௪. அதி. ௯, ௰.) மரித்தோரில் இருந்தெழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்றும் மரணம் இனி அவரை ஆண்டுகொள்ளாதென்றும் நாம் அறிந்தபடியால் அவருடனே கூடப் பிழைத்தும் இருக்கலாமென்

Digitized by Google

று நம்புகிறோம். (உரோமர். ௬. அதி. ௩.)
அன்றியுஞ் சகோதரரே நான் உங்களு
க்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தே
னே. நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு
அதிலே நிலைநிற்கிறீர்களே, அல்லாமலு
ம் நீங்கள் வீணாய் விசுவாசியாமல் நான் உ
ங்களுக்குப் பிரசங்கித்தவிதமாய் அதைக்
கைக்கொண்டிருந்தால் இரட்சிப்பு உங்
களுக்கு அதினாலே கிடைக்குமே. அந்த
ச் சுவிசேஷத்தை நான் உங்களுக்கு மறு
படியும் அறிவிக்கிறேன். நான் அடைந்
ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்
பிவித்ததும் என்னவென்றால் கிறிஸ்து
வானவர் வேத வாக்கியங்களின் படி நம்
முடைய பாவங்களுக்காக மரித்தும்,
வேத வாக்கியங்களின்படி அடக்கம்ப
ண்ணப்பட்டும் மூன்றாம் நாளில் எழு
ந்துமிருக்கிறார். கேபாவுக்கும் பின்பு
பன்னிருவருக்குந் தரிசனையானார். அத
ன் பின்பு அவர் ஐந்நூறுபேருக்கு அதிக
மான சகோதரருக்கும் ஒருமிக்கத் தரி
சனையானார். அவர்களிற் சிலர் மாத்திரம்
நித்திரை அடைந்தார்கள். மற்றநேகமான

Digitized by Google

வர்கள் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள். பின்பு யாக்கோபுக்கும் அதன் பின்பு அப்போஸ்தலர் எல்லாருக்குந் தரிசனமானார். எல்லாருக்கும் பின்பு எனக்குந் தரிசனமானார். நான் பூரண கருப்பத்தில் பிறவாமல் அதற்குமுன் பிறந்தபிள்ளையைப்போல் அப்போஸ்தலனானவன். (௧. கொரி. ௰௫. அதி. ௪—அ)

29. அவர் பரமண்டலத்துக்கு எழுந்தருளினார்.

கர்த்தர் அவர்களுடனே பேசிக்கொண்ட பின்பு அவர் பரமண்டலத்துக்கு ஏற்றப்பட்டுத் தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார். (மாற்கு. ௰௬. அதி. ௰௯.) அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர் அவர்களை விட்டுப் பிரிந்து பரமண்டலத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். (லூக்கா. ௨௪. அதி. ௫௧.) இவைகளைச் சொன்ன பின்பு அவர் அவர்களுடைய கண்களுக்கு முன்பாக உயர்த்தப்பட்டார். அவர்கள் அவரைக் காணாதபடிக்கு ஒருமேகம் அவரை எடுத்துக்கொண்டுபோயிற்று. (நடபடி. ௧. அதி. ௯.)

Digitized by Google

அவர் ஏறினதால், அதற்குமுன்னே மிக வுந் தாழ்ந்த பூதலங்களில் இறங்கினாரென்று விளங்குகின்றது அல்லவா! இறங்கிவந்த அவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக எல்லா வானங்களி மேலும் ஏறினவாரயும் இருக்கிறார். (எபே. ச. கூ, ம.) அந்தப்படி கிறிஸ்துவானவர் இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சன்னிதானத்திலே தோன்றியிருக்கும் படிக்கு மெய்யானவைகளுக்குத் திருட்டாந்தங்களாகிய கையாற் செய்யப்பட்ட பரிசுத்த ஸ்தலங்களில் அல்ல, பரமண்டலத்திலே தானே பிரவேசித்திருக்கிறார். (எபி. கூ. அதி. உச.)

30. அவர் பேரில் விசுவாசித்து மனந்திருப்புகிறவர்கள் சகலருக்கும் தேவன் இரட்சிப்பைக் கொடுப்பேனென்று சொல்லுகிறார்.

அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகத்திலெங்கும் போய்ச் சிருட்டிக்கப்பட்டிருக்கிற யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுங்கள். (மாற்கு. யசு. அதி. யரு.) ஆவியும் மணவாட்டி

Digitized by Google

யும் வரவென்கிறார்கள் (இவைகளைக்) கே
ட்கிறவனும் வாவென்பானாக. தாகமாயி
ருக்கிறவன் வரக் கடவன். விருப்பமுள்
ளவன் சீவ தண்ணீரைக் கைமாறில்லாம
ல் வாங்கக் கடவன். (வெளிப். உஉ. அதி.
௰௭.) என் வசனங்களுக்குச் செவி கொ
டுத்து என்னை அனுப்பினவரை விசுவாசிக்
கிறவனுக்கு நித்திய சீவன் உண்டு. அவ
ன் ஆக்கினைத் தீர்ப்புக்குள் அகப்படாம
ல் மரணத்தை விட்டு நீங்கிச் சீவனுக்கு
ட்பட்டிருக்கிறானென்று மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன், (யோ. ௫.
அதி. உ௪.) என்னத்தினாலெனில் தேவன் த
ம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவா
சிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போ
காமல் நித்திய சீவனை அடையும்படிக்கு
அவரையே கொடுத்து இவ்வளவாய் உலக
த்தாரிடத்தில் அன்பாய் இருந்தார். குமார
னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் நித்
ய சீவனையுடையவனாய் இருக்கிறான். குமா
ரனை விசுவாசியாதவன் சீவனைக் காண்ப
தில்லை. (யோவா. ௩. அதி. ௰௬. ௩௬.)
குமாரனைக் கண்டு அவரிடத்தில் விசுவா

Digitized by Google

சமாய் இருக்கிறவன் எவனோ அவன் நி த்திய சீவனை அடையும்படிக்கும் கடைசி நாளிலே நான் அவனை எழுப்பும்படிக்கும் என்னை அனுப்பினவருடைய சித்தமாகவே இருக்கின்றதென்றார். என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனுக்கு நித்திய சீவன் உண்டென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (யோவான். ௬. அதி. ௪௰, ௪௭.) அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்வானென்று தீர்க்கதரிசிகள் எல்லாரும் அவரைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறார்களென்றான். (நடபடி. ௰. அதி. ௪௩.) அதற்கு அவர்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொள்வாயாக, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்களென்று சொன்னார். (நடபடி. ௰௬. அதி. ௩௧.) நீதிமான்களாக்கப்படுவதற்கு இருதயத்தோடே விசுவாசிக்கவும் இரட்சிக்கப்படுவதற்கு வாயினாலே அறிக்கையிடவும்



Digitized by Google

வேண்டுவது. (உரோமர். ௰. அதி. ௯.)

31. பரிசுத்தமாய் நடக்கிறவர்கள் மாத்திரமே கிறிஸ்துபேரில் விசுவாசித்து மனந்திருப்பினவர்களாய் இருக்கிறார்கள்.

என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியுங் கிரியைகள் இல்லாதவனானால், அவனுக்கு என்னபிரயோசனம்வரும்? விசுவாசம் அவனை இரட்சிக்குமா? சகோதரன் அல்லது சகோதரி வஸ்திரமில்லாதவர்களாயும் நாடோறும் வேண்டிய பிழைப்பில்லாதவர்களாயும் இருக்கும்பொழுது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி, நீங்கள் சமாதானத்தோடே போய்க் குளிர்காய்ந்து பசியாறுங்களென்றுசொல்லிச் சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக்கொடாவிட்டால் அதினால் என்னபிரயோசனம் இருக்கும்? அப்படிப்போல விசுவாசமுங் கிரியைகள் இல்லாதிருந்தால், தனியே இருப்பதினாலே செத்ததாய் இருக்கும். ஒருவன் வந்து உனக்குவிசுவாசம் உண்டு, எனக்குக் கிரியைகள் உண்டு.

ரியைகள் இல்லாமல் உன்விசுவாசத்தை

Digitized by Google

எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்
தை என் கிரியைகளாலே காண்பிக்கிறே
னென்பான். பராபரன் ஒருவர் உண்டென்
று விசுவாசிக்கிறாய். அப்படிச்செய்கிறது
சரிதான். பசாசுக்களும் அப்படி விசுவா
சித்து நடுங்குகிறார்கள். ஆ! வீணான மனி
தனே கிரியைகளில்லாத விசுவாசஞ் செத்
ததென்று அறிய விரும்புகிறாயா? ஆகை
யால் ஆவி இல்லாதசரீரஞ் செத்ததாய் இ
ருக்கிறதுபோலக் கிரியைகள் இல்லாத வி
சுவாசமுஞ் செத்ததாய் இருக்கின்றது.
(இயாக்கோபு. ௨. அதி. ௰௪-௨௰,௨௬.)
ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷஞ்,
சமாதானம், நீடியசாந்தம், தயவு, நற்கு
ணம், உண்மை, பொறுமை, இச்சையட
க்கம், இப்படிப்பட்டவைகளைச் செய்கிற
வர்களுக்கு நியாயப்பிரமாணம் விரோ
தமாய் இருக்கிறதில்லை. (கலாத்தியர்.
௫. அதி. ௨௨, ௨௩.) நீங்கள் உங்களை அ
ந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரி
யமான ஒளிக்கு வரவழைத்தவருடைய
புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத்
தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும்

Digitized by Google

இராசரீக்கமான ஆசாரியக் கூட்டமாயும் பரிசுத்தவான்களாயும் அவருக்குச் சொந்தமான சனமாயும் இருக்கிறீர்கள். (க. பேதுரு. உ. அதி. கூ.)

32. மனிதர் மனந்திரும்பிக் கிறிஸ்துநாதர் பேரில் விசுவாசித்து நன்னடக்கையுள்ளவர்களாகும்படி பரிசுத்தாவியானவர் ஏவிவிடுகிறார்.

உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டுக் கல்லான இருதயத்தை உங்கள் மாங்கிஷத்தில் இருந்து எடுத்துப்போட்டுச் சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே நம்முடைய ஆவியைத் தந்து உங்களை நமது கட்டளைகளிலே நடக்கவும் நமது நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவோம். (எசேக். ௩௬. அதி. உ௬, உ௭.) மாமிசத்திற்கேற்றபடி சீவனம் பண்ணினாற் சாவீர்கள். ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்துப்போட்டாற் பிழைப்பீர்கள். மேலும்

Digitized by Google

எவர்கள் பராபரனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள்பராபரனுடைய புத்திரராய் இருக்கிறார்கள். அந்தப்படி நீங்களும் பின்னும் பயப்படுகிறதற்கு அடிமையின் ஆவியை அடையாமல், அப்பா, பிதாவேயென்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியையே அடைந்திருக்கிறீர்கள். நாம் தேவனுடைய புத்திரராய் இருக்கிறதைக் குறித்து ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூடச் சாட்சிகொடுக்கிறார். அல்லாமலும் நாம் தகுதியாய்ச் செபம்பண்ண வேண்டுவதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், (தேவ) ஆவியானவர் தாமே சொல்லக்கூடாத பெருமூச்சுகளாலே நமக்காக வேண்டுதல் பண்ணி நமது பலவீனங்களில் (நமக்கு) உதவி செய்கிறார். (உரோமர். அ. அதி. ௰௪—௰௬, ௨௬.) (முன்னே) நீங்களுஞ் சிலர் இப்படிப்பட்டவர்களாயி நடந்தீர்கள், இப்பொழுது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலும் நமது பராபரனுடைய ஆவியினாலுங் கழு

வப்பட்டும் பரிசுத்தமாக்கப்பட்டும் நீதிமான்களாக்கப்பட்டும் இருக்கிறீர்கள். (௧. கொரிந்தர். ௬. அதி. ௰௧.) அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாள்வரைக்கும் முத்திரையாகப் பெற்ற கர்த்தருடைய பரிசுத்தாவியைத் துக்கப்படுத்தாதிருப்பீர்களாக. (எபேசியர். ௪. அதி. ௩௰.) மேலும் நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவனுடைய அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (உரோமர். ௫. அதி. ௫.) நாம் செய்த நீதிக்கேற்ற கிரியைகளின் நிமித்தமல்ல மறுபிறப்பாகிய முழுக்கினாலும் பரிசுத்தாவி செய்கிற புதிதாக்குதலினாலுமே அவர் தமது சுய இரக்கத்தினாலே நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு நித்திய சீவனைக் குறித்து உண்டாயிருந்த நம்பிக்கையின்படி சுதந்திரராகும்படிக்கு அவர் நமது இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலமாய் அந்தப் பரிசுத்த ஆவியை நமக்கு

Digitized by Google

ச் சம்பூரணமாய்க் கொடுத்தருளினார். (தீத்து. ௩. அதி. ௫,-௭.) நாங்கள் ஆவியைக் கொண்டு விசுவாசத்தினாலே நீதி வருதற்கு நம்பிக்கையோடே காத்திருக்கிறோம். (கலாத்தியர். ௫. அதி. ௫.) அவர்வந்து, பாவத்தையும் நீதியையும் நியாயத்தீர்ப்பையுங் குறித்து உலகத்தாருக்கு மெய்யறிவைக்கொடுப்பார். (யோவான். ௰௬. அதி. ௮.) ஆவியின் கனி சகலவித நற்குணமும், நீதியுஞ், சத்தியமுமானது. (எபேசியர். ௫. அதி. ௯.) ஆவியினாலே சர்ப்பூரணமான செபமும் விண்ணப்பமும் பண்ணி எப்பொழுதும் வேண்டிக்கொண்டு இதற்காக மிகுந்த மன உறுதியோடுஞ் சகல பரிசுத்தவான்களுக்காகவும் விண்ணப்பம் பண்ணுதலோடும் விழித்துக்கொள்வீர்களாக. (எபேசியர். ௬. அதி. ௰௮.) கத்தராலே அன்புகூரப்பட்ட சகோதரராகிய நீங்கள் ஆவியினாற் பரிசுத்தமாக்கப்படுகிறதினாலுஞ் சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும் படிக்கு ஆதிமுதற் பராபரன் உங்களைத்

Digitized by Google

தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக் குறித்து எப்பொழுதும் பராபரனைத் தோத்திரிக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம். (உ. தெசலோனிக்கேயர். உ. அதி. ௰௩.) பொந்து, கலாத்தியா, கப்பத்தொக்கியா, ஆசியா, பித்தினியாத் தேசங்களிலே சிதறிவந்திருக்கிற அந்நிய நாட்டாருக்கு இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுகிறதாவது, கிருபையும், சமாதானமும், உங்களுக்குச் சம்பூரணமாய் உண்டாகக் கடவது. (ஆகையால்) நீங்கள் உண்மையான சகோதர சிநேகத்திற்கேதுவாக ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து இப்படி உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டிருக்கச் சுத்த இருதயங்களோடே ஊக்கமாய் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருப்பீர்களாக. (க. பேதுரு. க. அதி. உ. உஉ.) அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரிடத்தில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனிடத்தில் நிலைத்திருக்கிறார். அவர் நம்மிடத்தில் நிலைத்திருக்கிறதை அவர்

ர் நமக்குத் தந்த ஆவியினாலே அறிந்திருக்கிறோம். (க. யோவான். ௩. அதி. உச.) அவர் தம்முடைய ஆவியில் நமக்குக் கொடுத்ததினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். (க. யோவான். ச. அதி. ௰௩.) இயேசுவானவர் சொன்னது ஒருவன் சலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசிக்க மாட்டானென்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன். (யோவான். ௩. அதி. ரு.) பராபரனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறபடியால் நீங்கள் மாமிசத்திற்கேற்றபடியல்ல ஆவிக்கேற்றபடி நடக்கிறவர்களாய் இருக்கிறீர்கள். கிறிஸ்துவினுடைய ஆவியையுடையவனல்லாதவன் அவருடையவன் அல்ல. (உரோமர். அ. அதி. கூ.)

33. மனிதருக்கு முன்பாகக் கிறிஸ்துவை அறிக்கையிட வெட்கப்படுகிறவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல.

மனிதர்களுக்கு முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவ

Digitized by Google

தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக் குறித்து எப்பொழுதும் பராபரனைத் தோத்திரிக்கக் கடனாளிகளாய் இருக்கிறோம். (௨. தெசலோனிக்கேயர். ௨. அதி. ௰௩.) பொந்து, கலாத்தியா, கப்பத்தொக்கியா, ஆசியா, பித்தினியாத் தேசங்களிலே சிதறிவந்திருக்கிற அந்நிய நாட்டாருக்கு இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுகிறதாவது, கிருபையும், சமாதானமும், உங்களுக்குச் சம்பூரணமாய் உண்டாகக் கடவது. (ஆகையால்) நீங்கள் உண்மையான சகோதர சிநேகத்திற்கேதுவாக ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து இப்படி உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டிருக்கச் சுத்த இருதயங்களோடே ஊக்கமாய் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருப்பீர்களாக. (௧. பேதுரு. ௧. அதி. ௨. ௨௨,) அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரிடத்தில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனிடத்தில் நிலைத்திருக்கிறார். அவர் நம்மிடத்தில் நிலைத்திருக்கிறதை அவ

ர் நமக்குத் தந்த ஆவியினலே அறிந்திருக்கிறோம். (க. யோவான். ௩. அதி. உச.) அவர் தம்முடைய ஆவியில் நமக்குக் கொடுத்ததினலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். (க. யோவான். ச. அதி. ௰௩.) இயேசுவானவர் சொன்னது ஒருவன் சலத்தினலும் ஆவியினலும் பிறவாவிட்டால் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசிக்க மாட்டானென்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன். (யோவான். ௩. அதி. ரு.) பராபரனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறபடியால் நீங்கள் மாமிசத்திற்கேற்றபடியல்ல ஆவிக்கேற்றபடி நடக்கிறவர்களாய் இருக்கிறீர்கள். கிறிஸ்துவினுடைய ஆவியையுடையவனல்லாதவன் அவருடையவன் அல்ல. (உரோமர். அ. அதி. கூ.)

33. மனிதருக்கு முன்பாகக் கிறிஸ்துவை அறிக்கையிட வெட்கப்படுகிறவர்கள் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல.

மனிதர்களுக்கு முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனே அவ

Digitized by Google

னை நானும் பரமண்டலங்களில் இருக்கி
ற என் பிதா முன்பாக அறிக்கைபண்ணு
வேன். மனிதர் முன்பாக என்னை மறுத
லிக்கிறவன் எவனே அவனைநானும் பரம
ண்டலங்களில் இருக்கிற என் பிதாவின் மு
ன்பாக மறுதலிப்பேன். (மத்தேயு. ௰.
அதி. ௩௨, ௩௩.) விசுவாசத்தினால் வரு
கிற நீதி சொல்லுகிறதாவது இந்தச் சங்
கதி உனக்குச் சமீபமாய் உன்வாயிலும்
உன் இருதயத்திலும் இருக்கின்றதென்று
சொல்லுகின்றது. அந்தச் சங்கதி நாங்கள்
பிரசங்கிக்கிற விசுவாசத்தின் சங்கதிதான்.
என்னவென்றால், நீதிமான்களாக்கப்படு
வதற்கு இருதயத்தோடே விசுவாசிக்க
வும் இரட்சிக்கப்படுவதற்கு வாயினாலே
அறிக்கையிடவும் வேண்டுவதால், நீ உன்
வாயினாலே கர்த்தராகிய யேசுவை அறிக்
கையிட்டு தேவன் அவரை மரித்தோரில்
இருந்தெழும்பப்பண்ணினாரென்று உன்
இருதயத்தோடே விசுவாசித்தால் இரட்
சிக்கப்படுவாய். (உரோமர். ௰. அதி.
அ—௰) மேலும் விளக்கைக் கொளுத்தி
மரக்காலால் மூடி வையாமல் ஒரு தண்டி

Digitized by Google

ன்மேலே வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டில் இருக்கிற யாவருக்கும் பிரகாசங் கொடுக்கும். அப்படியே மனிதரானவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதாவின் மகிமை விளங்கப்பண்ணத்தக்கதாக உங்கள் ஒளி அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தே. ரு. அதி. ௰ரு, ௰சு.) இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனிடத்திலே தேவன் நிலைத்திருக்கிறார். தேவனிடத்தில் அவனும் நிலைத்திருக்கிறான். (க. யோவா. ச. அதி. ௰ரு.)

34. அவருடனே உடன்பாடு பண்ணுகிறதற்குப் புறம்பான அடையாளமாக ஞானஸ்நானத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

நீங்கள் புறப்பட்டு உலகத்தார் எல்லாரையுஞ் சீஷராக்கிப் பிதாக் குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள். (மத்தே. உஅ. அதி. ௰கூ.) விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவன்

Digitized by Google

ஆக்கினைக்குள்ளாக்கப்படுவான். (மாற்கு. ௰௬. அதி. ௰௬.) இயேசுவானவர் சொன்னது, ஒருவன் சலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டாற் தேவனுடைய இராச்சியத்திற் பிரவேசிக்க மாட்டானென்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன். (யோவான். ௩. அதி. ௫.) பேதுரு சொன்னதாவது உங்களுக்கு பாவ மன்னிப்புண்டாகும் படிக்கு நீங்கள் மனந்திருப்பி ஒருவனொருவனாய் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியாகிய இலவையும் பெறுவீர்கள். (நடபடி. ௨. அதி. ௩௮.) இவ்விதமாய் அவர்கள் வழி நடந்து போகையில் தண்ணீருள்ள ஓரிடத்திலே சேர்ந்த பொழுது, மந்திரியானவன் சொன்னது இதோ தண்ணீர். நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறதற்குத் தடை என்னவென்றான். அதற்குப் பிலிப்பு சொன்னது, நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தாற் பெற்றுக்கொள்ளலாமென்றான். அவன் சொன்னது இ

யேசுக்கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேனென்று சொல்லி இரதத்தை நிறுத்தச் சொன்னான். பின்பு பிலிப்புவும் மந்திரியும் இருவரும் இறங்கித் தண்ணீரிற் பிரவேசித்தார்கள். அங்கே அவனுக்கு ஞானஸ்நானங் கொடுத்தான். (நடபடி. ௮. அதி. ௩௭, ௩௮.)

35. தம்முடைய மரணத்தை நாம் நினைவுகூருகிறதற்காக இராப்போசனமென்ற திரு விருந்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

அவர்கள் போசனம் பண்ணுகையில் இயேசுவானவர் அப்பத்தை எடுத்துக் கொண்டு ஆசீர்வதித்து அதைப் பிட்டுச் சீஷர்களுக்குக் கொடுத்து இது என்னுடைய சரீரமாய் இருக்கின்றது. நீங்கள் எடுத்துப் புசியுங்களென்றார். பின்பு அவர் பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரம் பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்து நீங்கள் எல்லாரும் இதிற் பானம் பண்ணுங்கள். இது அநேகருக்குப் பாவ மன்னிப்பு உண்டாகும்படிக்குப் புதிய உடம்படிக்கைக்கே



Digitized by Google

ற்றதாய்ச் சிந்தப்படுகிற என் இரத்தமாய்
இருக்கின்றது.(மத்தே. உ௬. அதி. உ௬.-
உஅ.)நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக்
கத்தரால் அடைந்தேன். என்னவெனில்,
கத்தராகிய இயேசு தம்மைக் காட்டிக்
கொடுக்கப்பட்ட அன்றிராத்திரியிலே அ
ப்பத்தை எடுத்துக்கொண்டு தோத்திர
ம் பண்ணி அதைப் பிட்டு நீங்கள் வாங்
கிப் புசியுங்கள். இது உங்களுக்காகப்
பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாய் இ
ருக்கின்றது. என்னை நினைத்துக்கொள்ளு
ம் படிக்கு இப்படிச் செய்யுங்களென்று
ர். அந்தப்படியே அவர் இராப் போசன
ம்பண்ணின பின்பு பாத்திரத்தையும் எடு
த்துக்கொண்டு இந்தப் பாத்திரம் என்னு
டைய இரத்தத்தினாலே புதிய உடம்படி
க்கையாய் இருக்கின்றது. நீங்கள் பானம்
பண்ணும் பொழுதெல்லாம் என்னை நினை
த்துக்கொள்ளும் படிக்கு இப்படிச் செ
ய்யுங்களென்றார். ஆகையாற் கத்தர் வரு
மளவும் நீங்கள் இந்த அப்பத்தைப் புசி
த்து இந்தப் பாத்திரத்திற் பானம்பண்
ணும் பொழுதெல்லாம் அவருடைய மர

Digitized by Google

ணத்தைக் கூறுகிறீர்கள். (க. கொரிந். ௰௫. அதி. உ௩—உ௯.)

36. நாம் எல்லாரும் மரித்தோரில் இருந்து எழுப்பப்படுவோம்.

மரித்தோர் எழுந்திருப்பார்களென்பதை மோசேயும் முட்செடியைக் குறித்து எழுதின சரித்திரத்திலே காண்பித்தார். எப்படியெனில் அவர் பராபரனை ஆபிரகாமினுடைய தேவனென்றுஞ் ஈசாக்கினுடைய தேவனென்றும் இயாக்கோபினுடைய தேவனென்றுஞ் சொல்லியிருக்கிறார். கத்தர் மரித்தோருடைய தேவனாய் இராமற் சீவனுள்ளோருடைய தேவனாய் இருக்கிறார். அவர்கள் எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களேயென்றார். (லூக்கா. உ௰. அதி. ௩எ, ௩அ.) மரித்தோராகிய நீதிமான்களும் அநீதிமான்களும் மறுபடியும் உயிரோடெழுந்திருப்பார்களென்று இவர்களும் அடைந்துகொண்டிருக்கிற நம்பிக்கையைத் தேவன் மேல் வைத்திருக்கிறேன். (நடபடி. உ௪. அதி. ௰௫.) இதைக் குறித்து ஆச்சரியப்படாதிருங்கள். என்

னத்தினாலெனிற் பிரேதக் குழிகளிலுள்
ள யாவரும் அவனுடைய சத்தத்தைக்
கேட்குங் காலம் வரும். (யோவா ரு. அ
தி. உஅ.) அல்லாமலும் மரித்தோர் தே
வனுடைய குமாரன் சத்தத்தைக்கேட்கு
ங் காலம் வருகின்றது. இப்பொழுதே அ
து வந்திருக்கின்றது. அதைக் கேட்கிறவர்
கள் பிழைப்பார்களென்று மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன். (யோ
வான். ரு. அதி. உரு) நாம் கிறிஸ்து
வின் மேலே இம்மைக்காக மாத்திரம் ந
ம்பிக்கையாய் இருந்தால், எல்லா மனிதர்
களிலும் நாம் அதிக நிற்பாக்கியமுள்ளவ
ர்களாய் இருப்போமே. அப்படியல்ல கி
றிஸ்து நித்திரை அடைந்தவர்களில் முத
ற்பாகமாக மரித்தோரில் இருந்து எழுந்
திருக்கிறார். அந்தப்படி ஒரு மனிதனால்
மரணம் உண்டானபடியினாலே ஒரு மனி
தனாலும் மரணத்தினின்று உயிரோடெ
ழும்புதலும் உண்டாயிருக்கின்றது. ஆதா
மினாலே எல்லாரும் மரிக்கிறது போலக்
கிறிஸ்துவினாலே எல்லாரும் உயிராக்கப்
படுவார்கள். அவனவன் தன் இன வரிசை

Digitized by Google

யிலே அப்படியாவான். முதற் பாகமா
னவர் கிறிஸ்து. பின்பு அவர் வரும்
பொழுது அவரைச் சேர்ந்தவர்கள் எ
ழுந்திருப்பார்கள். (க. கொரி. ௰ரு.
அதி. ௰௯—௨௩.) மரித்தோர் எப்ப
டி எழும்புவார்கள்? எப்படிப்பட்ட ச
ரீரத்தோடே வருவார்களென்று கேட்
டால், ஆ! புத்தியீனனே! நீ விதைக்கிற
தானியங் கெடாவிட்டாற் புதிதான பயி
ர் தோன்றமாட்டாதே. மேலும் நீ வி
தைக்கிற பொழுது இனிமேல விளையும்
உடலை விதையாமற் கோதும்பை அல்ல
து மற்றொரு தானியத்தினுடைய வெறு
ம் மணியையே விதைக்கிறாய். அதற்குத்
தேவன் தமது சித்தத்தின் படியே உட
லைக் கொடுக்கிறார். அந்தப்படி விதை வ
கைகள் யாவற்றிற்கும் அதற்கதற்கேற்ற
உடல் உண்டு. எல்லா மாமிசமும் ஒரே
விதமான மாமிசம் அல்ல. மனிதருடை
ய மாமிசமும் வேறே, மிருகங்களுடை
ய மாமிசமும் வேறே, மச்சங்களுடைய
தும் வேறே, பறவைகளுடையதும் வே
றே, பரமண்டலத்திற்குரிய தேகங்க

Digitized by Google

ளும் உண்டு. பூமிக்குரிய தேகங்களும் உண்டு. பரமண்டலத்திற்குரிய தேகங்களுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய தேகங்களுடைய மகிமையும் வேறே, சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, அவைகளில் ஒரு நட்சத்திரத்தினுடைய மகிமை மற்றொரு நட்சத்திரத்தின் மகிமைக்கு மேற்படுகின்றதே. அப்படிப்போல மரித்தோர் உயிரோடெழும்புதலும் உண்டாயிருக்கும். அழிவுள்ள சரீரம் விதைக்கப்பட்டுப் பின்பு அழிவில்லாமையாய் எழுந்திருக்கும். கனவீனமான சரீரம் விதைக்கப்பட்டுப் பின்பு மகிமையாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ள சரீரம் விதைக்கப்பட்டுப் பின்பு பலமாய் எழுந்திருக்கும். சிவனுன சரீரம் விதைக்கப்படும். ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். இரத்தமாமிசமுடைய சரீரமும் உண்டு, ஆவிக்குரிய சரீரமும் உண்டு. ஆனதால் வேதத்திலே எழுதியிருக்கிறபடி முந்தின மனிதனுகிய ஆதாம் சி

வாத்துமாவானான். பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆவியான சரீரம் முந்தினதாய் இராமல் இரத்த மாமிசமுடைய சரீரமே முந்தினதாய் இருக்கின்றது. பின்பு ஆவியான சரீரம் உண்டாம். முந்தின மனிதன் பூமியின் மண்ணானவன். இரண்டாம் மனிதன் பரமண்டலத்துக்குரிய கத்தர். மண்ணானவன் எப்படியோ அப்படி மண்ணானவர்களும் இருப்பார்கள். பரமண்டலத்திற்குரியவர் எப்படியோ அப்படிப் பரமண்டலத்திற்குரியவர்களும் இருப்பார்கள். மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறது போலப் பரமண்டலத்திற்குரியவருடைய சாயலையும் அணிந்து கொள்வோம். சகோதரரே, மாமிசமும் இரத்தமும் தேவனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிக்கக் கூடாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிக்கமாட்டாது. ஆனதால் இவைகளைச் சொன்னேன். மேலும் நான் உங்களுக்கு இரகசியத்தை அறிவிக்கிறேன். (என்னவெனில்) நாம் எல்லாரும் நித்திரையடை

Digitized by Google

ந்து போவதில்லை. ஆகிலும் எல்லாருங் கடைசி எக்காளந் தொனிக்கும் பொழுது, ஒரு நிமிஷத்திலே ஒரு இமைப் பொழுதிலே மறுரூபமாக்கப்படுவோம். எக்காளந் தொனிக்குமே. அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழும்புவார்கள். அன்றியும் அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கினமாகிய இது சாவாமையையுந் தரித்துக்கொள்ள வேண்டியபடியால் நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அந்தப்படி அழிவுள்ளதாகிய இது அழியாமையையுஞ் சாவுக்கினமாகிய இது சாவாமையையுந் தரித்துக்கொள்ளும் பொழுது, மரணஞ் சயமாக விழுங்கப்பட்டதென்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். ஆ! மரணமே, உன் கூர்மை எங்கே? பாதாளமே, உன் சயம் எங்கே? மரணத்தின் கூர்மை பாவம், பாவத்தின் பலம் நியாயப்பிரமாணம். நம்முடைய கத்தராகிய இயேசுவினாலே நமக்குச் சயங் கொடுத்திருக்கிற பராபரனுக்குத் தோத்திரம் உண்டாவதாக. (க. கொ. ய௫. ரு௫, -ருஎ.)

37. இவ்வுலகத்திலே நாம் நடந்துகொள்ளுகிற நடக்கைக்குத் தக்கதாக கடைசி நாளிலே நியாயந் தீர்க்கப்படுவோம். மேலும் ஒரு நாளைக் குறித்தார். அதிலே அவர் தாம் நியமித்த ஒருவரைக் கொண்டு பூச்சக்கரத்திலுள்ள யாவருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுப்பார். அவரை மரித்தோரில் இருந்து எழுப்பினதினாலே அவர் அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப் பண்ணினாரென்றான். (நடபடி. ௰எ. அதி. ௩௧.) அன்றியும் மனிதர்கள் ஒரேதரம் மரிக்கிறதும் பின்பு நியாயத்தீர்ப்பு அடைகிறதுந் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. (எபிரேயர். கூ. அதி. ௨எ.) இப்படி இருக்க நீ உன் சகோதரனைக் குற்றமுள்ளவனென்று நினைக்கிறதென்ன? அல்லது உன் சகோதரனை அசட்டை பண்ணுகிறதென்ன? நாம் எல்லாருங் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிறுத்தப்படுவோமே. அந்தப்படி நம்மில் அவனவன் தன் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான். (உரோ. ௰ச. ௰, ௰௨.) அப்பொழுது அ

Digitized by Google

வர் அவனவனுடைய கிரியைகளுக்குத் த க்கதாய் அவனவனுக்குப் பதில் அளிப் பார். (உரோமர். உ. அதி. ௬.) சகல கிரியையையும் அந்தரங்கமானதெல்லா த்தையுங் கூட அது நன்மையானாலுந் தீமையானாலும் யெகோவா நியாயத்தி லேகொண்டுவருவார். (பிரசங்கியின் புஸ் தகம். ௰உ. அதி. ௰௪.) அன்றியும் மரித் தோராகிய சிறியோரையும் பெரியோ ரையும் ஆசனத்திற்கு முன்பாக நிற்கக் க ண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் வி ரிக்கப்பட்டன. ஜீவனுக்கேதுவான வே றொரு புஸ்தகமும் விரிக்கப்பட்டது அ ப்பொழுது மரித்தோர்கள் தங்கள் தங்க ள் கிரியைகளுக்குத் தக்கதாகப் புஸ்தகங் களில் எழுதப்பட்டபடியே நியாயத்தீர் ப்பு அடைந்தார்கள். (வெளிப். உ௰. அதி. ௰உ.) நாம் எல்லாரும் அவனவன் தான் நடப்பித்த நன்மைக்காகிலுந் தீமைக் காகிலுந் தக்கவைகளைச் சரீரத்திலே அ டையும்படிக்குக் கிறிஸ்துவின் நியாயா சனத்திற்கு முன்பாக வெளிப்பட வே ண்டுமே. (உ. கொரி. ரு. அதி. ௰.) மனித

Digitized by Google

ர்கள் பேசும் வீணான வார்த்தைகள் யா வையுங்குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே உத்தரவு கொடுப்பார்களென்று உங்களு க்குச் சொல்லுகிறேனென்றார். எப்படி யும் உன் வார்த்தைகளினாலே நீதிமானெ ன்றும் உன் வார்த்தைகளினாலே குற்ற வாளியென்றுந் தீர்க்கப்படுவாய். (மத். யஉ. அதி. ௩௬. ௩௭.) அப்பொழுது ந ன்மை செய்தவர்கள் சீவனை அடையும் ப டிக்குந் தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும் படிக்கும் எழுந்து புறப்படு வார்கள். (யோவா. ரு. அதி. உக.)

38. பொல்லாதவர்கள் நரகத்திலே தள் ளுண்டு என்றென்றைக்கும் ஆக்கினைப் படுவார்கள்.

பின்பு அவர் தமது இடது பக்கத்தில் நி ற்பவர்களை நோக்கி நான் பசியாய் இரு ந்தபொழுது, நீங்கள் எனக்குச் சாப்பாடு கொடுக்கவில்லை, நான் தாகமாய் இருந்த பொழுது, நீங்கள் என் தாகத்தைத் தீர்க்க வில்லை. அப்படியே அவர்கள் நித்திய வேதனையை அடையவும் நீதிமான்களோ நித்திய சீவனை அடையவும் போவார்க

Digitized by Google

ளென்றார் (மத்தே. ௨௫. அதி. ௪௧-௪௬.) உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கு உபத்திரத்தையும் உபத்திரப்படுகிற உங்களுக்கு எங்களோடேகூட ஆறுதலையும் பதிற்கொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நீதியாய் இருக்கின்றது. அப்பொழுது தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கத்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச்செலுத்துவார். அவர்கள் கத்தருடைய சன்னிதானத்தில் இருந்தும் அவருடைய வல்லமையின் மகிமையினின்றும் நீங்கி, நித்தியமான அழிவாகிய தண்டனையை அடைவார்கள். (௨. தெசலோனிக்கேயர் ௧. அதி. ௭, ௮, ௯,) பயப்படுகிறவர்களும் அவிசுவாசிகளும் அருவருக்கப்படத்தக்கவர்களுங் கொலை பாதகரும் வேசிமார்க்கருஞ் சூனியக்காரரும் விக்கிரகாராதனைக்காரருஞ் சகலவிதமான பொய்யருமானவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியுங் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்களென்

Digitized by Google

ஞர். (வெளிப்படுத்தல். ௨௧. அதி. ௮.)
விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம்பெ
ற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசி
யாதவன் ஆக்கினைக்குள்ளாக்கப்படுவான்.
(மாற்கு. ௰௬. அதி. ௰௬.) குமாரனி
டத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் நித்தி
ய சீவனையுடையவனாய் இருக்கிறான். குமா
ரனை விசுவாசியாதவன் சீவனைக் காண்ப
தில்லை. (யோவான. ௩. அதி. ௩௬.)
அவர்களுக்குப் பின்னே மூன்றாந் தூதன்
வந்து மிகுந்த சத்தத்தோடே சொன்ன
தாவது, மிருகத்தையும் அதின் சொரூ
பத்தையும் நமஸ்காரம்பண்ணித் தன்
நெற்றியிலாவது தன் கையிலேயாவது
அடையாளத்தைத் தரித்துக்கொள்ளுகிற
வன் எவனோ.-அவர்கள் படும் வாதையி
ன்புகை என்றென்றைக்கும் எழும்பும்.
இப்படி மிருகத்தையும் அதின் சொரூ
பத்தையும் நமஸ்காரம்பண்ணுகிறவர்க
ளுக்கும் அதினுடைய நாமத்தின் அ
டையாளத்தைத் தரித்துக்கொள்ளுகிறவ
னுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுத
ல் இராது. (வெளிப்படுத்தல். ௰௪. அதி.

Digitized by Google

௬, ௰௧.) இவ்விதமாக உலகத்தின்முடிவி லே நடக்கும். தேவதூதர் புறப்பட்டு நீதிமான்களில் இருந்து துன்மார்க்கரைப் பிரித்து, அழுதலும் பற்கடிப்புமுண்டாயிருக்கிற அக்கினிச்சூளையிலே போடுவார்களென்று சொன்னார். (மத்தேயு. ௰௩. அதி. ௪௯. ௫௰.) அன்றியும் ஐசுவரியமுள்ள ஒரு மனிதன் இருந்தான். அவன் இரத்தாம்பரமும் மெல்லிசான உடையுந்தரித்து அநுதினமுஞ் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். அல்லாமலும் இலாசரு என்னப்பட்ட ஒரு தரித்திரன் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்த தேகமுள்ளவனாய் அந்த ஐசுவரியவானுடைய வாசலின் அருகே கிடந்து அவனுடைய பந்தியில்இருந்து விழும் உச்சிட்டங்களாலே தன் பசியை ஆற்ற ஆசையாய் இருந்தான். அதுவுமல்லாமல் நாய்கள் வந்து அவனுடைய பருக்களை நக்கும். பின்பு அந்தத் தரித்திரனானவன் மரித்துத் தேவதூதரால் ஆபிரகாமினுடைய மடியிலே கொண்டுபோய்விடப்பட்டான் ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்

ணப்பட்டான். பின்பு அவன் நரகத்தி
லே வேதனைப்படுகிற பொழுது, தன்
கண்களை உயர்த்தித் தூரத்திலே ஆபிரகா
மையும் அவனுடைய மடியிலே இலாசரு
வையுங் கண்டு, தகப்பனாகிய ஆபிரகா
மே, இந்தச் சுவாலையிலே மிகுந்த வேத
னைப்படுகிறேன். ஆகையால் நீர் என்மே
ல் இரங்கி இலாசரு தன் விரலின் நுனியை
த் தண்ணீரிலே தோய்த்து என்னுடைய
நாவைக் குளிரப்பண்ணும்படிக்கு அவ
னை அனுப்ப வேண்டுமென்று கூப்பிட்
டான். அதற்கு ஆபிரகாஞ் சொன்னது,
மகனே, நீ பூமியிலே உயிரோடிருந்த
காலத்திலே உன் நன்மைகளைப் பெற்று
க்கொண்டாயே, இலாசருவும் அப்படி
யே தின்மைகளைப் பெற்றுக்கொண்டான்.
அதை நினைத்துக்கொள். இப்பொழுது
இவன் தேற்றப்படுகிறான். நீ வேதனைப்
படுகிறாய். அதுவுமல்லாமல் இவ்விடத்
தைக் கடந்து உங்களிடத்துக்கு வரவும்
அல்லது அவ்விடத்தைக் கடந்து எங்களி
டத்துக்கு வரவும் மனதுள்ளவர்களுக்கு
க் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களு

Digitized by Google

க்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டா க்கப்பட்டிருக்கின்றதேயென்றான்.(லூக் கா. ௰௬. அதி. ௰௯—௨௬.)

39. நல்லவர்கள் மோட்சத்திலேசேர்ந் து நித்திய பேரின்பத்தை அனுபவிப் பார்கள்.

குமாரனிடத்தில் விசுவாசமாய் இருக்கி றவன் நித்திய சீவனையுடையவனாய் இருக் கிறான். குமாரனை விசுவாசியாதவன் சீவ னைக் காண்பதில்லை. (யோவான். ௩. அதி. ௩௬.) அன்றியும் மனிதனுடைய குமார ன் தமது மகிமையோடே தம்முடைய சகல பரிசுத்த தூதருடனேயுங் கூட வரு ம் பொழுது, அவர் தமது மகிமையுள்ள பத்திராசனத்தின்மேல் வீற்றிருப்பார். அ ப்பொழுது உலகத்தார் எல்லாரும் அவ ருக்கு முன்பாகக் கூட்டப்படுவார்கள். மேய்ப்பனானவன் ஆடுகளையுங் கடாய்க ளையும்பிரிக்கிறதுபோல அவர் அவர்களை வெவ்வேறாகப் பிரித்து, ஆடுகளுக்கொப் பானவர்களைத் தமது வலது பக்கத்திலே யுங் கடாய்களுக்கொப்பானவர்களைத் த மது இடதுபக்கத்திலேயுந் நிறுத்துவா

Digitized by Google

ர். அப்பொழுது இராசாவானவர் தம்மு டைய வலது பக்கத்தில் நிற்பவர்களை நோக்கி நான் பசியாய் இருந்த பொழுது, நீங்கள் எனக்குச் சாப்பாடு கொடுத்தீர்கள். நான் தாகமாய் இருந்த பொழுது, என் தாகத்தைத் தீர்த்தீர்கள். நான் அந்நியனாய் இருந்தபொழுது, என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள். (மத்தேயு. ௨௫. அதி. ௩௪—௩௫) அப்பொழுது அவர் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பதில் அளிப்பார். இடைவிடாமல் நற்கிரியைகளைச் செய்து மகிமையையுங் கனத்தையும் அழியாமையையுந் தேடுகிறவர்களுக்கு நித்திய சீவனை அளிப்பார். (உரோமர். ௨. அதி. ௬, ௭.) இனி இவர்கள் பசியடைவதும் இல்லை, தாகமடைவதும் இல்லை, வெயிலாவது மற்றெந்த உட்டிணமாவது அவர்கள் மேற் படுவதும் இல்லை. ஆசனத்தின் மத்தியில் இருக்கிற ஆட்டுக்குட்டியானவரே அவர்களை மேய்த்து அவர்களைச் சீவதண்ணீருள்ள ஊற்றுக்களினிடத்திற்கு நடத்துவார். இவர்களுடை

Digitized by Google

ய கண்ணீர் யாவையும் கருத்தர் து டைப்பாரென்ருன். (வெளிபடுத்தின விசேஷம். எ. அதி. ௰௬, ௰எ.) பெரிது ம் உயரமுமான ஒரு பருவதத்தின் மேல் என்னை ஆவிக்குட் கொண்டுபோய்த் தே வனூற் பரமண்டலத்தில் இருந்து இறங்கி னதும் தேவனுடைய மகிமையை அ டைந்திருக்கிறதுமான எருசலேம் என்னு ம் பரிசுத்த பட்டினத்தை எனக்குக்காண் பித்தான். அதின் ஒளி அருமையான இர த்தினக் கல்லைப் போலவும் பளிங்கொளி யுள்ள ரவாக்கல்லைப்போலவும் இருந்தது. தேவாலயத்தை நான் அதிலே காணவில் லை. சருவ வல்லமையுள்ள தேவனாகிய பரா பரனும் ஆட்டுக்குட்டியுமே அதின் ஆல யம். பட்டினத்தைப் பிரகாசிப்பிக்கும் ப டிக்குச் சூரியனுஞ் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை. தேவனுடைய மகிமை யே அதை வெளிச்சமாக்கிற்று. ஆட்டு க்குட்டியே அதின் விளக்கு. உலகத்தார்க ள் அதின் ஒளியிலே நடப்பார்கள். பூமி யின் இராசாக்கள் தங்கள் மகிமையையுங் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவ

Digitized by Google

ருவார்கள். அசுசிப்படுத்துகிறதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதிற் பிரவேசியாது. ஆட்டுக்குட்டியின் சீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம்(அதிற்பிரவேசிப்பார்கள்.)(வெளி. உக.அதி.௰,௰க. உஉ-உச, உஎ.) அன்றியும் ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையுந் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்தில் இருந்து இறங்கக்கண்டேன். அவன் பசாசென்றுஞ் சாத்தானென்றுஞ் சொல்லப்பட்ட பழய பாம்பாகிய வல்ல சருப்பத்தைப் பிடித்து அதை ஆயிரம் வருஷம் அளவுங் கட்டி பாதாளத்திலே தள்ளி அடைத்து அதின் மேல் முத்திரை போட்டான். அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது உலகத்தாரை வஞ்சனை செய்யாதபடிக்கே (அப்படிச் செய்தான்.) அவற்றிற்குப் பின்பு அது கொஞ்சக் காலம் விடுதலையாக வேண்டும். அன்றியும் நான் ஆசனங்களைக் கண்டேன். அவைகளின் மேல் உளுக்கார்ந்தார்கள். நியாயத்தீர்ப்புக்கொ

Digitized by Google

டுக்கும் படி அவர்களுக்கு அளிக்கப் பட்டது. இயேசுவினுடைய சாட்சியின் நிமித்தமும் பராபரனுடைய வசனத்தின் நிமித்தமுஞ் சிரசேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும் மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது, தொழுதுகொள்ளாமலுந் தங்கள் நெற்றியிலுந் தங்கள் கையிலும் அதின் அடையாளத்தைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையுங் (கண்டேன்) அவர்கள் உயிர் அடைந்து கிறிஸ்துவுடனே கூட ஆயிரம் வருஷம் இராசரிக்கம் பண்ணினார்கள். மரித்தமற்றவர்கள் ஆயிரம் வருஷம் நிறைவேறும் அளவும் உயிர் அடைய வில்லை. இது முதலாவது உயிரோடெழுந்திருக்குதல், பின்பு மரணமும் மரித்தோர்ஸ்தலமும் அக்கினிக் கடலிலே தள்ளப் பட்டன. அதுவே இரண்டாம் மரணமாம். (வெளிப்ப. ௨௰. அதி. ௪-௫. ௰௪.) அல்லாமலும் என் நாமத்தின் நிமித்தம் வீட்டையாகிலுஞ் சகோதரரையாகிலுஞ் சகோதரிகளையாகிலுந் தகப்பனையாகிலுந் தாயையாகிலும் மனைவியையாகி

னும் பிள்ளைகளையானாலும் நிலங்களையா னாலும் விட்டவன் எவனோ அவன் நூறத்தனையாய்ப் பலன் அடைந்து நித்திய சீவனையுஞ் சுதந்தரித்துக் கொள்வான். (மத்தேயு. ௧௯. அதி. ௨௯.)

---

தேவன் சீனாய்ப் பருவதத்தில் இருந்து சொல்லிக்கொடுத்த பத்துக் கற்பனைகள்.

க. என்னைத் தவிர உனக்கு வேறு தேவர்கள் இல்லாமற் போகக்கடவது.

௨. உயர்ந்த வானத்திலும், தாழ்ந்த பூமியிலும், பூமியின் கீழ்ச் சலத்திலும் உண்டாயிருக்கிற வஸ்துகளுக்கொப்பான ஒரு சித்திர சொரூபத்தையானாலும் மற்றொரு விக்கிரகத்தையானாலும் நீ உனக்காக உண்டாக்கவும், அவைகளை நமஸ்கரிக்கவுஞ் சேவிக்கவுங் கூடாது. என்னத்தினாலென்னில் உன் தேவனாகிய யெகோவாவாய் இருக்கிற நான் எரிச்சலுள்ள

Digitized by Google

தேவனாய் இருந்து பிதாக்களுடைய அக்கிரமத்தை எனக்குப் பகைசெய்கிற பிள்ளைகளிடத்தில் மூன்று நாலு தலைமுறைபரியந்தம் விசாரித்துத் தண்டிக்கிறவராய் இருக்கிறேன். என்னிடத்தில் அன்பு கூர்ந்து என் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரந் தலைமுறைபரியந்தம் தயைசெய்கிறவராய் இருக்கிறேன்.

௩. உன் தேவனாகிய யெகோவாவுடைய நாமத்தை வீணாய் வழங்காதிருப்பாயாக. யெகோவா தம்முடைய நாமத்தை வீணாய் வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

௪. ஓய்வுநாளைப்பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக.- ஆறு நாளும் நீவேலை செய்துஉன்கிரியைகள் யாவையும் நடத்துவாயாக. ஏழாம் நாள் உன் தேவனாகிய யெகோவாவுடைய ஓய்வுநாள். கர்த்தர் வானத்தையும் பூமியையுஞ் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் ஆறுநாளைக்குள்ளே உண்டாக்கி ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்து ஓய்வுநாளை ஆசீர்வதித்து அ

Digitized by Google

தைப் பரிசுத்தமாக்கினபடியினாலே, நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன்வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற பரதேசியானாலும் அதிலே யாதொரு வேலையுஞ் செய்யக் கூடாது.

ரு. உன் தேவனாகிய யெகோவா உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் வாழ்நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையுந் தாயையுங் கனம்பண்ணுவாயாக.

சா. கொலைசெய்யாதிருப்பாயாக.

எ. விபசாரம் பண்ணாதிருப்பாயாக.

அ. களவு செய்யாதிருப்பாயாக.

கூ. பிறனுக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

ய. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக. பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையு

Digitized by Google

ம் மற்றும் பிறனுக்குள்ள யாதொன்றை
யும் இச்சியாதிருப்பாயாகவென்றார். (உ.
மோசே. உ௰. அதி. ௩—௰எ.)

---

முற்றிற்று.